விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 23 புதன்கிழமை (07.03.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 078

## இன மோதல்கள் தடுக்கப்பட வேண்டும்

### பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் வலியுறுத்து

(கொழும்பு)

இன மோதல்கள் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் சமய.சமூக மற்றும் அரசியல் தலைவர்கள் செயற்படவேண்டும் என இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் 24




கண்டியில் ஏற்பட்ட வன்முறையில்

## முஸ்லிம் இளைஞர் ஒருவர் தீயில் கருகி உயிரிழப்பு

(கண்டி)

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வன்முறைகளின் போது முஸ்லிம் இளைஞர் ஒருவர் தீயில் கருகி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் முஸ்லிம்களின் வீடுகள், பள்ளிகள் சிங்கள இளைஞர்களால் 24



அமுலாக்கப்பட்ட அவசரகால சட்டம்

## வெகுவிரைவில் முடிவுக்கு கொண்டுவர வேண்டும்

### அமெரிக்க அரசு வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டில் தற்போது அமுலாக்கப்பட்டுள்ள அவசரகால நிலைமையை வெகுவிரைவில் முடிவுக்குக் கொண்டுவருமாறு அமெரிக்கா இலங்கை அரசைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சட்டம், மனித உரிமைகள், மற்றும் சமத்துவம் 24




# நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நாடு முழுவதும்

# அவசர காலச்சட்டம்

# ஒரு வாரம் பிரகடனம்

திடீர் சுகவீனத்தால்

## 9 மாத குழந்தை வவு.வில் மரணம்

(வவுனியா)

திடீர் சுகவீனம் காரணமாக ஒன்பது மாத குழந்தை ஒன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது. 24

கண்டி மாவட்டத்தில்

## மீண்டும் பொலிஸ் ஊரடங்கு அமுல்

(கண்டி)

கண்டி நிர்வாக மாவட்டத்திற்கு உட்பட்ட சகல பகுதிகளுக்கும் மீண்டும் பொலிஸ் ஊரடங்குச் 24



## ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவிப்பு

(கொழும்பு) நாட்டின் சில பகுதிகளில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு ஒரு வார காலத்திற்கு நாடு முழுவதும் அவசரகால சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (23-ம் பக்கம் பார்க்க...)

கண்டி, திகன, மடவல பிரதேசங்களில்

## போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸ், இராணுவம் தாக்குதல்

(கண்டி)

கண்டி, திகன, மடவல ஆகிய பிரதேசங்களில் பேரினவாதிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல் மற்றும் பள்ளிவாசல்கள் உடைப்பு, கடைகள் எரிப்பு என்பவற்றைக் கண்டித்தும், முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியும் நேற்று மருதமுனையில் பூரண கடையடைப்பு, ஆர்ப்பாட்டம் என்பன நடைபெற்றன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதாகத் தெரிவித்து பொலிஸ் மற்றும் இராணுவத்தால் பலர் தாக்கப்பட்டதுடன், மோட்டார் சைக்கிள்களும் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டதுடன் பலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக் 24

## இனவாதத்தை தூண்டுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

இனவாதங்களை தூண்டுவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக நாட்டின் சில பிரதேசங்களில் இடம் 23

கொடிகாமம் தவசிகுளத்தில்

## இளைஞன் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளார்

### பொலிஸில் முறைப்பாடு



(குருமன்காடு)

கொடிகாமம் தவசிகுளத்தைச் சேர்ந்த சகாயநாதன் விஜிதரன் (றமணன்-வயது32) என்னும் பெயருடையவர் கடந்த மாதம் 22-ம் திகதி கடத்தப் 24

அவசரகால நிலை பிரகடனத்தை அடுத்து

## ஆயுதம் தாங்கிய படையினர் மற்றும் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபாடு



### கண்டிக்கு சி.ஐ.டி சிறப்புப் பிரிவும் அனுப்பி வைப்பு

(கண்டி)

இலங்கையில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் ஆயுதம் தாங்கிய பாதுகாப்புப் படையினரும் பொலிஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வன்முறையை 23

ஜோர்தான் இளவரசர் யாழ் விஜயம்

## ஜெய்ப்பூர் நிறுவனத்துக்கு உபகரணங்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்திற்கு 1.3 மில்லியன் பெறுமதியான அவயவங்கள் செய்யும் உபகரணங் 24



# உதவி புரிந்தவருக்கு தலைக்கவசத்தால் தாக்குதல்

(கரணவாய்)

விழுந்த தலைக்கவசத்தினை எடுத்துக் கொடுத்து உதவி புரிந்த குடும்பஸ்தர் ஒருவரிற்கு அதே தலைக் கவசத்தால் தாக்கி விட்டுத் தப்பித்து சென்ற இருவர் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கரணவாய் விழுந்தாலடிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரின் தலைக்கவசம் வீதியில் விழுந்துள்ளது.

அச் சமயம் வீதியூடாகப் பயணித்த குடும்பஸ்தர் ஒருவர் அதனை எடுத்து மோட்டார் சைக்கிளில் வந்தவரிடம் கொடுத்து உதவி புரிந்துள்ளார்.

ஆனால் மோட்டார் சைக்கிளில் வந்தோர் அவருக்கு நன்றி சொல்வதற்கு பதிலாக அந்த தலைக்கவசத்தினாலே உதவி புரிந்தவரிற்கு சரமாரியாக தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

தலையில் காயம் ஏற்பட்ட நபர் நெல்லியடிப் பொலிஸில் முறையிட்டுள்ளார். (ம-60)


## மணமகன் தேவை

வடமராட்சி இந்து கௌரவ 1972 மகம், அரச பணி புரியும் பெண்ணுக்கு அரச பணி அல்லது தனியார் பணி அல்லது வர்த்தகம் செய்யும் உள்நாட்டு மணமகன் தேவை.

தொடர்புக்கு:-(சகோதரன்)

0764847171

(சி-1805)



## சிறுநீரகம் தேவை

47 வயதுடைய ஒருவருக்கு O+ வகையைச் சேர்ந்த சிறுநீரகம் அவசரமாக தேவைப்படுவதால் தகுதியுடையவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-

0775669233, 0773834349

(3118)



## ஊடகத் துறையில் பணியாற்ற ஆர்வமா ?

யாழில் இயங்கி வரும் இலத்திரனியல் ஊடகத்திற்கு கீழ்வரும் பதவிகளுக்கு ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

- நிகழ்ச்சி தொகுப்பாளர்
- உதவி செய்தியாசிரியர்
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்

உங்கள் புகைப்படத்துடன் கூடிய சுயவிபரக்கோவையை எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

DDTV தொடர்புகளுக்கு

த;பெ;இ-175
3ம் மாடி
புதிய மாநகரசபை கட்டிடத்தொகுதி
கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

fb.com/ddtvsrilanka Yt.com/DDtvsrilanka DDtvnetwork@gmail.com Tp-021 222 6036

(சி-1806)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



## மரண அறிவித்தல்

### இராசரத்தினம் சோதியம்மா



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 21 - 02 - 1946 | 04 - 03 - 2018 |

கரணவாய் மத்தியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் சோதியம்மா (04.03.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி-அசுவதி தம்பதிகளின் மகளும், தம்பிப்பிள்ளை-சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகளும், இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், இராசலிங்கம் (சுவிஸ்), இராசகௌரி, இரவீந்திரராசா, இராகினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், அங்கயற்கன்னி (சுவிஸ்), கந்தையா (நடத்துநர் இலங்கை போக்குவரத்து சபை-பருத்தித்துறை), கிருஸ்ணகுமாரி, லிங்கேஸ்வரன் (பிரதேச சபை-கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமியாரும், தவமணி (சுவிஸ்), அமரர்களான நாகலிங்கம், கானலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஞானசேகரம் (சுவிஸ்), விஜயரத்தினம் (கொலண்ட்) ஆகியோரின் மைத்துனியும், நாகம்மா, சகுந்தலாதேவி, காலஞ்சென்ற தவமணிதேவியின் மைத்துனியும், தரணியா, அனுராஜ், இராகுலன் (சுவிஸ்), ரோசன் (சுவிஸ்), மதுரியா, ஆருசிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 07.03.2018 புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வாழைவளவு, கரணவாய் மத்தி, கரவெட்டி.

தகவல்:குடும்பத்தினர்
தொடர்பு:-0212056934

(சி-1802)



## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 21 - 05 - 1947 | 05 - 02 - 2018 |

### ஆறுமுகம் நடராசன் (J.P)

(இன்று 07.03.2018 31ஆம் நினைவு நாள்)

**அன்புத் தெய்வம் நம் அப்பா**

இப்புவியில் நான் ஜென்மம் எடுப்பதற்கு....
என் தந்தை, அன்னை செய்த அருந்தவப் பயன்தான்
சேயாய் நான் இருந்த நாளிலிருந்து திருமணம் புரியும் நாள் வரை
செய்தவை தான் சிறப்புக்களும், நன்மைகளும் எத்தனை எத்தனையோ என் வாழ்வில்
"பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்"-என்பர்
கை பிடித்த என் கணவன் சென்ற நாள், மாதங்கள்அரை ஆண்டை தாண்டவில்லை
என் அப்பா எமை விட்டு விண்ணுலகம் ஏன் நீங்கள் சென்றீர்கள்
உங்களையும் இழந்து விட்டு தவிக்கின்றேன் இப்புவியிலே
என் நெஞ்சில் ஈரமும் இனி இல்லை அப்பா என் கண்ணில் நீருமே இல்லை அப்பா
என் மனதில் அமைதியும் இனி இல்லை அப்பா
உங்களின் மகளாய் நான் இருந்து பட்ட பயன் பதிலுக்கு செய்ய பல பணிகள் உண்டு
நான் செய்ய சந்தர்ப்பம் ஏன் அப்பா தரவில்லை.

எனது அப்பாவின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்ட அனைவரையும் அவரின் 31ஆம் நாள் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மகள்-கஜேந்திரன் துஷ்யந்தி (லதா)-0766558612

(C-1803)

# இனஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் குரோதத்தை வளர்க்கும் தகவல்களை பகிர்வோர் மீது கடும் நடவடிக்கை

## பாதுகாப்புத் தரப்பிற்கு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

அண்மையில் அம்பாறை மற்றும் திகன ஆகிய பிரதேசங்களில் இனங்களுக்கிடையிலான சமூக ஒற்றுமையினை சீர்குலைக்கும் வகையிலும் சில வணக்கஸ்தலங்கள், வீடுகள் மற்றும் வியா பார நிலையங்கள் ஆகிய வற்றுக்கு சேதம் ஏற்படுத்தும் வகையிலும் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை இலங்கை அரசு மிக உறுதியாகவும் வன்மையாகவும் கண்டிக்கின்றது.

அத்தோடு இன ஒற்றுமைக்கு பங்கம் விளைவிக்கும் வகையிலும், குறிப்பாக முஸ்லிம் மற்றும் ஏனைய இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையிலும் சமூக ஊடகங்களின் ஊடாகவும் வலைத்தளங்களின் ஊடாகவும் தவறாக வழிநடத்தப்படக் கூடிய மற்றும் குரோதத்தை வளர்க்கக்கூடிய தகவல் பரிமாற்றங்களை பகிர்வதற்கு சிலர் எடுக்கும் முயற்சியினை அரசு மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

அத்தகைய குரோதத்தன்மை மிக்க தவறான தகவல்களைக் கண்டு ஏமாற வேண்டாமென இலங்கையின் அனைத்து பிரஜைகளிடமும் அரசு கேட்டுக் கொள்கின்றது. அதே வேளை சுமார் மூன்று தசாப்தங்களாக வன்முறைகளினால் பீடிக்கப்பட்ட ஒரு நாடும் மக்களும் என்ற வகையில் அவ்வாறான ஒரு நிலைமை மீண்டும் ஏற்படுவதிலிருந்து நாம் விலகிக் கொள்ள வேண்டும்.

நேற்று இடம்பெற்ற தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தின் போது ஜனாதிபதி மைத்திரி, பாதுகாப்புத்துறை பிரதானிகளுக்கும் பொலிஸாருக்கும் சட்டத்தினையும் ஒழுங்கையும் செயற்படுத்துமாறும், அரச அதிபர்கள் / பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட நிர்வாக அதிகாரிகள் ஒன்றிணைந்து மக்களுக்கு தீங்கை ஏற்படுத்தக் கூடிய வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராக தாமதமின்றி செயற்படுமாறும் உத்தரவிட்டார். இன மற்றும் மதங்களுக்கிடையிலான வேற்றுமையை ஏற்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் எந்தவொரு தாக்குதலுக்கு எதிராகவும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் சட்டத்தினை பக்கச்சார்பின்றி முழுமையாக அமுல்படுத்துவதற்கு அத்தரப்பினர் ஏற்கனவே செயற்பட்டு வருகின்றனர்.

குற்றச்செயல்களில் ஈடுபடும் அதேவேளை சட்டத்தையும் ஒழுங்கையும் சீர்குலைக்கும் தரப்பினருக்கு எதிராக உறுதியானதும் நிலையானதுமான நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசு ஒருபோதும் பின்வாங்காது. மக்களின் சம உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையிலும் அனைவருக்கும் அனைத்து விதமான சுதந்திர நிலைகளையும் அனுபவிக்கக்கூடிய வகையிலும் பன்முகத்தன்மையை மதித்து நிலையான சமாதானம் மிக்க முற்போக்குத் தன்மை யுடனான ஒரு தேசத்தை கட்டியெழுப்புவதற்காக அனைத்து மக்களினதும் ஒத்துழைப்பையும் பங்குபற்றலையும் இன மத பேதமின்றி பெற்றுத்தருமாறு அரசு வேண்டி நிற்கின்றது.

மதத் தலைவர்களும் அரசியல்வாதிகளும் சமூகத் தலைவர்களும் சிவில் சமூகம் மற்றும் ஊடகங்கள் ஆகியனவும் உள்வாங்கப்பட்ட இலங்கையின் அனைத்துக் குடிமக்களும் எல்லா விதமான வன்முறைகளையும் வலுவாகக் கண்டிப்பதுடன் சமாதானம், ஒற்றுமை ஊடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## தெல்தெனிய வன்முறையுடன் தொடர்புடைய 24 பேருக்கும் 19 ஆம் திகதி வரை மறியல்

(கண்டி)

கண்டி தெல்தெனியா பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வன்முறைகளின் போது கைது செய்யப்பட்ட 24 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

தெல்தெனிய நீதவான் நீதிமன்றில் நேற்றுக்காலை ஆஜர் செய்யப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## ஒவ்வொரு குடிமகனின் உயிரையும் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமை

### நாமல் எம்.பி.வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை குறித்து நாமல் ராஜபக்ஷ சில கருத்துக்களை டுவிட்டரில் வெளியிட்டுள்ளார். இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனின் உயிரையும் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமை என நாமல் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாட்டின் பல பகுதிகளிலும் ஏற்படும் வன்முறை சம்பவங்களையடுத்து சட்டத்தை அமுலாக்குவதற்கு சட்டம் ஒழுங்கு அமைச்சின் உத்தரவு வரும் வரை காத்திருக்க வேண்டியிருப்பதாகவும் பதிவிட்டுள்ளார்.

**Namal Rajapaksa** ✔
@RajapaksaNamal

Law enforcement officials waited too long to implement law and order in recent unrest in various parts of #SriLanka. It is the Government's duty to ensure the safety of every citizen of this country. #SriLanka #Kandy

தற்போதைய அரசாங்கம் திகன மற்றும் அம்பாறையில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு பொறுப்பேற்க வேண்டும்.

இந்த நிலைக்கு கடந்த அரசாங்கத்தைத் தொடர்ந்து குற்றம் சாட்டுவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

நாடு முழுவதும் சட்டம் மற்றும் ஒழுங்கை நடைமுறைப்படுத்துவதில் அரசு கவனம் எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**Namal Rajapaksa** ✔
@RajapaksaNamal

Current #SriLanka Government must take responsibility for mishandling incidents in Digana and Ampara, and allowing them to escalate. It can't continue blaming the past government for its current inaction. It must take responsibility for maintaining law & order around the country. (இ-7)

## அம்பாறையில் ஹர்த்தால் பேருந்துகள் மீது கல்வீச்சு









(கண்டி)

கண்டி மாவட்டத்தின் திகன, தெல்தெனிய உள்ளிட்ட பிரதேசங்களில் இடம்பெற்ற வன்முறைகளை அடுத்து அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம், தமிழ்ப்பிரதேசங்களில் முற்று முழுதாக வர்த்தக நிலையங்கள், அரச, தனியார் அலுவலகங்கள், பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளதுடன், எதுவித போக்குவரத்துகளும் இடம்பெறவில்லை.

அக்கரைப்பற்று பிரதேச பிரதான பாதைகளில் கறுப்புக் கொடி கட்டப்பட்டு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், பாதைகளில் பொலிஸ், இராணுவம், விசேட அதிரடிப் படை பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மருதமுனை பிரதேசத்தில் இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான இரண்டு பேருந்துக்கள் மீது கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் கண்ணாடிகள் உடைந்த நிலையில் குறித்த பேருந்துகள் கல்முனை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்து செல்லப்பட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து கல்முனையில் இருந்து மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் அக்கரைப்பற்றுக்கான பேருந்து போக்குவரத்துகள் இடம்பெறவில்லை.

மேலும், மருதமுனையில் கல்முனை- மட்டக்களப்பு நெடுஞ்சாலையில் டயர்கள் எரிக்கப்பட்டும் மரக் குற்றிகள் மற்றும் கொங்கிரீட் தூண்கள் போடப்பட்டும் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டன. இதனால் போக்குவரத்துகள் முற்றாக தடைப்பட்டிருந்ததுடன், அங்கு இளைஞர்கள் ஒன்றுதிரண்டு கண்டனப் பேரணி ஒன்றையும் நடத்தினர். (இ-7)

## போராட்டம் ஒத்திவைப்பு

(கொழும்பு)


இலங்கையின் பல்வேறு பகுதிகளில் பதற்றமான சூழ்நிலை நிலவுவதன் காரணமாக, இன்று நுகேகொடையில் கூட்டு எதிர்க்கட்சியால் முன்னெடுக்கப்பட இருந்த போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக நாமல் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். (இ-7)

**Namal Rajapaksa** ✔
@RajapaksaNamal

The Joint Opposition has decided to postpone the Nugegoda rally tomorrow due to the ongoing tense situation in various parts of #SriLanka.

## பட்டையைக் கிளப்பினார் குசல் பெரேரா

# பிரேமதாச அரங்கில் அதிகூடிய ஓட்டஎண்ணிக்கையை விரட்டியடித்து இந்தியாவை புரட்டியெடுத்தது இலங்கை



குசல் பெரேராவின் அதிரடியான அரைச்சதம் கைகொடுக்க, இந்தியாவுக்கு எதிரான முத்தரப்பு 'ரி20' தொடரின் முதல் லீக் போடடியில், இலங்கை அணி 5 விக்கெட்டுக்களால் இலகுவான வெற்றி பெற்றது. 90 ஓட்டங்கள் குவித்த தவானின் ஆட்டம் வீணானது.

இலங்கை வந்துள்ள இந்திய அணி முத்தரப்பு ரி20' தொடரில் பங்கேற்கிறது. மூன்றாவது அணியாக பங்களாதேஷ் கலந்து கொள்கிறது.

நேற்று நடந்த முதல் லீக் போட்டியில் இந்தியா-இலங்கை அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணியின் பொறுப்புத் தலைவர் சண்டிமல், களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**மூன்று தமிழர்**

இந்திய அணியில் தமிழகத்தின் சகலதுறை வீரர் விஜய் ஷங்கர் அறிமுக வாய்ப்பு பெற்றார். தவிர வாஷிங்டன் சுந்தர், விக்கெட் காப்பாளர் தினேஷ் கார்த்திக் என நேற்று களமிறங்கிய 11 பேர் கொண்ட இந்திய அணியில் 3 தமிழக வீரர்கள் இருந்தனர்.

**ரோகித் அதிர்ச்சி**

இந்திய அணிக்கு பொறுப்புத் தலைவர் ரோகித் சர்மா அதிர்ச்சி கொடுத்தார். சமீர வீசிய முதல் ஓவரின் 4 ஆவது பந்தை தூக்கி அடித்தார். இதை ஜீவன் மெண்டிஸ் கலக்கலாக பிடிக்க, ரோகித் 'டக்' அவுட்டானார். ரெய்னா (1). வந்த வேகத்தில் போல்டாக, இந்திய அணி 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்தது.

**தவான் அரைசதம்**

பின் தவான், மணிஷ் பாண்டே இணைந்தனர். தனஞ்செய பந்தை பவுண்டரிக்கு விரட்டிய தவான், பெர்னாண்டோ ஓவரில் 2 பவுண்டரி அடித்தார். ஜீவன் மெண்டிஸ் பந்தில் மணிஷ் பாண்டே, ஒரு சிக்சர் விளாசினார். தொடர்ந்து 'ருத்ர தாண்டவம்' ஆடிய தவான், பெர்னாண்டோ ஓவரில் அடுத்தடுத்து இரு சிக்சர் அடித்து, உற்சாகம் கொடுத்தார். இதனால் ஓட்டஎண்ணிக்கை வேகமாக உயர்ந்தது.

தனஞ்செய பந்தை பவுண்டரிக்கு விரட்டிய தவான், சர்வதேச 'ரி20' அரங்கில் 5ஆவது அரைச்சதம் எட்டினார். மூன்றாவது விக்கெட்டுக்காக 95 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், மணிஷ் பாணடே (37) ஆட்டமிழந்தார். பின தவானுடன் இளம் வீரர ரிஷாப் பண்ட் இணைந்தார்.

**ரிஷாப் வீண்**

தனஞ்செய வீசிய போட்டியின் 15ஆவது ஓவரில், இருவரும் தலா ஒரு சிக்சர் அடித்தனர். இதன் பின் பந்துகளை ரிஷாப் அதிகமாக வீணடித்தார். இந்த நெருக்கடியில் இருந்த தவான், 90 ஓட்டங்களுடன் (49 பந்து) ஆட்டமிழந்தார். கடைசி நேரத்தில் தினேஷ் கார்த்திக், இரண்டு பவுண்டரி அடித்து அசத்தினார். ரிஷாப் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, கடைசி 3 ஓவர்களில் 24 ஓட்டங்கள் மட்டும் எடுக்கப்பட்டன. இந்திய அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்களை எடுத்தது. தினேஷ் கார்த்திக் (13) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**ஓட்ட வள்ளல்' ஷர்துல்**

சற்று கடின இலக்கைத் விரட்டிய இலங்கை அணிக்கு, மெண்டிஸ் (11) அதிர்ச்சி கொடுத்தார். ஷர்துல் வீசிய போட்டியின் 3 ஆவது ஓவரில், குசல் பெரேரா 4 பவுண்டரி, ஒரு சிக்சர் என விளாச, 27 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. இலங்கை அணி 3.4ஆவது ஓவரில் 50 ஓட்டங்களை எட்டியது. குணதிலக (19), சண்டிமல் (14) நீடிக்கவில்லை. மறுமுனையில், 22ஆவது பந்தில் அரைச்சதம் எட்டிய பெரேரா 66 ஓட்டங்கள் எடுத்தார்.

கடைசி நேரத்தில் இணைந்த திசர பெரேரா, ஷானகா ஒன்றும் இரண்டுமாக சேர்க்க இலங்கை அணி வெற்றியை நெருங்கியது. உனத்கட் வீசிய போட்டியின் 18 ஆவது ஓவரில், 16 ஓட்டங்கள் எடுக்கப்பட வெற்றி உறுதியானது.

தாகூர் பந்தில் பெரேரா ஒரு பவுண்டரி அடிக்க, இலங்கை அணி 18.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 175 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பெரேரா (22), ஷானகா (15) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**27**

சர்வதேச 'ரி20' அரங்கில், ஒரு ஓவரில் அதிக ஓட்டங்கள் (27) விட்டுக்கொடுத்த இந்திய பந்துவீச்சாளர்களில், 2ஆவது இடம் பிடித்தார் ஷர்துல் தாகூர். முதலிடத்தில் ஸ்ரூவேர்ட் பின்னி (32 ஓட், எதிர்-மே.தீவுகள், 2016) உள்ளார்.

**75**

'ரி20' அரங்கில் 'பவர் பிளே' ஓவர்களில் (முதல் 6 ஓவர்) தனது அதிக ஓட்டங்களை (75) பதிவு செய்தது இலங்கை அணி. இதற்கு முன், 2009ல் மொகாலி போட்டியில் 73 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

சர்வதேச அளவில், மே.தீவுகள் எடுத்த 78 ஓட்டங்கள் (2016) முதலிடத்தில் உளளது.

**74**

இந்திய 'ரி20' அணியில் அறிமுகம ஆன, 74 ஆவது வீரர் ஆனார் தமிழகத்தின் விஜய் ஷங்கர். இவருக்கு பயிற்சியாளர் ரவி சாஸ்திரி, இந்திய அணிக்கான தொப்பியை வழங்கினார்.

**இது சரியா**

நேற்று போட்டி தொடங்கும் முன் இரு அணி வீரர்களும் அணி வகுத்து நின்று தேசிய கீதம் பாடினர். இலங்கை தேசிய கீதம் இசைக்கப்பட்ட போது, திடீரென நேரடி ஒளிபரப்பை நிறுத்திய டி ஸ்போர்ட்ஸ் நிறுவனம், விளம்பரங்களை ஒளிபரப்பியது. இதற்கு பலத்த எதிர்ப்பு எழுந்தது.

**சிறந்த பதிலடி**

கொழும்பு பிரேமதாச மைதானத்தில் அதிகபட்ச ஓட்டங்களை (175 ஓட்., இலங்கை) வெற்றிகரமாக விரட்டியடித்தது இதுதான் முதன் முறை. இதற்கு முன் 2015ல, இலங்கை அணிக்கு எதிராக, பாகிஸ்தான் அணி 173 ஓட்டங்கள் எடுத்து வென்றது.

---

## 'ஜென்டில்மேன் டி வில்லியர்ஸ்'

# அநாகரிகமாக நடந்த லயனுக்கு அபராதம்



டர்பன் டெஸ்டில் டி வில்லியர்ஸை நோக்கி பந்தை வீசி ஒழுங்கீனமான நடந்து கொண்ட நேதன் லயனுக்கு போட்டிக்கான ஊதியத்தில் இருந்து 15 சதவிகிதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா - அவுஸ்திரேலியா இடையிலான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டர்பனில் நடைபெற்றது.

இப்போட்டியின் 4ஆவது நாள் ஆட்டத்தின்போது 417 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென்னாபிரிக்கா 2ஆவது இன்னிங்சில் துடுப்பாட்டம் செய்து கொண்டிருந்தது.

12ஆவது ஓவரை நேதன் லயன் வீசினார். இந்த ஓவரின் கடைசி பந்தை மார்க்ரம் எதிர்கொண்டார். எதிர்முனையில் டி வில்லியர்ஸ் நின்றிருந்தார். மார்க்ரம் பந்தை லெக் சைட் அடித்தார். பந்து நேராக வோர்னர் கைக்கு சென்றது.

இந்த நேரத்தில் டி வில்லியர்ஸ் ஓட்டம் எடுக்க வேகமாக ஓடினார். அப்போது மார்க்ரம் ஓடிவர விரும்பவில்லை. இதனால் டி வில்லியர்ஸ் வேகமாக திரும்பினார். அதற்குள் பந்து நேதன் லயன் கைக்கு சென்றுவிட்டது. ரன்அவுட்டில் இருந்து தப்பிக்க டி வில்லியர்ஸ் பாய்ந்தார். அப்போது தரையில் விழுந்து க்ரீஸை அடைந்தார். அதற்குள் நாதன் லயன் ரன்அவுட் ஆக்கினார்.

அந்துடன் கையில் இருந்த பந்தை டி வில்லியர்ஸை நோக்கி எறிந்தார். அப்போது டி வில்லியர்ஸ் வயிற்றுப் பகுதிக்கு அருகில் பந்து விழுந்தது. இதை டி வில்லியர்ஸ் சற்றும் எதிர்பார்க்கவில்லை. கிரிக்கெட் ரசிகர்களும் இதை விரும்பவில்லை. அதேவேளையில் வார்னர் அளவுக்கு மீறிய வகையில் சந்தோசத்தை வெளிப்படுத்தினார்.

நேதன் லயன் நடவடிக்கை குறித்து போட்டி நடுவர் ஜெஃப் குரோவ் ஆய்வு செய்தார். அப்போது நேதன் லயன செய்தது குற்றம் என்று முடிவு செய்யப்பட்டது. அந்துடன் வீரர்கள் நன்னடத்தையில் இது முதல் நிலை என்றும் அறிவிக்கப்பட்டது. இதற்காக நேதன் லயனுக்கு போட்டிக்கான ஊதியத்தில் இருந்து 15 சதவிகிதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

நேதன் லயன், தான் செய்தது தவறு என ஒப்புக்கொண்டதாகவும், அதற்காக விதிக்கப்பட்ட அபராதத்தை ஏற்றுக்கொண்டதாகவும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.


# சுகாதார சேவைகள்

**பின்வரும் சுகாதார சேவைகள் எம்மால் வழங்கப்படும்.**

தேவையானவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்

**077 282 7569, 076 890 5324**

- வெற்றுக்காணிகள் துப்புரவு ஆக்குதல்
- மலசலகூட குழிகள் (வேசன்) துப்புரவு செய்தல்
- வீட்டு தண்ணீர் தொட்டிகளை துப்புரவு செய்தல்
- வீட்டுச் சுற்றாடலை சுத்தமாக்குதல்

(3136)



# கண்ணீர் அஞ்சலி

**பேராசிரியர் கலாநிதி**

**வல்லிபுரம் ஆறுமுகம்**

**(வாழ்நாள் பேராசிரியர்)**



எமது ஆலய தர்மகர்த்தா சபையின் முன்னாள் தலைவர் வ.ஆறுமுகம் அவர்கள் 28.02.2018 புதன்கிழமையன்று காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**தர்மகர்த்தா சபை**

உரும்பிராய் ஞானவைரவர் கோவில்

(C-1809)



# தொண்டர்கள் தேவை

## தற்கொலைகளைத் தடுப்போம்!

**உங்கள் நேரத்தில் ஒரு துளியை, முன்பின் தெரியாத இன்னொருவருக்காகச் செலவிட நீங்கள் தயாரா?**

மற்றவர்களின் துயரக் கதைகளை நாம் அக்கறையாகவும், அன்பாகவும் கேட்கிறோம். மனதில் பாரத்தைச் சுமக்கும் எவருக்கும் நாம் ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகிறோம். நாம் ஊதியம் எதையும் பெறுவதில்லை. இப் புனித சேவையில் எம்முடன் இணையுங்கள். வாரத்தில் நான்கு மணித்தியாலங்கள் மட்டுமே.

அடுத்த பயிற்சி நெறி எதிர்வரும் சனிக்கிழமை.

*மத சார்பற்ற அமைப்பு.*

**உடனே அழையுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**

**077 900 8776** (மு.ப. 9.00 - பி.ப. 1.00)

(C-1807)

# காத்தான்குடியில் கடையடைப்பு



## இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(ஏறாவூர்)

கண்டி மாவட்டத்தின் திகன, தெல்தெனிய உள்ளிட்ட பிரதேசங்களில் இடம்பெற்ற வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவுக்கும் முகமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் முக்கிய வர்த்தக நகரான காத்தான்குடியில் நேற்று செவ்வாய்க்கிழமை ஹர்த்தால்-கடையடைப்பு இடம்பெற்றது.

ஹர்த்தாலுக்கான அழைப்பு இரவோடிரவாக ஏற்கனவே விடுக்கப்பட்டிருந்த நிலையில் காத்தான்குடி பிரதான வீதியில் டயரைப் போட்டு எரித்த நபர் ஒருவரை காத்தான்குடி பொலிஸார் கைது செய்தனர்.

இதேவேளை காத்தான் குடி நகரில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட போதும் அரச அலுவலங் கள், பாடசாலைகள், உள்ளூர் மற்றும் தூர இடங்களுக்கான போக்குவரத்துச்சேவைகள் என்பன வழமை போல் இயங்கின.

பிரதேசத்தில் வன்முறைகள் ஏதும் நிகழா வண்ணம் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)


## கடை வாடகைக்கு

பலாலி வீதி உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 415 7062

(3135)


## ஓராண்டு நினைவாக...



பிறப்பு 02 – 11 – 1942

இறப்பு 07 – 03 – 2017

### அமரர் நீக்கிலார் எட்வேட்

கல்வியினால் நாமுயர கனமறிந்து கரம் தந்து
வல்லவராய் வையகத்தில் வாழவைத்த – சொல்லரிய
தெய்வநிலை உயர்ந்த தங்கமான அப்பாவே
நெய் விளக்கு ஏற்றுகிறோம் நிதம்

என்றும் நீங்கா நினைவுகளோடு வாழும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

மாவிலங்கையடி,
அல்வாய் வடமத்தி.

என்றும் நினைவோடு
குடும்பத்தினர்.

(C-1800)

## ஓராண்டு சிரார்த்த தின அஞ்சலி



தோற்றம் 04 – 03 – 1955

மறைவு 18 – 01 – 2017

### மாணிக்கம் விக்னேஸ்வரன்



தோற்றம் 15 – 10 – 1977

மறைவு 30 – 10 – 2016

### விக்னேஸ்வரன் துருபதன்

உழைப்பால் உயர்ந்து காதலாய் மணம் முடித்து
சீரும் சிறப்புமாய் இனிதே வாழ வைத்து
கனி போலும் ஆறு நற் செல்வங்களை தந்து
இனிதான வாழ்க்கையை விட்டு பிரிந்து ஓராண்டு ஆனதே

ஒரு கொடியின் மலர்களாய் இம்மண்ணில் பிறப்பெடுத்தோம்
ஒரு பொழுதும் பிரியாத அன்போடு நாமிருந்தோம்
இல் வாழ்க்கையில் முக்கனி போன்ற செல்வங்களைப் பெற்று
வாழுகையில் கொடிய நோய் கொண்டு போனதோ அண்ணா

ஓம் சாந்தி! சாந்தி !!சாந்தி !!!

கூத்தாடியம்பதி,
அல்வாய் வடமத்தி,
அல்வாய்.

குடும்பத்தினர்
மனைவி,பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

(சி-1798)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி கோமளா கருணாகரனின் அன்புத்தாயார்

### அமரர் திருமதி கனகசபை நாகேஸ்வரிதேவி

அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு
அவரது ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய நலன்புரிக்கழகம்
யா/பத்தமேனி இரத்தினேஸ்வரி
வித்தியாலயம், அச்சுவேலி.

## இராசி பலன்

**மீனம்:** எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது, கொடுக்கல்-வாங்கல்களில் மனஸ்தாபம் ஏற்படலாம், உறவினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மேடம்:** வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**இடபம்:** நினைத்த காரியங்கள் நிறைவேறி நிம்மதி காணும் நாள், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.

**மிதுனம்:** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்:** வீண்பழிகள் அகலும், புதிய திட்டங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு.

**கடகம்:** புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாரம் குறையும், தூர தேசத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம்.

| | | | |
|---|---|---|---|
| சுக் புத | | | |
| சூரி | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அச்சுவினி, ரேவதி<br>மாலை 6.56 மணிக்கு<br>விருச்-சந் | | |
| சனி | குரு,செவ் | சந் | |

**07.03.2018**

மாசி 23, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு
சஷ்டி பின்னிரவு 5.16 மணிவரை
விசாகம் பின்னிரவு 01.35 மணிவரை
சுபநேரம் 4.55-6.25 மணிவரை
இராகுகாலம் 12.25-1.55 மணிவரை
சித்தாமிர்தம்

வளவன்

**மகரம்:** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், அதிர்ஷ்ட வாய்ப்புகள் உங்களை நாடி வரலாம், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**சிம்மம்:** நண்பர்கள் சொல்லும் ஆலோசனை உங்களுக்கு நல்லதாக தெரியும், ஆதாயம் அதிகரிக்கும் நாள், சகோதர ஒற்றுமை மேலோங்கும், வியாபார விருத்தியுண்டு.

**தனுசு:** பெரிய மனிதர்களின் சந்திப்பு கிடைத்து மகிழ்வீர்கள், தூரதேசத்திலிருந்து அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


**விருச்சிகம்:** வீட்டுப்பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரலாம், தொழில் ரீதியாக எடுத்த புது முயற்சிக்கு உதவி கிடைக்கலாம், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்:** பணப்பிரச்சினைகள் சுமுகமாக அமையும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், பக்கபலமாக நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கன்னி:** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பதன் மூலம் வளம் காணும் நாள், வெளியூர்த்தொடர்புகள் அனுகூலம் தரும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

# வடமாகாணத்தில் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும்

## நாடாளுமன்றில் டக்ளஸ் வலியுறுத்து



(கொழும்பு)

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் காணப்படுகின்ற ஆங்கில ஆசியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற 23/2 நிலையியற் கட்டளை மீதான கேள்வி நேரத்திலேயே குறித்த கோரிக்கையை டக்ளஸ் தேவானந்தா முன்வைத்திருந்தார்.


யாழ்ப்பாணம் குருநகர் உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் கடந்த 2016 - 2017 மற்றும் 2018ஆம் கல்வி ஆண்டுகளில் ஆங்கில டிப்ளோமா பட்டம் பெற்று சுமார் 83 மாணவர்கள் வெளியேறியுள்ள நிலையில் இதுவரை யில் இவர்களுக்கான தொழில் வாய்ப்புகள் கிடைக்கப்பெறாத நிலைமை காணப்படுகின்றது. இந்நிலையில் இம் மாணவர்கள் வாழ்வாதாரங்கள் இன்றி மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

தற்போதும் வடக்கு மாகாணத்தில் கணிதம், விஞ்ஞானம் உள்ளடங்கலாக ஆங்கில பாட ஆசிரியர்களுக்குமான வெற்றிடங்கள் அதிகளவில் காணப்படுகின்றன.

எனவே மேற்படி பட்டதாரி மாணவர்களை ஆங்கில ஆசிரியர்களாக சேவையில் இணைத்து வடக்கு மாகாணப் பாடசாலைகளில் காணப்படுகின்ற ஆங்கில ஆசிரியர் களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமா? என்றும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார். (இ-7)

# சர்வதேசத்திடம் நீதிகோரி கையெழுத்துப் போராட்டம்







(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசை ஐ.நா பாதுகாப்புச் சபையில் பாரப்படுத்தி சர்வதேச குற்றவியல் பொறிமுறையைக் கோருகின்ற கையெழுத்துப் போராட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் சுன்னாகம் பிரதேசத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பங்கு பற்றுதலுடன் நடைபெற்றது.

தமிழ்த்தேசிய மக்கள், சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக்குழுவின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் முன்னெடுத்துச்செல்லப்படும் கையெழுத்துப் போராட்டத்தில் பொதுமக்கள் ஆர்வத்துடன் கையொப்பமிட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## யாழில் விவாத அரங்கம்

(யாழ்ப்பாணம்)

கலை இலக்கியம், நாடகம், ஓவியம், பாரம்பரிய கலைகள் மற்றும் சமூக பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப்பாதுகாக்கும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மனித விழுமியப் பண்புகளால் உயர்ந்த ஒழுக்கமான சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் பேரெண்ணத்தோடு செயற்படும் யாழ்ப்பாணப் பிரதேச கலாசார அதிகார சபை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதேச செயலக மண்டபத்தில் விவாத அரங்கத்தினை நடத்தவுள்ளது.


இலக்கிய ஈடுபாடு, மேடைப் பேச்சு, தர்க்கிக்கும் மனப்பாங்கு, உரையாடல் நயம் முதலான விடயங்களை எமது இளந்தலைமுறையினருக்கு தெளிவுபடுத்துவதும் மாணவர்களை உரியமுறையில் வழிப்படுத்துவதும் அவசியமாகும் என்பதனால் இந்நிகழ்விலே ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் விவாத அணியிலுள்ள/ பேச்சு வன்மையுள்ள ஐந்து மாணவர்களையும் துறைசார்ந்த ஆசிரியர் ஒருவரையும் தவறாது அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

## நல்லூர் கோட்டமட்ட மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியின் தெரிவுப் போட்டிகள் இன்று புதன்கிழமை மற்றும் நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (க)

## சிறுவர் சந்தை நிகழ்வு



(கரணவாய்)

கரணவாய் கிழக்கு வேதாரணியேஸ்வரா வித்தியாலயத்தில் மக்கள் வங்கியின் நெல்லியடி கிளையின் அனுசரணையுடன் சிசுஉதான சிறுவர் சந்தை அதிபர் சி.சிவகணேசன் தலைமையில் நடைபெற்றது. (இ-60)

## மீள்குடியேற்ற பகுதிகளில் பாதைகள் திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மீள்குடியேற்ற கிராம அலுவலர் பிரிவுகளில் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைக்கப்பட்ட வீதிகளை தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி, தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீயுடன் இணைந்து திறந்து வைத்தார்.

கடந்த 5 ஆம் திகதி நடைபெற்ற இந்நிகழ்வில் வயாவிளான் கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஒரு மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட குட்டியப்புலம் அம்மன் வீதியும் பலாலி தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 11.345 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட பலாலி தெற்கு வீட்டுத்திட்ட உள்ளக வீதியும் மயிலிட்டித்துறை வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 6.455 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட தாளையடி, குளன், வைரவர் கோவில் வீதியும் 7.598 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட ஈஸ்வரி, அம்மன், விநாயகர், கொட்டுப்பள்ளம் வீதியும் தையிட்டி கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 3.45 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட வள்ளுவர்புரம் வீதியும் தையிட்டி வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 0.7 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட நான்முகன் வீதியும். தையிட்டி வடக்கு மற்றும் மயிலிட்டித்துறை வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் இணைந்ததாக 6.544 மில்லியன் செலவில் புனரமைக்கப்பட்ட கலைமகள், சிவன்.வேல், காபர் வீதியும் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அரச அலு வலர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர். (இ-7)

## செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை முன்றலில் அதிபர் குமுதினி அசோக்குமார் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யு.ஆர். பிரெண்ட் பவுண்டேசன்நிறுவுநர் செல்வேள், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் மரியன்னை பேராலய பங்குத்தந்தை அன்ரன் மத்தியுஸ், யாழ். வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் ஈ. செல்வதயாளன், கோப்பாய் மத்தி கிராம உத்தியோகத்தர் க.அனுசன், கோப்பாய் பொது சுகாதார பரிசோதகர் ஞா. ஜெகதீசன், கௌரவ விருந்தினர்களாக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி உப அதிபர் சி.சேரரூபன், பழைய மாணவி யோ. விக்டோரியா ஆகியோர் கலந்து கொள்வர்.(இ

## ஹப்பன் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கடந்த ஓகஸ்ட்-2017 தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமம் கிளையில் ''ஹப் பன்'' சிறுவர் சேமிப்புக் கணக்கினைப் பேணி வந்திருக்கக் கூடியவர்களுமான மாணவர்கள் தமது ''ஹப்பன்'' சிறுவர் சேமிப்பு புத்தகத்துடன் தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமம் கிளையில் பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். மேலதிக விபரங்களுக்கு 021 205 0265 எனும் இலக்கத்திற்கு அழைக்கவும் என முகாமையாளர் அறிவித்துள்ளார்.

தேசியசேமிப்பு வங்கியின் ஹப்பன் பரிசளிப்பு விழாவுக்கு ஏற்ப இந்தப் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ


## ஸ்ரீ ஸ்ரீமான் பரம்ஜோதி பகவானின் ஜென்மதின வைபவம்

ஓம் சச்சிதானந்த பரப்பிரம்ம புருஷோத்தம பரமாத்மா



அன்பர்களே...! ஸ்ரீ பகவதி ஸமேத ஸ்ரீபகவதே நமஹ ஜெகத் ரக்ஷர்களான ஸ்ரீ பரம்ஜோதி அம்மா பகவான் உலக மக்களின் ஆன்மீக ஈடேற்றத்தின் பொருட்டு எண்ணற்ற தெய்வீக நிகழ்வுகளினூடாக மனித சைதன்யத்தில் மாபெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

அவதார புருஷரான ஸ்ரீஸ்ரீமான் கல்கி பகவானின் ஜனன தினமாகிய மார்ச் 7 ஆம் திகதியாகிய இன்றைய நாளானது ஏகத்துவ தினமாகக் (The Day of Oneness) கொண்டாடப்படுகின்றது. வழமைபோன்று இவ்வருடமும் ஸ்ரீ பகவானின் ஜனன தினமானது எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (2018.03.11) பிற்பகல் 2.00 மணியளவில் இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் (நீராவியடி, யாழ். இந்துக் கல்லூரி அருகாமையில்) நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பாதுகாபிஷேகம், திருவூஞ்சல், பக்தி சங்கீர்த்தனம், பிரார்த்தனைகள் என்பன இடம்பெறுவதோடு ''குடும்பங்களைக் கோவிலாக்கல்'' (Build Your Family-Build Srilanka) என்னும் தொனிப்பொருளில் இந்தியாவிலிருந்து உமா நாஸாஜியால் இணையத்தினூடாக நடாத்தப்படும் விசேட கூட்டு சத்சங்கமும் இடம்பெறும்.

எனவே இவ்வரிய நிகழ்வில் குடும்ப சகிதம் கலந்துகொண்டு ஸ்ரீ பரம்ஜோதி அம்மா பகவானின் அனுக் கிரஹத்தைப் பெற்றுய்யுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீ பரம்ஜோதி அம்மா பகவான் சேவா சமித்தி, யாழ்ப்பாணம்.

(இ)



World Class UK Degree @ICBT Jaffna Campus

EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency)

Apply now for New Intake 2018

ICBT HND IN BUSINESS MANAGEMENT

Finance/ Marketing/ Human Resource Management

TVEC REGISTERED

Duration
- Full Time: 18 Months (Mon-Fri)
- Part Time: 2 Years (Sat & Sun Evening)

Part Time Entry qualifications: GCE A/L + Work Experience

Cardiff Metropolitan University

BSc (Hons) BUSINESS MANAGEMENT

Offered by Cardiff Metropolitan University, UK

Duration
- 1 year

UGC RECOGNIZED

Entry Qualifications
- Higher National Diploma in Business Management or any other accepted programs.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA 580, Hospital Rd., Jaffna Tel: (+94)214 777 888 Fax: (+94)654 777 890 Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

www.icbt.lk





World Class British IT Degree Programme @ ICBT Jaffna Campus

Apply Now For New Intake 2018

EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency)

ICBT DUAL HNDs Software Engineering + Computing

Duration 2 Years

Cardiff Metropolitan University

UGC RECOGNIZED

BSc (Hons) SOFTWARE ENGINEERING

Offered by Cardiff Metropolitan University, UK

Duration 1 year

Entry Qualifications

Higher National Diploma in Computing/ IT/ Networking/ Systems Development or any other accepted programs.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

A/L O/L → HND → BSc DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA 580, Hospital Rd., Jaffna Tel: (+94)214 777 888 Fax: (+94)654 777 890 Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

www.icbt.lk


(1801)




Cardiff Metropolitan University

SRI LANKA'S MOST ACCEPTED BRITISH

MBA

MASTER OF BUSINESS ADMINISTRATION

in Jaffna

(5th Batch in Jaffna)

This MBA is aimed at those who are looking to develop their careers and at 'High Flyers' that need and understanding of all the major functions of business.

In addition to enhancing successful student's career prospects. This programme is delivered in Sri Lanka at ICBT Campus and is the identical programme conducted in UK.

Entry Qualification
- Degree in Business or related areas
- Any other Degree or Equivalent + 2 Years Working experience.
- DBF + 2 Years of Banking service
- Any other part qualification with not less than 5 Years of Managerial level work experience would be considered.

- Classes only on Sundays
- Hurry up to claim early-bird discount

REGISTRATION NOW ON FOR MARCH INTAKE - 2018

Teaching Excellence Framework TEF Silver

Cardiff Metropolitan University has been awarded the Silver Teaching Excellence Framework (TEF) rating in the recent results published by the Higher Education Funding Council for England (HEFCE) - UK.

ICBT CAMPUS JAFFNA | EQAA | National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013

More Information 0770 746 553 merojan@icbtcampus.edu.lk





World Class British Degree @ICBT Jaffna Campus

Apply now for New Intake 2018

EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency)

ICBT HND QUANTITY SURVEYING

TVEC REGISTERED

» Entry Qualifications
- G.C.E. A/L or Equivalent
- Certificate in related field

» Duration: 2 Years

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

BIRMINGHAM CITY University

Accredited by RICS

BSc (Hons) Quantity Surveying

» Entry Qualifications
- HND or Equivalent Qualifications Acceptable to the University
- Progression Routes for NDT, NDES(Civil), C&G (Civil), NCT(Civil / QS)

UGC RECOGNIZED

» Duration: 1 Year

Week End Part Time Classes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA 580, Hospital Rd., Jaffna Tel: (+94)214 777 888 Fax: (+94)654 777 890 Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

# இரணைமடு குளத்தின் நீரைப் பயன்படுத்தி 900 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை

## ஆலோசனைக் கூட்டத்தில் நேற்று தீர்மானம்





(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தில் இருக்கின்ற நீரைப்பயன்படுத்தி இவ்வாண்டு 900 ஏக்கரில் சிறுபோகநெற்செய்கை மேற்கொள்வதென ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கை தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி கோவிந்தன் கடைச் சந்தியில் அமைந்துள்ள இரணைமடுத் திட்ட முகாமைத்துவ அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன் போதே மேற்கண்டவாறு தீர்மானம் எடுக்கப்பட்டது. நிலவுகின்ற வறட்சி காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாரிய மற்றும் நடுத்தர சிறிய குளங்களின் நீர்மட்டம் குறைவாகக் காணப்படுவதுடன், சில குளங்கள் நீர் வற்றிக் காணப்படுகின்றன.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக்குளம், புதுமுறிப்புக்குளம் ஆகியவற்றிலிருக்கின்ற நீரைப் பயன்படுத்தி குறிப்பிட்ட நிலப் பகுதிகளில் சிறுபோகச் நெற் செய்கை மேற்கொள்ளக் கூடிய நிலை காணப்படுகின்றது.

36அடி நீர்கொள்ளள வைக் கொண்ட கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் 16 அடி மூன்று அங்குலமாகக் காணப்படுகின்றது.

இதில் பத்து அடி வரையான தண்ணீரை குளத்தின் பாதுகாப்புக்கருதி தேக்கி வைப்பது எனவும் ஏனைய நீரைப்பயன்படுத்தி சிறு போக நெற் செய்கை மேற்கொள்வதாக தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

இரணைமடு விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் நீர்ப்பாசனத்திணைக்கள அதிகாரிகள் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர் இக்கூட்டத்தில் நீரைச் சிக்கனமாகவும் நேர்த்தியாகவும் பயன்படுத்தி வெற்றிகரமான விவசாயச்செய்கையை மேற்கொள்வதென்றும் அதன்படி குளத்தின் நீரைக்கொண்டு 900 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்ச்செய்கை மேற்கொள்வதென்றும் குறித்த பயிர்ச் செய்கையை இரணைமடு குளத்தின் கீழான பன்னங்கண்டி கமக்கார அமைப்பிற்குட்பட்ட பயிர்ச் செய்கை நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பான இறுதி முடிவு அடுத்த வாரமளவில் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் எடுக்கப்படவுள்ளதாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (2-315)




# ஏழாவது பொலிஸ் நிலையம் அக்கராயன்குளத்தில் திறக்கப்படும்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 7 ஆவது பொலிஸ் நிலையம் அக்கராயன் குளப் பகுதியில் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு வடக்கு மாகாண பொலிஸ் அத்தியட்சகர் பாலித பெர்னாண்டோ பிரதம விருந்தினராக கலந்து கொண்டு திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வின் போது, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்ன உட்பட பல்வேறு தரங்களில் உள்ள பொலிஸ் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் பொறுப்பதிகாரிகள், பொலிசார் பொதுமக்கள் நல்லுறவு விழிப்புணர்வு குழு, உறுப்பினர்கள், கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளார்கள்.

இந்த பொலிஸ் நிலையத்தின் முதலாவது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக தற்போது வட்டக்கச்சி பொலிஸ் சோதனைச்சாவடி பொலிஸ் பொறுப்பதிகாரியாக தற்போது கடமையாற்றி வரும் எம்.எம்.டி.என். சதுரங்கா கடமையைப் பெறுப்பேற்கவுள்ளார்.

•தற்போது அக்கராயன் குளப் பகுதியில் பொலிஸ் சோதனைச்சாவடி ஒன்று அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. (2-15)

# ஐ.நா.சிறப்புப் பிரதிநிதிகள் முகமாலைக்கு நேற்று விஜயம்





(பரந்தன்)

நிலக்கண்ணிவெடி அகற்றுவதற்கு பொறுப்பான ஐ.நாவின் சிறப்புப் பிரதிநிதியும் ஜோர்தான் நாட்டின் இளவரசருமான மிரேந் அல்குஷேன் கிளி நொச்சி முகமாலைப் பகுதிக்கு விஜயம் மேற்க் கொண்டு கண்ணிவெடி அகற்றும் பிரதேசங்களை நேரில் பார்வை யிட்டார்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் குறித்த பகுதிகளுக்கு விஜயம் செய்த அவர் பணிகளை முன்னெடுக்கின்ற அதிகாரிகளுடன் நிலைமைகள் தொடர்பில் உரையாடியதுடன் கண்ணிவெடி அகற்றுகின்ற பகுதிகளையும் நேரில் பார்வையிட்டார்.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,

கடந்த இரண்டு நாட்களாக கண்ணிவெடி அகற்றும் பணிநடைபெறும் இடங்களை பார்வையிட்டு வருவதாகவும் இது தொடர்பில் இலங்கை பிரதமர் மற்றும் அமைச்சர்கள் உயர் அதிகாரிகளுடன் பேசியதாகவும் இதற்கு அவர்கள் சிறந்த ஒத்துழைப்பை வழங்கினார்கள். கண்ணிவெடிகள் காணப்படும் பகுதிகள் குறைந்த காலத்திற்குள் அகற்றப்படும் என நம்புவதுடன் அப் பகுதிகளுக்கு மக்கள் மீள்குடியேற்றப்படுவார்கள் எனவும் தெரிவித்தார். (2-312-315)

# முசலி பிரதேச செயலாளர், ஊழியர் வாகன விபத்தில் காயம்

(பனிக்கன்குளம்)

முசலியில் இடம்பெற்ற விபத்தில் முசலி பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்த குமார் மற்றும் ஊழியர் ஒருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக மன்னார் பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

நேற்று முன்தின்ம் திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் சிலாவத்துறை- மறிச்சிக்கட்டி செல்லும் பிரதான வீதிக்கு அருகாமையில் பிரதேச செயலாளர் கே.எஸ். வசந்தகுமார் மற்றும் சில ஊழியர்கள் உடற் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

இதன்போது குறித்த வீதியூடாக அதி வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து உடற் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள் மீது மோதியுள்ளது.

இதன்போது முசலி பிரதேச செயலாளர் மற்றும் ஊழியர் ஒருவரும் காயமடைந்த நிலையில் உடனடியாக சிலாவத்துறை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பிரதேச செயலாளர் மற்றும் ஊழியர் ஆகிய இருவரும் மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகி ன்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை சிலாபத்துறை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# சாராயக்கடைகளை மூடுமாறுகோரி வவுனியாவில் நாளை கண்டனப் போராட்டம்

## அனைவரையும் உரிமையுடன் போராட அழைப்பு

(குருமன்காடு)

சாராயக்கடைகளை மூடுமாறு கோரி கண்டனப் போராட்டம் ஒன்று நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா பிரதேச செயலகம் முன்பாக நடைபெறவுள்ளது.

அனைத்துலகப் பெண்கள் தினத்தில் நடை பெறவுள்ள இக்கண்டன போராட்டத்தை சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளதுடன் உழைக்கும் பெண்கள் விடுதலை முன்னணி அமைப்பும் இணைந்து நடத்தவுள்ளது.

இக்கண்டன போராட்டம் தொடர்பாக சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பினர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

வடக்கு கிழக்கு மக்களாகிய எம் மீது யுத்தம் திணிக்கப்பட்டு சகல அடக்கு முறைகளுக்கும் ஆளாகி எமது அடிப்படைப் பொருளாதார கட்டமைப்பை இழந்து தெருவில் விடப்பட்டுள்ளோம். இந்த யுத்தத்தில் முற்று முழுதாக பாதிக்கப்பட்டது எமது பெண் சமூகமே.

இந் நிலையில் கடந்த 9 வருடங்களில் வேலை வாய்ப்பு இன்மை அதிகரித்த வாழ்க்கைச் சுமை என்பவற்றினால் ஏற்பட்டு வரும் கடன் சுமையினால் பெண்கள் அல்லலுற்றுக் கொண்டிருக்கிறார்கள். லீசிங், நாள் மற்றும் கிழமைக் கடன்கள் ,குழுக்கடன் திட்டங்கள் , பிரமிட் வியாபாரமுறை என எம் அடிப்படைப் பொருளாதாரத்தையே ஆட்டங்காண வைக்கின்ற மக்கள் விரோத திட்டங்கள் ஒருபுறம் சாராய (பார்) மதுக்கடை, போத்தல் கள்ளுப் பாவனையும், மாவா, கஞ்சா, ஹெரோயின் போன்ற போதை பொருட்கள் பாவனைகள் அதிகரிப்பு மறுபுறம் என பெண்களின் குடும்ப வாழ்விற்கும் சுய பாதுகாப்புக்கும் உத்தரவாதம் இல்லாமல் செய்திருப்பது மட்டுமல்லாமல் உழைக்கும் மக்களின் வருமானத்தில் பெரும் பகுதியை மதுக்கடைகளினாலேயே சுரண்டப்படுகின்றது.

மது மற்றும் போதைப் பொருள் பாவனைகளின் அதிகரிப்பானது எமது பொருளாதார மற்றும் கல்விகட்டமைப்புக்களை அழிப்பது மட்டுமின்றி சமூகத்தில் பெண்களுக்கெதிரான வன்முறை சிறுவர் துஸ்பிரயோகம், பாலியல் வல்லுறவு, கொலை, கொள்ளை, இலஞ்சம் மற்றும் வீதி விபத்துக்கள் என பாரிய குற்றச் செயல்களுக்கு பிரதான காரணியாக மாறியிருக்கின்றது.

சாராய (பார்) மதுக்கடை, கள்ளுக்கடைகளை இழுத்து எமது சமூகத்தின் நல்வாழ்விற்காகவும் இந் நாளில் ஒன்றிணைந்து குரல் கொடுக்கவும் போராடவும் சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பாகிய நாம் உழைக்கும் பெண்கள் விடுதலை முன்னணி உடன் இணைந்து கண்டன போராட்டம் ஒன்றை நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா பிரதேச செயலகம் முன்பாக ஏற்பாடு செய்திருக்கின்றோம்.

எம்முடன் இணைந்து கொள்ளுமாறு அனைத்து மகளீர் பெண்கள் அமைப்புக்களையும், அனைத்து சமூக அமைப்புக்களையும் மக்களையும் உரிமையுடன் போராட அழைக்கின்றோம்.

இவற்றை எம் சமூகத்திலிருந்து முழுமையாக அகற்றும் வரை தொடர் போராட்டங்களை முன்னெடுக்க எம்முடன் இணைந்து செயற்படுமாறும் அழைக்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)





முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தலும் சத்திரசிகிச்சை விடுதி, வைத்தியர் விடுதி என்பவற்றின் திறப்பு விழாவும் நேற்று புதுக்குடியிருப்பில் நடைபெற்றது. (படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)





முல்லைத்தீவு மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வெளிநோயாளர் பிரிவு கட்டடத் தொகுதி நேற்று பிற்பகல் 2 மணியளவில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனினால் திறந்து வைக்கப்பட்டது. (படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

# காட்டு யானைகளின் தொல்லை அதிகரிப்பால் கிராமங்களிலுள்ள மக்கள் வெளியேறும் அவலநிலை

## வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தட்டையர் மலை, முத்தையன்கட்டு, ஒட்டுசுட்டான் ஆகிய இடங்களில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதுடன் இக்கிராமங்களிலிருந்து மக்கள் வெளியேறும் அவலநிலை காணப்படுவதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த வாரம் நடைபெற்று முடிந்த முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான கமலேஸ்வரன், ஆ.புவனேஸ்வரன் ஆகியோரால் மேற்படி கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அதாவது, குறித்த பகுதிகளில் யானைவேலிகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதேவேளை வடக்கு மாகாணசபை உறுப்பினர் கமலேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில், முத்தையன்கட்டு, தட்டையர்மலை ஆகிய இடங்களுக்கு யானைவேலிகளை அமைப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு அதற்கான பொருட்கள்கொண்டு வரப்பட்டு பின்னர் அதை மீளக்கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், இந்த மக்களையும் விவசாய நடவடிக்கைகளையும் பாதுகாக்க உரிய திணைக்களங்கள் நடடிவக்கை எடுக்க வேண்டுமென தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஒட்டுசுட்டான் நகர்ப்பகுதியில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாகவும் நகர்ப்பகுதியில் வீடுகளையும் சேதமாக்கி வருவதாகவும் இதனால் பல பிரதேசங்களில் இருந்து மக்கள் வேறு இடங்களுக்கு இடம் பெயருகின்ற நிலை காணப்படுவதாகவும்வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த துறைசார் அதிகாரிகள், குறித்த பகுதிகளில் யானை வேலிகளை அமைப்பதற்கு வனஜீவராசிகள் திணைக்களத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பொது அமைப்பொன்றுக்கு இந்த வேலைகள் வழங்கப்பட்டிருந்தன.

இதில் குறிப்பிட்ட சில பகுதிகள் வனவளத் திணைக்களத்திற்கு சொந்தமான பகுதிகளாக இருப்பதுடன், அங்கே காணப்படுகின்ற மரங்களை வெட்டுவதற்கு வனவளத் திணைக்களத்தின் அனுமதி பெறப்படவேண்டும். அதற்கான அனுமதி பெறப்படாமையினால் இந்த நிதியை திரும்ப விடாமல் வேறொரு பிரதேசத்தில் இந்த வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)



# நோயற்ற வாழ்வை வாழ்வதற்கு எம்மை தயார்படுத்திக்கொள்வோம்

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

சுத்தம் சுகாதாரத்துடன் கூடிய நோயற்ற வாழ்வை வாழ்வதற்கு நாம் எம்மை தயாராக்கிக் கொள்ள வேண்டும். நாம் பின்பற்ற வேண்டிய அடிப்படை சுகாதாரப் பழக்க வழக்கங்களில் இருந்து மீறுகின்ற போதே நோய்க்கிருமிகள், தொற்று மற்றும் தொற்றா நோய்க் கிருமிகள் என எமது உடல்களில் தாக்கத்தை விளைவிக்க முனைகின்றன என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தயசாலையாக தரமுயர்த்தலும் ஆதார சிகிச்சை விடுதி, வைத்தியர்கள் விடுதி திறப்புவிழாவும் நேற்றுக் காலை 9.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்துள்ளார். அவர் தனது உரையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு அடுத்தபடியாக பெரிய அளவிலான ஆதார வைத்தியசாலை புதுக்குடியிருப்பிலேயே இருக்கின்றது. இங்கு சத்திரசிகிச்சை விடுதி, வைத்தியர்கள் விடுதி ஆகியன இல்லாதது பெருங்குறையாக இருந்தது. அதன் காரணமாகவே இப்புதிய கட்டடம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டிய நோயாளர்களுக்கு கால், கைகளில் வெட்டுக் காயங்கள், விபத்தில் சிக்கியவர்களுக்கான முதலுதவிச் சிகிச்சைகள் ஆகியவற்றை முதற்கண் வழங்கக்கூடிய வகையிலேயே இந்த சத்திரசிகிச்சை விடுதி அமைக்கப்பட்டுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்ட இந்த 2 மாடிக்கட்டடத்தில் lift வசதிகள் இல்லாத போதும் சாய்தள அமைப்பு முறையினாலான (Ramp) படிகள் அமைக்கப்பட்டிருப்பதால் நோயாளர்களை கொண்டு செல்வதற்கு இது இலகுவாக இருக்கும். வைத்திய அதிகாரிகள் தங்கியிருந்து மருத்துவ நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வசதியாக 10 அறைகளைக் கொண்ட வைத்தியர்களுக்கான தங்குமிட வசதிகள் இப்புதிய கட்டடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எம்மிடையே ஒரு பிழையான நோக்கு உண்டு. அதாவது எமது தனிப்பட்ட சொத்துக்களாயின் அவற்றை மிகுந்த கவனத்துடன் எதுவித பாதிப்புக்களும் இன்றி பயன்படுத்துவோம்.

ஆனால் அவை அரச சொத்துக்களாக இருப்பின் எதுவித கவனமும் இன்றி கண்ட இடத்தில் எச்சில் உமிழ்வது, குப்பை கூளங்களைக் கண்ட இடமெல்லாம் வீசி எறிவது, மலசலகூடங்களை ஒழுங்காகப் பயன்படுத்தாது இருப்பது, அவற்றை முறையாக நீரூற்றி சுத்தப்படுத்தாது செல்வது ஆகிய பழக்கங்கள் எம்முள் எப்படியோ உள்நுழைந்துவிட்டன. இவை கட்டாயம் சீர் செய்யப்பட வேண்டியவை என்றார். (2)

# இரணைமடுக்குளத்தில் நன்னீர் மீன்பிடியை மேம்படுத்த மீன்குஞ்சுகள் விடப்படவில்லை

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தில் நன்னீர் மீன்பிடியை வாழ்வாதாரமாகக் கொண்ட மீனவர்களின் வருமானத்தை ஈட்டக்கூடிய வகையில் இம்முறை மீன் குஞ்சுகள் எவையும் குளத்தில் விடப்படவில்லை என மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப்பெரிய நீர்ப்பாசனக்குளமான இரணைமடுக் குளத்தின் கீழ் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் நேரடியாக விவசாயச் செய்கையை மேற்கொண்டு வருவதுடன், 300 இற்கும் மேற்பட்ட மீனவக்குடும்பங்கள் இக்குளத்தில் நன்னீர் மீன்பிடியை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்தாண்டுகளில் முன்னெடுக்கப்பட்ட குளத்தின் புனரமைப்புப் பணிகள், வரட்சி என்பவற்றால் நன்னீர் மீன்பிடி முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது எனத்தெரிவித்த மீனவர்கள் ஏனைய குளங்களில் மீன் குஞ்சுகள் விடப்பட்ட போதும், இரணைமடுக்குளத்தில் இவ்வாண்டுக்கான தொழில்களை மேம்படுத்தும் வகையில் விடப்படவில்லை. ஏற்கனவே வரட்சியால் மீனினம் குறைவடைந்துள்ளது.

இம்முறை மீன்குஞ்சு விடப்படாமையினால் மீன் பெருக்கம் இல்லாதிருப்பதாகவும் மீனவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் யாருக்காக செயற்படப் போகின்றது?

## உறவுகள் கேள்வி

(பனிக்கன்குளம்)

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள அலுவலகத்தை தாம் புறக்கணித்த நிலையில் யாருக்காக அலுவலகம் செயற்பட போகின்றது என முல்லைத்தீவில் காணாமற் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.


அத்தோடு சர்வதேச மகளிர் தினத்தன்று பாரிய கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட போவதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

தமது உறவுகளை மீட்டுத் தருமாறு வலியுறுத்தி வடக்கு,கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின்உறவுகள்மேற்கொண்டு வரும் போராட்டம் எதிர்வரும் எட்டாம் திகதி ஓராண்டு நிறைவினை பூர்த்தி செய்யவுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள அலுவலகம் தொடர்பிலும் அவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.(2-281)

# அரிப்பு-சிலாபத்துறை வீதியில் பயணித்த ஆட்டோ தீப்பற்றியது



(பனிக்கன்குளம்)

முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அரிப்பு-சிலாபத்துறை பிரதான வீதி அல்லிராணிக்கோட்டைக்கு முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை காலை சென்று கொண்டிருந்த ஆட்டோ ஒன்று திடீர் என தீப்பற்றி எரிந்துள்ளது.

ஆட்டோ உரிமையாளர் செலுத்திக் கொண்டு சென்ற போதே தீப்பற்றியதாக தெரிய வருகின்றது.

உடனடியாக குறித்த ஆட்டோவை செலுத்திச் சென்றவர் வெளியே குதித்து தப்பியுள்ளார். எனினும் ஆட்டோ முழுமையாக தீயில் எரிந்து நாசமாகியது.

சம்பவ இடத்திற்கு விரைந்த சிலாபத்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (2-281)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சர்க்கரை பாதாமி அல்லது குமழிப்பழம்/ அவ்ரிகொட் பழம்

Botanical Name – Prunus armeaiaca

Family – Rosaceae

English – Apricot

அதிசயச் சத்து நிறைந்த பழங்கள் ஆகும். இதில் அடங்கியுள்ள நார்ச்சத்துக் கள், உயிர்ச்சத்து A,C என் பன அதிகமாகக் காணப்ப டுகின்றது. இதன் தாயகம் அமெரிக்கா ஆகும். ஆனால் சீனாவில் பயிரிடப்படுகின் றது. இந்தியா, இலங்கை யில் பயிரிடக் கூடியது. சர்க்கரை பாதாமி யாழ்ப்பா ணத்தில் வளரக்கூடிய மண் வளத்தைக் கொண்டுள்ளது.

சிறிய மரவகையைச் சேர்ந்தது. விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். விதைகளிலிருந்து முளை யம் வந்ததும் பாத்திகளில் ஒட்டு வளர்க்கலாம். நட்டு 3 வருடங்களில் நன்கு காய்த்து பழங்களைத் தரக் கூடியது. கொத்துக் கொத்தாக பழங்கள் காய்த்து இருக்கும்.

இதன் பழங்களில் காண ப்படும் நார்ச்சத்தானது (Fiber) மலக்கட்டை நீக்கக் கூடியது. இதில் காணப்படும் dietary fiber ஆனது உண வுக் கால்வாய்த்தொகுதியை பாதுகாக்கக் கூடியதுமாகும். பழங்களில் காணப்படும் பொட்டாசியம் ஆனது இரு தய தொழிற்பாட்டை சீராக்கக் கூடியது. அத்துடன் இரத்த அமுக்கத்தையும் சீராக வைத் திருக்க உதவக்கூடியது.



சர்க்கரை பாதாமி பழத் தில் உயிர்சத்து A. உயிர் சத்து C. செம்புச்சத்து. பொட் டாசியம். நார்ச்சத்து. புரதச் சத்து. உயிர்சத்து B1,B6, B12 ஆகியவையும் காணப் படுகின்றது. இதன் பழங்கள் பழுக்கும் போது மென்மை யான (Velvet) தும், மழு மழுப்பானதுமாகக் காணப்ப டும். நன்றாகப் பழுத்த பழங் கள் சிவப்பாக இருக்கும். இப் பழங்கள் இரத்தத்திலுள்ள கெட்ட கொலஸ்ரோலை குறை க்கக்கூடியது.

முக்கியமாக இதன் பழங் களை சாப்பிட்டு கொண்டுவர பித்தப்பையிலுள்ள கற்களைக் கரைக்கக்கூடியது. மேலும் கோடை காலத்திற்கு உகந்த பழங்களாகும். இதன் பழங் கள் தாராளமாகக் கிடைக் கும் போது ஜாம் (Jam) தயா ரித்து சாப்பிட்டுவர நோய் எதி ர்ப்பு சக்தியும் அதிகரிக்கும். அதேநேரம் புற்றுநோய் வராமலும் தடுக்கக் கூடியது.

இதன் பழங்களை முகத் தில் பூசிக்கொண்டுவர முகத் தில் சுருக்கங்கள் நீங்கி தோலை மிருதுவாக பேண உதவும். முலைவாழைப்ப ழம் 1, குமழிப்பழம் / சர்க் கரை பாதாமி 4 உம் 1/2 கப் தயிரும் கலந்து 1 மணி நேரம் ஊறவைத்து வாரத்தில் 3 நாட்கள் சாப்பிட்டுவர நோய் எதிர்ப்புசக்தி அதிகரிக்கும். கல அழிவுகளையும் தடுக் கக்கூடியது.

கர்ப்பிணித்தாய் மார்க ளுக்கு ஒரு சிறந்த போசாக் கான சத்துக்கள் நிறைந்த பழமாகும். பழங்கள் கிடைக் கும் போது தினமும் ஒரு பழமாவது சாப்பிடலாம்.

இதன் உலர்ந்த பழங்க ளும் நிறைந்த மருத்துவ குணங்கள் கொண்டவை. இதன் உலர்ந்த பழங்கள் அதிகரித்த எடையை குறைக் கக்கூடியது. உலர்ந்த பழங்க ளில் இரும்புச்சத்தும் அதிக மாகக் காணப்படும். ஆகவே இரத்த சோகை உள்ள நிலை மைகளில் இதன் உலர்ந்த பழ ங்களைப் பயன்படுத்தலாம்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

அமெரிக்கா நாட்டுக்கு ரிய பழமாக இருந்தாலும். இலங்கையில் மாத்தறை, குருநாகல், யாழ்ப்பாணப் பகுதியில் இன்றும் கிராம ங்களில் மரங்களை நட்டு இதன் பழங்களைப் பயன் படுத்தி வருகிறார்கள். சித்த மருத்துவத்தில் சர்க்கரை பாதாமி எனும் இப் பழம் வாதுமைற்கு ஈடான சத்துக் களைக் கொண்டுள்ளதாக கருதப்பட்டு பயன்படுத்தப் படுகின்றது.

## சீரகம்/போசன குடாரி

Botanical Name: Cuminum Cyminum

Family:Apiaceae

Engl:Cumin

Sinh:Suduru



இக் குடும்பத்தைச் சேர் ந்த தாவரங்களில் 200 பேரி னங்களும் 2 ஆயிரத்து 900 சிற்றினங்களும் காணப்ப டும். பருவச் சிறு செடியாகும். இலைகளில் எண்ணெய் சுரப்பி உள்ளதால் நறும ணம் உடையதாக இருக்கின் றது. மென்மையான இலை கள் காணப்படும். தண்டின் கிளைகளின் நுனியில் மஞ் சரி காணப்படும். இருபால் மலர்கள் ஒழுங் கான மலர் ஆரச்சமச்சீர் கீழ் மட்ட சூல கம் (Epig ynous) உடைய மலர்கள் மஞ்சள் நிறமாகக் காணப்படும்.

நிலத்தை புல்லிவட்டம் கொண்ட வெடிகனி. இது இரண்டு. ஒருவிதையுடைய பகுதிகளாகப் பிரிகின்றது. ஒவ் வொரு பகுதிக்கும் மெரி காப் (Mericar) எனப்பெயர்.

இரண்டு மெரிக்கார்ப்புக் களும் நீண்ட கார் போ ஃ போர் (Carpobhones) என்ற கலக காம்புடன் இணை யப் பெற்று தொடங்கிய நிலை யிலுள்ளன. கனியின் வெளிப் புறத்தில் உயர்ப் போக்கில் ஓடும் மேடுகள் காணப்படு கின்றன. மேடுகளுக்கு அடு த்து 5 பள்ளங்கள் உள்ளன. இதில் எண்ணெய் சுரப்பிகள் உள்ளன. குளிரான பிரதேசங் களிலேயே இதன் பரம்பல் கூடுதலாகக் காணப்படும்.

விதைகள் மூலம் இன விரு த்தி செய்யலாம். தாவர வியல் அறிஞர்கள் சீரகத்தின் தாய கம் பெர்ஷியா எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

மருத்துவ குணங்கள்

✹ சீரகத்தின் சிறப்பான மரு த்துவகுணம் உடல் செரி மான த்திற்கு உதவுவதுதான். அத னால்தான் போசனகு டாரி என அமைக்கப்படுகின் றது. அஜீரணம் காரணமாக ஏற்ப டுகின்ற குறைபாடுக ளையும் அகற்றும்.

✹ உடல் சூட்டை தணிக் கக் கூடியது. உடலில் சேரும் வாயுக் கோளாறுகளையும் சீர் செய்கிறது. உடல் சருமத்தில் எரிச்சல் தோன்றினாலும் சீர கத்தை அரைத்துப் பூச உடனே தணியும்.

✹ சீரகத்தை அரைத்து தேனும் உப்பும் வெண்ணெ யும் சேர்த்து ஒன்று கலந்து தேள் கொட்டிய விஷம் இற ங்கி கடுகடுப்பு நீங்கும்.

✹ கர்ப்பகாலத்தின் தொட க்கத்தில் பெண்களுக்கு ஏற்ப டும் வாந்திக்கு சீரகத்துடன் எலுமிச்சைச்சாறு சேர்த்துக் கொடுக்க வாந்தி நிற்கும்.

✹ பிரசவத்திற்கு பின்னர் தாய்க்கு தாய்ப்பால் நன்றாக சுரக்க சீரகமும் மிளகும் சேர் த்துப் பக்குவம் செய்த இரசத்தை உணவோடு அடிக்கடி சேர்த் துக் கொடுக்கவேண்டும்.

✹ சீரகத்தை நன்கு இடி த்து பொடித்து கண்ணாடிக் குப்பியில் வைத்துக் கொண்டு "4 தொடக்கம் 25 கிராம்" வரை தேனில் கலந்து காலை, மாலை கொடுக்க சீதபேதம், அஜீரண பேதி, பித்த சம்பந்த மான நோய்கள் தணியும்.

✹ எலுமிச்சைச்சாறு, இஞ் சிச்சாறு ஆகியவற்றில் ஒவ் வொன்றிலும் சீரகத்தை மூழ்கும் படி பல தடவைகள் ஊறவைத்து உலர்த்தி எடு த்து பொடித்து அரித்து வைத் துக் கொள்ளவும்.

மூலக்கடுப்பு, வயிற்று வலி, கண்ணெரிச்சல், அஜீரணம் ஆகியவற்றுக்கு ஒரு தேக்கரண் டியளவு எடுத்து தேனில் கல ந்து காலை, மாலை கொடு த்து வர இதற்கு தீர்வும் நல்ல பயனும் கிடைக்கும்.


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 32<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்: B.COM, HNDA/அரச தொழில்<br>தொ.இ: B/7584 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 31<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/6783 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 28 செவ் 4 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: A/L/அரச தொழில்<br>தொ.இ: B/7587 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 11 செவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/6786 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 29 செவ் 2 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: O/L/வியாபாரம்<br>தொ.இ: B/7588 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/6789 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 86 செவ் 4 இல்<br>உயரம்: 167cm<br>தகைமை/தொழில்: A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/7589 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 45<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6790 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# அமைதி சீர்குலைக்கப்பட்டு அழிவுகள் ஏற்படும் போது அதிகாரத்திலுள்ளவர்கள் அமைதியாக இருக்க முடியாது

## கிழக்கின் முன்னாள் முதல்வர் சுட்டிக்காட்டு




(ஏறாவூர்)

இனங்களுக்கிடையில் அமைதி சீர்குலைக்கப்பட்டு அழிவுகள் ஏற்புடுத்தப்படும் பொழுது அதிகாரத்திலுள்ளவர்கள் அமைதியாக வேடிக்கை பாரத்துக் கொண்டிருக்க முடியாது என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் ஆலிம் நஷீர் அஹமத் தெரிவித்தார்.

சில நாட்களுக்கு முன்பாக கிழக்கின் அம்பாறை நகரிலும், இந்தவாரம் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தின் சில பகுதிகளிலும் மூன்றாவது சிறுபான்மைச் சமூகமான முஸ்லிம்களைக் குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல்கள் தொடர்பில் கவனஞ்செலுத்தி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து சுமார் இரண்டரை வருட காலம் நடத்திய மாகாண நல்லாட்சியின்போது கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் சிங்கள சமூகங்களுக்கிடையில் ஒரு நூலிழை அளவுகூட இன விரிசல் ஏற்பட்டதில்லை.

அத்தகையதொரு இன ஐக்கியத்திற்காக தமிழ் பேசும் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அதிக சிரத்தை எடுத்து அதிக தியாகங்களைச் செய்து பாடுபட்டுழைத்தோம்.

ஆனால், இப்பொழுது மாகாண சபை ஆட்சி முடிவுக்கு வந்து அதிகாரம் ஆளுநர் கைகளுக்கு மாறியிருக்கின்ற நிலையில் ஏற்கனவே மட்டக்களப்பு வாழைச்சேனையில் தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலும் கடந்த வாரம் அம்பாறையிலும் தீய சக்திகள் இன வாதத்தை விதைத்து விட்டு அதை நாடு பூராகவும் விரிவடையச் செய்வதற்கு முனைந்து நிற்கின்றன.

கடந்த காலங்களில் இன அமைதியின்மையால் ஏற்பட்ட அழிவுகள் ஆதாரபூர்வமான கற்றுக் கொண்ட பாடங்களாக நம் கண் முன்னே இருக்கும் போது இதனைக் கருத்திற் கொள்ளாது அதிகாரமுள்ளவர்கள் கண்மூடித்தனமாக இருந்து கொண்டு வேடிக்கை பார்ப்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களாயினும் அப்பாவிகள் பாதிக்கப்படும் பொழுதெல்லாம் அதிகாரம் தன் கடமையை சரிவரச் செய்ய வேண்டும். பாரபட்சம் இன்றி சட்டம் ஒழுங்கு சீர்குலையாமல் பாதுகாக்க வேண்டும்.

ஆனால் அது கடந்த சில நாட்களாக அம்பாறை நகரில் சீர்குலைக்கப்பட்டுள்ள அமைதி இயல்புக்குத் திரும்பும் முன்னர் அதனைத் திசை திருப்பும் முகமாக கண்டி மாவட்டத்தில் கலகத்தை இடம் மாற்றியுள்ளனர்.

இதற்கு அதிகாரத்திலுள்ளோர் பதில் சொல்லியாக வேண்டும்.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபொழுதும் மக்களின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கப்படுகின்றதென்றால் அங்கு மறைமுக சதிவலை பின்னப்படுகிறதென்று பொருள் கொள்ள முடியும்.

இத்தகைய நாசகார வேலைகளுக்கு இடமளிப்பது நல்லாட்சி என்றே சொல்லுக்கே நல்லதல்ல. இனி வரும் சமுதாயம் இனங்களுக்கிடையிலான அழிவுகளிலிருந்து கற்றுக் கொள்வதற்கு அதிகாரத்திலுள்ளோர் வழிசமைத்துவிடக் கூடாது.

இனவாதத்தைத் தூண்டுகின்ற எந்தவொரு இழிவான அரசியல் கலாசாரத்தையும் இளஞ்சந்ததிக்குக் கையளிக்கக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# காரும் டிப்பரும் நேருக்கு நேர் மோதியதில் இரண்டு பேர் பலி!



(காலி)

காலி - மாத்தறை பிரதான வீதியில் அஹங்கம, வெல்ஹேன்கொட பகுதியில் நேற்று அதிகாலை 5.40 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து காலி நோக்கி பயணித்த கார் ஒன்றும், மாத்தறையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த டிப்பர் வண்டி ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் காரில் பயணித்த நான்கு பேர் காயமடைந்த நிலையில் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டோரில் ஆண் ஒருவரும் இரண்டு பெண்களும் இரண்டரை வயது பெண் குழந்தை ஒன்றும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் படுகாயமடைந்த இரண்டு பெண்களும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# சட்டம் ஒழுங்கை சகலரும் பாதுகாக்க வேண்டும்

## மகிந்த வேண்டுகோள்

(கொழும்பு)

சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க அனைவரும் பொறுப்புடன்செயற்பட வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காலஞ்சென்ற தரணகம குசலதம்மா தேரருக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இறுதி அஞ்சலியை செலுத்திய மகிந்த ராஜபக்ஷ, அதன் பின்னர் கண்டி - திகன சம்பவம் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியும் பிரதமரும் இவ்விடயம் தொடர்பாக கரிசனையுடன் செயற்பட வேண்டியது அவசியம் எனக் குறிப்பிட்ட மகிந்த, இவ்விடயத்தில் பொலிஸாரின் செயற்பாடு திருப்திகரமானதாக இல்லையெனத் தெரிவித்தார்.



கண்டி தெல்தெனிய பகுதியில் ஏற்பட்ட மோதலில் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இளைஞன் ஒருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, திகன மற்றும் தெல்தெனிய பகுதிகளில் வன்முறை வெடித்துள்ளது. இதனால், குறித்த பகுதிகளில் பொலிஸாரும், இராணுவத்தினரும், விசேட அதிரடிப்படையினரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை ஜெனிவாவில் எடுத்துரைத்தார் ரஹ்மான்!

(ஜெனிவா)

இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை ஜெனிவாவில் நடைபெற்று வரும் விசேட கூட்டத்தொடரில், நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளரும், பொறியியலாளருமான அப்துர் ரஹ்மான் எடுத்துரைத்தார்.



ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 37ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ஜெனிவா சென்றுள்ள, அப்துர் ரஹ்மான், மனித உரிமை மற்றும் சிறுபான்மை விவகாரங்களுக்கு பொறுப்பான நிறுவனங்களுடனும் இராஜதந்திரிகளுடனும் இலங்கை நிலவரங்கள் தொடர்பில் அவர் சந்திப்புக்களை மேற்கொண்டார்.

அம்பாறை, கண்டி-தெல்தெனிய மற்றும் திகன உட்பட பல பிரதேசங்களில் நடந்து வரும் தாக்குதல்களினால் முஸ்லிம்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளதாகவும், தொடரும் இத்தாக்குதல்களுக்கு விரைந்து நடவடிக்கையொன்றை எடுக்குமாறும் அவர் இதன்போது கோரிக்கை விடுத்தார்.

அத்துடன் அம்பாறை வன்முறைகள் பற்றிய அறிக்கை ஒன்றினையும் சமர்ப்பித்தார்.

இவை தொடர்பாக தீவிர கவனம் செலுத்திய மனித உரிமை அறிக்கையாளர், ஏனைய அதிகாரிகளும் இச்சம்பவங்கள் பற்றிய இன்னும் சில அறிக்கைகளையும் உடனடியாகத் தருமாறு கோரினார்.

இதனைத் தொடர்ந்து, கண்டி தெல்தெனிய திகன பகுதிகளில் நடைபெற்ற வன்முறைகள் தொடர்பான புகைப்படங்கள் அடங்கிய ஆவணங்களும் குறித்த சிறுபான்மை மனித உரிமை பணிமனைக்கும் ஏனைய இராஜதந்திரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. (இ-7)

# ஆட்சி அமைப்பது குறித்து சு.க..தீர்மானிக்கவில்லை

(கொழும்பு)


உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது குறித்து சுதந்திரக்கட்சி இன்னும் தீர்மானிக்கவில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தமது கட்சிக்கு கூடுதல் சந்தர்ப்பம் வழங்கப்படும் கட்சியொன்றுடன் இணைந்து செயற்பட விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார். உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர் பரிந்துரைகளின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிகள் பின்பற்றப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# காத்தான்குடியில் வீதியில் டயர் எரித்தவர் கைது

(காத்தான்குடி)

முஸ்லிம்களுக்கெதிராக இடம்பெறும் வன்முறைகளைக் கண்டிக்கும் முகமாக காத்தான்குடி பிரதான வீதியில் டயரைப் போட்டு எரித்த நபரை நேற்று செவ்வாய்க்கிழமை காலை கைது செய்ததாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.



இச்சம்பவத்தில் காத்தான்குடியைச் சேர்ந்த முஸ்லிம் நபரே கைது செய்யப்பட்டுள்ளார். வன்முறையைத் தூண்டமுற்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இக்கைது இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

பாரதம்

# எம்.ஜி.ஆர். போன்று நல்லாட்சியை என்னால் கொடுக்க முடியும் –ரஜினி

(சென்னை)

எம்.ஜி.ஆர். வழங்கியது போன்ற நல்ல ஆட்சியை என்னால் கொடுக்க முடியும் என்று நடிகர் ரஜினிகாந்த் உறுதிபடத் தெரிவித்தார்.

புதிய நீதி கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம் சென்னை வேலப்பன் சாவடியில் "டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் நடத்தி வருகிறார்.

அந்த பல்கலைக் கழக வளாகத்தில் தாய்மூகாம்பிகை பல் மருத்துவக் கல்லூரி மற்றும் சில கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இந்த கல்லூரிகளின் 30ஆம் ஆண்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் நடிகர் ரஜினிகாந்த் கலந்து கொண்டார்.

பல்கலைக்கழகத்திற்கு வந்த ரஜினிகாந்தை ஏ.சி. சண்முகம் வரவேற்றார். இதனையடுத்து எம்.ஜி. ஆரின் நூற்றாண்டு விழாவையொட்டி, பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள எம்.ஜி.ஆரின் 8 அடி உயர முழு உருவ வெண்கல சிலையை ரஜினிகாந்த் திறந்து வைத்தார். பின்னர், எம்.ஜி.ஆர். பெயரிலான விருதுகளையும் அவர் வழங்கினார்.

அதன் பின்னர் அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடல் விழாவில் மாணவ-மாணவிகளிடையே அவர் பேசியதாவது,

இது ஒரு பல்கலைக்கழக விழா என்று நினைத்தேன். ஆனால் கட்சி மாநாடு போல உள்ளது. இதை நான் அரசியல் மேடையாக ஆக்கக் கூடாது. அரசியல் பேசக்கூடாது என்று அழுத்தமாக இருந்தேன். ஆனால் பேசும் அளவுக்கு தள்ளப்பட்டு உள்ளேன். சில வார்த்தைகள் மட்டும் பேசுகிறேன். மற்றவைகளை வேறு விழாக்களில் வைத்துக்கொள்வோம்.

எம்.ஜி.ஆரின் ஆட்சி தான், அ.தி.மு.க. ஆட்சி தான் நடக்கிறது. அவரது ஆட்சியில் ஊரெல்லாம் அவரது நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. எம்.ஜி.ஆர் சினிமாத்துறையில் இருந்து வந்தவர். அது தான் அவரது தாய்வீடு. அது மட்டுமல்ல, இதய தெய்வம் என்றழைக்கப்படும் ஜெயலலிதாவும் சினிமாத் துறையின் இருந்து வந்தவர் தான். சினிமாத்துறையினரை அழைத்து எம்.ஜி.ஆரின் நூற்றாண்டு விழா நடக்கும் என்று எதிர்பார்த்து இருந்தேன். நடக்கவில்லை.

எம்.ஜி.ஆரை போல சினிமா உலகில் இருந்து இன்னொருவர் அரசியலுக்கு வரக்கூடாது என்கிறார்கள். 'பேண்ட்-சர்ட் போட்டு மேக்கப் போட்டு கதாநாயகிகளுடன் 'டூயட்' பாட நாங்கள் வரவில்லை. நீங்கள் ஏன் கரை வேட்டிகட்டிஎங்கள்வேலைக்கு வருகிறீர்கள்?' என்கிறார்கள்.



ஐயா... நான் மற்றவர்களை பற்றி பேசவில்லை. என்னை பற்றி மட்டும் சொல்கிறேன். என் வேலையை நான் சரியாக செய்துகொண்டிருக்கிறேன், நீங்கள் உங்கள் வேலையை சரியாக செய்யவில்லையே? 1996-ல் இருந்து அரசியல் எனும் நீர் என்மீதும்பட்டுவிட்டது. கருணாநிதி, மூப்பனார், சோ ஆகியோருடன் பழகி நானும் கொஞ்சம் அரசியல் கற்று இருக்கிறேன். எங்கெங்கே தப்பு நடக்கிறது, அதை எப்படி தடுப்பது என்று எனக்கு தெரியும். எனக்கும், மக்களுக்கு செய்யவேண்டிய கடமை இருக்கிறது. எனவே தான் அரசியலுக்கு வருகிறேன்.

நான் அரசியலுக்கு வருகிறேன் என்று சொன்னதும் என்னை ரத்தின கம்பளம் விரித்து வரவேற்பார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. வாழ்த்துகள் சொல்லவேண்டிய அவசியம் இல்லை, ஆனால் ஏன் ஏளனம் செய்கிறீர்கள்?. அரசியல் பாதை எனக்கும் தெரியும். பூப்பாதை அல்ல முள்களும், பாம்புகளும், கற்களும் உள்ள பாதை. எனக்கு எல்லாமே தெரிந்தும், இந்த வயதிலும் நான் அரசியலுக்கு வருகிறேன் என்று சொன்னால், ஏன் ஏளனம் செய்கிறார்கள்? என்று தெரியவில்லை.

எல்லோரும் எம்.ஜி.ஆராக முடியாது. சினிமாவில் இருந்து அவரை போல யாரும் அரசியலில் ஜொலிக்க முடியாது என்கிறார்கள். சத்தியமாக யாரும் எம்.ஜி.ஆராக முடியாது. அவர் ஒரு யுக புருஷர். 'பொன்மனச்செம்மல்', 'மக்கள் திலகம்', நூறு அல்ல ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் அவரை போல யாரும் வரமுடியாது. அவரே மீண்டும் பிறந்து வந்தால் தான் உண்டு.

எம்.ஜி.ஆரை போல ஒருவர் வருகிறேன் என்று சொன்னால் அவனை விட பைத்தியக்காரன் யாரும் இருக்கமுடியாது. ஆனால் அவர் தந்த நல்லாட்சி, ஏழை மக்களுக்கான ஆட்சி, சாமானிய மக்களுக்கான ஆட்சி, மத்தியஸ்த குடும்பத்தாருக்கான ஆட்சி என்னாலும் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

மக்கள் ஆசிர்வாதம், இளைஞர்கள் உறுதுணையுடன், நல்ல தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, நல்ல சிந்தனையாளர்கள், ஆலோசகர்கள் மற்றும் திறமை சாலிகளை வைத்துக்கொண்டு அந்த மாதிரி ஆட்சியை என்னாலும் கொடுக்கமுடியும். ஆன்மீக அரசியல் என்ன என்று என்னிடம் கேட்கிறார்கள்.

உண்மையான, நேர்மையான, வெளிப்படையான, சாதி - மத சார்பற்ற அறவழியில் நடப்பது தான் ஆன்மீக அரசியல் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். தூய்மை தான் ஆன்மீகம். எல்லா ஜீவன் களும் ஒன்றுதான். அனைத்துமே பரமாத்மா. இறை நம்பிக்கை இருப்பது தான் ஆன்மீக அரசியல்.

அப்போது திராவிடத்தில் இறை நம்பிக்கை, தூய்மை, நேர்மை, சாதி - மத சார்பு கிடையாதா? இனிமேல் தான் பார்க்க போகிறீர்கள். ஆன்மீக அரசியலை.

'கொள்கை பற்றி கேட்டால் தலை சுற்றுகிறது', என்று நான் சொன்ன சிறிய விடயத்தை பற்றி ஒரு பட்டிமன்றமே நடத்துகிறார்கள். 31ஆம் திகதி நான் அரசியலுக்கு வருகிறேனா, இல்லையா? என்பதை தெரிவிப்பேன் என்றேன். ஆனால் 29ஆம் திகதியே உங்கள் கொள்கை என்ன? என்று கேட்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் பொண்ணு பார்க்க போய்கிட்டு இருக்கும் போது, எனக்கு கல்யாணத்துக்கு பத்திரிகை வரவில்லையே?' என்று கேட்பது போல இருக்கிறது.

பெரிய பெரிய அரசியல் தலைவர்களும், மேடையில் இதுபற்றி பேசி, கிண்டல் செய்தனர். மக்கள் முன்னால் பேசும்போது மிகவும் ஜாக்கிரதையாக பேச வேண்டும். மேடையில் கேட்டுக் கொண்டு இருக்கும்போதே மக்களின் அறிவு திடீரென்று மேலோங்கும். மாசக்கணக்கில் 'ரூம்' போட்டு, கதை குறித்து விவாதம் நடத்தி, சினிமா எடுக்கும் கஷ்டம் சினிமாக்காரனான எனக்கு தெரியும், எல்லா 'லாஜிக்'கையும் பார்த்து கதை பண்ணுவோம். ஆனால் படத்தை பார்த்துவிட்டு 'அது சரியில்லை, இது சரியில்லை', என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிடுவார்கள்.

அதே நபரிடம் படத்தை தனியாக போட்டுக்காட்டுங்கள். எதுவுமே சொல்ல முடியாது. இது தான் 'மாஸ் சைக்காலஜி'. மக்களிடம் பேசும் போது ஜாக்கிரதையாக பேச வேண்டும்.

சரி இப்போது ஏன் அரசியலுக்கு வருகிறீர்கள்?, ஜெயலலிதா இருக்கும்போது ஏன் வரவில்லை?, பயமா? என்று கேட்டார்கள். 1996ஆம் ஆண்டு நிலைமை எல்லோருக்கும் தெரியும். அப்போதே அவருக்கு (ஜெயலலிதா) எதிராக குரல் கொடுத்த எனக்கு, ஏன் வரப்போகிறது பயம்? அரசியல் வெற்றிடம் இருப்பது உண்மைதான். நல்ல தலைவனுக்கு, நல்ல தலைமைக்கு வெற்றிடம் இருக்கிறது.

சக்தியும், திறமையும் வாய்ந்த 2 தலைவர்கள் இருந்தார்கள். ஜெயலலிதாவின் ஆளுமை பற்றி யாருமே கேள்விகேட்க முடியாது. அவரை போல எந்த தலைவரும் ஒரு கட்சியை தன் கட்டுப்பாட்டுக்குள் அப்படி வைக்கமுடியாது. அப்படி கட்டுப்பாட்டுடன் கட்சியை வைத்திருந்தார் ஜெயலலிதா. ஒரு தலைவர்.

அந்த பக்கம் கருணாநிதி. என் அருமை நண்பர், 13 ஆண்டுகள் ஆட்சியில் இல்லையென்றாலும் தன் கட்சியை அப்படி அக்கறையுடன் கட்டி காப்பாற்றினார். எத்தனை தலைவர்களை உருவாக்கிய கட்சி அது. பல மனஸ்தாபங்கள் இருந்தாலும் எப்படி அந்த கட்சி கட்டுப்பாட்டுடன் இருந்தது. அவர் இப்போது உடல்நிலை சரியில்லாமல் உள்ளார்.

தமிழகத்துக்கு இப்போது ஒரு தலைமை தேவை. ஒரு தலைவன் தேவை. அந்த இடத்தை நிரப்ப நான் வருகிறேன். ஐயா... 'நம்ம பக்கம் அந்த ஆண்டவனே இருக்கிறான்'. நான் நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் ரசிகன்.

நான் சென்னைக்கு வந்த பிறகு, சினிமாத்துறைக்கு வந்த பிறகு புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். பற்றி கேள்விப்பட்டு, அவருடைய வாழ்க்கை வரலாற்றை எல்லாம் பார்த்து, அவருடைய சாதனைகளை எல்லாம் பார்த்து, 'ஆப் ஸ்கீரினிலே', வாழ்க்கையிலே நான் அவருடைய மிகப்பெரிய ரசிகனாகி விட்டேன்.

அவருடைய பெரிய வெறியனாகவும் மாறிட்டேன். எம்.ஜி.ஆர். 1950ஆம் ஆண்டுகளில் மிகப்பெரிய 'அக்ஷன் ஹீரோவாக இருந்தார். 'அலிபாபாவும் 40 திருடர்களும்', 'மலைக்கள்ளன்' படங்களில் நடித்துக்கொண்டிருக்கும் போது சிவாஜி சேர் நுழைகிறார்.

'பராசக்தி' ஒரே ஷோவிலேயே, நடிப்புனா என்ன? என்பதையே மாற்றிவிட்டார். வசன உச்சரிப்புன்னா என்ன? என்பதையே மாற்றிட்டார். 'இதுதான்டா நடிப்பு. வசன உச்சரிப்பு', என்று சிவாஜி தனி புரட்சியையே உருவாக்கினார். அந்த காலக் கட்டத்தில் மிகப்பெரிய தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் எல்லாம் சிவாஜி சேர் பின்னால் சென்றார்கள். 'எம்.ஜி. ஆரின் கதை முடிந்தது', என்றார்கள். அப்போது எம்.ஜி.ஆர். சொந்தப்படம் தயாரித்தார். அந்த படத்தை அவரே இயக்கினார்.

'இவருக்கு தேவையா இது? கெட்டகாலம் வந்தா இப்படி தான்', என்று சொன்னார்கள். அந்த படம் 'நாடோடி மன்னன்'. அது இதிகாசம் படைத்தது. டைரக்டர்கள் எல்லாம் நடுங்கி விட்டார்கள். தான் யார்? என்று நிரூபித்தார், எம்.ஜி.ஆர். அப்போது எம்.ஜி.ஆர். செட்டுக்குள் வந்தாலே இயக்குநர்களுக்கு வியர்க்கும். அந்த மாதிரி சாதனை படைத்து காட்டியவர்.

அவருடைய காலத்தில் சினிமாவில் யாருடன் போட்டி என்றால் அது சிவாஜி கணேசனுடன் தான். அரசியலில் அவருக்கு யார் போட்டி?. கருணாநிதி. அவரை போன்ற ஒரு எழுத்தாளர், பேச்சாளர், அரசியல் ஞானி, இராஜதந்திரி இந்தியாவிலேயே கிடையாது.

அவரை 13 ஆண்டுகள் கோட்டைக்கு வந்து முதலமைச்சர் நாற்காலி பக்கமே திரும்பி பார்க்காமல் வைத்தவர் எம்.ஜி.ஆர்., இது என்ன சாதாரண சாதனையா?

13 ஆண்டுகள் எம்.ஜி. ஆருக்கு மக்கள் மீது அக்கறை. மின்சாரம் இல்லாத கிராமங்களுக்கு மின்சாரம் கிடைத்தது. ஒவ்வொரு குடிசையிலும் ஒரு விளக்கு இலவசமாக கொடுத்தார். ஒவ்வொரு கிராமத்துக்கும் பஸ், வீதி வசதி கொடுத்தார்.

13 ஆண்டுகள் 1 கிலோ அரிசிக்கு ரூ.1.45, அதற்கு மேல் தாண்டவில்லை. காமராஜர் கொண்டு வந்த மதிய உணவு திட்டத்தின் கீழ் ஒரு வகுப்பில் 100 குழந்தைகள் இருந்தார்கள் என்றால், அதில் 30 குழந்தைகளுக்கு மட்டும் கொடுக்கப்பட்டு வந்தது. எம்.ஜி.ஆர். வந்த பிறகு எல்லோருக்கும் சாப்பாட்டு போட்டார்.

ஏழை மக்கள் சைக்கிளில் 2 பேர் சென்றால், பொலிஸார் பிடித்து விடுவார்கள். 2 பேர் செல்லலாம் என்று அந்த சட்டத்தை மாற்றினார். அப்போது சந்தேகத்தின் பேரில் யார் மீது என்றாலும் வழக்கு போடலாம். அதையும் மாற்றினார். ரேஷன் கடைகள் ஆரம்பித்தார். அதனால் தான் 13 ஆண்டுகள் முழுமையாக ஆட்சியில் இருந்தார். அமெரிக்காவில் இருந்த போது அவர் உயிரோடு இருக்கிறாரா? என்று கேட்டார்கள். அவரிடம் பேச முடியாது, செயலாற்ற முடியாது என்று சொன்னாலும், அந்த மகான் உயிரோடு இருந்தால் மட்டும் போது அவருக்கு தான் வாக்கு போடுவோம் என்று சொல்லி வாக்கை குத்தினார்கள்.

எம்.ஜி.ஆர். மறைந்த பிறகும், அவருடைய சமாதியில் உள்ள கைக்கடிகாரம் ஓடுகிறதா? என்று இன்னும் பொதுமக்கள் கேட்கின்றனர். அவர் ஒரு தெய்வப்பிறவி.

அவர் ஒரு மர்ம மனிதர், மாய மனிதர். அந்த ஆண்டவருடைய சக்தி, அவரை இயக்கிக்கொண்டிருந்தது. மூகாம்பிகை அம்மன் தான் அவரை இயக்கியது. மதுரை வீரன் தான் அவரை இயக்கிக்கொண்டிருந்தார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சாக்கடைக் கால்... ட்ரக் கவிழ்ந்து ...

## 26 பேர் உயிரிழப்பு




(அகமதாபாத்)

குஜராத்தின் நேற்று திருமண நிகழ்ச்சிக்கு சென்றவர்கள் பயணம் செய்த ட்ரக் விபத்துக்குள்ளானதில் 26 பேர் உயிரிழந்தனர்.

குஜராத் மாநிலம் ராஜ் கோட்-பாவ்நகர் நெடுஞ்சாலையில் நேற்று அதிகாலை ஒரு ட்ரக் வேகமாக சென்று கொண்டிருந்தது.

பாவ்நகர் பகுதியில் சென்றபோது திடீரென ட்ரக் சாரதியின் கட்டுப்

# சிரியாவில் அரச படைகளின் தாக்குதலில் மேலும் 45 பேர் பலி



(டமாஸ்கஸ்)

சிரியாவில் இடைக்கால போர் நிறுத்தத்தை மீறி கிழக்கு கௌட்டா பகுதியில் அரசு படையினர் நடத்திய வான்வழி தாக்குதலில் மேலும் 45 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் ஆட்சிக்கு எதிராக பல்வேறு கிளர்ச்சி குழுவினர் ஆயுதம் தாங்கிய போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் நாட்டின் பல் வேறு பகுதிகளை கைப்பற்றி தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். அந்த பகுதிகளை மீட்கவும், போராளிகளின் ஆயுத கிடங்குகள் மற்றும் பதுங்குமிடங்களை அழிக்கவும் ரஷ்ய நாட்டு படைகளின் துணையுடன் சிரியா இராணுவம் ஆவேச தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இதற்கிடையில், உள் நாட்டுப்போர் உச்சகட்டத்தை எட்டியுள்ள சிரியாவில் காலை 9 மணியில் இருந்து பிற்பகல் 2 மணிவரை ஒரு மாதத்துக்கு இடைக்கால போர்நிறுத்தம் செய்யும் சமரசத்தை ரஷ்யா உருவாக்கி தந்தது.

இந்த போர்நிறுத்த நேரம் தவிர மற்ற வேளைகளில் இருதரப்பினரும் சரமாரியான தாக்குதலகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், கிழக்கு கௌட்டா பகுதியில் போராளிகளின் பிடியில் உள்ள பகுதிகளை மீட்பதற்காக கடந்த இருநாட்களாக அரசுப் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.



அந்த வகையில் கிழக்கு கௌட்டா பகுதியில் சிரியா அரசு நடத்திய வான்வழி தாக்குதலில் சுமார் 45 அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாக சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. மேலும் பலர் இந்த தாக்குதலில் படுகாயம் அடைந்துள்ளதால் பலி எண்ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது.

முன்னதாக நேற்று முன்தினம் நள்ளிரவில் இருந்து நேற்று அதிகாலை வரை ஹூமேரியயே உள்ளிட்ட பகுதிகளில் அரசு விமானப் படைகள் நடத்திய பேரல் வெடிகுண்டு தாக்குதலில் 19 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பா.ஜ.க. - கம்யூனிஸ்ட் தொண்டர்கள் மோதல்

(அகர்தலா)

திரிபுரா சட்டமன்றத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி படுதோல்வியடைந்ததால் பல்வேறு பகுதிகளில் கலவரம் வெடித்துள்ளது. பா.ஜ.க.-கம்யூனிஸ்ட் தொண்டர்களுக்கிடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

திரிபுரா சட்டசபை தேர்தலில் பா.ஜனதா வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. இதன் மூலம் 25 ஆண்டுகால கம்யூனிஸ்டு ஆட்சி முடிவுக்கு வந்தது. மொத்தம் உள்ள 60 இடங்களில் பா.ஜனதா கூட்டணி 43 இடங்களை கைப்பற்றியது. பா.ஜனதா இந்த வெற்றியை திரிபுரா மக்கள் முன்னணி என்ற மாநிலக் கட்சியுடன் கூட்டணி சேர்ந்து பெற்றது. தேர்தலின் போது மாநிலத்தின் பல்வேறு இடங்களில் நடந்த தேர்தல் மோதலில் பா.ஜனதா தொண்டர்கள் 11 பேர் கொல்லப்பட்டனர்.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக தேர்தல் முடிவு வெளியான பின்பு பா.ஜனதா தொண்டர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். அப்போது மேற்கு திரிபுரா மாவட்டத்தில் சித்தாய் பகுதியிலும், வடக்கு திரிபுரா மாவட்டத்தில் கதம்தலாவிலும் பா.ஜனதா தொண்டர்களுக்கும் கம்யூனிஸ்டு தொண்டர்களுக்கும் மோதல் ஏற்பட்டது.

இதில் இரு கட்சியின் அலுவலகங்களும் தாக்கப்பட்டு சூறையாடப்பட்டன. கம்யூனிஸ்டு அலுவலகத்தில் இருந்த லெனின் சிலை தகர்க்கப்பட்டது. பதிலுக்கு பா.ஜனதா அலுவலகம் தாக்கப்பட்டது. இருதரப்பினரும் மோதிக் கொண்டதால் பயங்கர கலவரம் மூண்டது. இதைத் தொடர்ந்து பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தி கலவரக்காரர்களை விரட்டி யடித்தனர்.

கலவரப் பகுதிகளில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் பொலிஸாருடன் துணை இராணுவப்படையினர் குவிக்கப்பட்டு ரோந்து சுற்றி பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

திரிபுரா கலவரம் பற்றி தகவல் அறிந்ததும் உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உடனடியாக திரிபுரா ஆளுநர் ததகத்தராய், மாநில பொலிஸ் டி.ஜி.பி. ஏ.கே. சுக்லா ஆகியோருடன் தொடர்பு கொண்டு பேசினார்.

கலவரத்தை அடக்க மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கை நிலைநாட்ட தேவையான நடவடிக்கை எடுக்குமாறும், புதிய அரசு பதவி ஏற்கும் வரை கலவரம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுமாறும் உத்தரவிட்டார். (7)

# பப்புவா நியூகினியில் பாரிய நிலநடுக்கம்; பலி எண்ணிக்கை 55 ஆக அதிகரிப்பு



(போர்கெரா)

பப்புவா நியூகினியில் கடந்த வாரம் ஏற்பட்ட பாரிய நில நடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 55 ஆக அதிகரித்துள்ளது.

பப்புவா நியூகினியின் உயர்மலைப்பகுதியான போர்கெரா பகுதியில் கடந்த வாரம் 7.5 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது.

அதனையடுத்து மண்சரிவும் ஏற்பட்டது. அத்துடன் கடந்த ஞாயிற்றுக்கிழமையும் 6 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது.

இந்த நிலநடுக்கம் மற்றும் மண் சரிவினால் ஏற்பட்ட பாதிப்புக்களை சரி செய்யும் நடவடிக்கைகளும் மீட்புப் பணிகளும் இடம்பெற்று வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வரையில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 55 என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்க அவசர உதவி தேவைப்பாடுகளுடன் சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் காத்திருப்பதாக உதவி முகவர் அமைப்புக்கள் தெரிவிக்கின்றன. அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியன அவசர உதவிகளை வழங்கி வருகின்ற போதிலும் மோசமாக வானிலை மற்றும் சேதமடைந்த வீதிகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு செல்வதில் தாமதம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ...ல்வாயில் ...து விபத்து

பாட்டை இழந்து தாறுமாறாக ஓடியது. பின்னர் சாக்கடைக் கால்வாயில் விழுந்தது.

இந்த விபத்தில் ட்ரக்கில் பயணம் செய்தவர்களில் சுமார் 26 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த தாக தகவல் வெளியாகியுள்ளது. காயமடைந்தவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

திருமண நிகழ்ச்சிக்கு சென்ற போது விபத்து ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# குழந்தைகளை வைத்து பயங்கரவாத இயக்கம்
## குற்றச்சாட்டில் மூவர் கைது

(லண்டன்)

பாடசாலைக் குழந்தைகளை வைத்து ஒரு புதிய பயங்கரவாத இயக்கத்தை உருவாக்க முயன்ற மூன்று பயங்கரவாதிகள் பொலிஸார் கைது செய்தனர்.

லண்டனில் உள்ள மதப் பாடசாலையில் பணியாற்றிய 3 பேரை இங்கிலாந்து உளவுத்துறை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரணை நடத்தினார்கள். அப்போது இவர்கள் போலிப் பெயரில் அங்கு பணியில் சேர்ந்தது தெரிய வந்தது.

மேலும் அப்பாடசாலையில் கல்வி கற்கும் குழந்தைகளுக்கு பயங்கரவாதம் குறித்து பயிற்சி அளித்துள்ளனர். கத்தியால் குத்துவது, மனித குண்டாக மாறுவது, கொலை செய்வது, பொது இடங்களில் பெரிய குண்டு வெடிப்பை நிகழ்த்துவது குறித்து இவர்களுக்கு பயிற்சி அளித்துள்ளனர்.

லண்டனில் நடந்த துப்பாக்கி சூடு, அமெரிக்காவின் இரட்டை கோபுர தாக்குதல், மும்பை தாக்குதல் வீடியோக்களை ஒளிபரப்பி உள்ளனர்.

அதன் மூலம் பயங்கரவாதிகளின் செயற்பாடு குறித்து வீடியோ மூலம் விளக்கியுள்ளனர். இக்குழந்தைகளை வைத்து புதிய பயங்கரவாத இயக்கம் தொடங்க திட்டமிட்டு இருந்தனர். இவர்களிடம் கற்ற குழந்தைகளில் பெரும் பாலானவர்கள் 15 வயதிற்கும் குறைவானவர்கள்.

குழந்தைகளுக்கு பயங்கரவாதத்தை கற்றுக் கொடுத்த 3 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களது பெயர் உமர் அகமது, ஹாக், முகமது அபித், அபுதாகிர் மாமுன், குழந்தைகளை வைத்து குற்றங்கள் செய்தால் மாட்டாமல் தப்பிக்கலாம் என நினைத்து இச் செயலில் ஈடுபட்டதாக அவர்கள் தெரிவித்தனர். (7)

# இனவாத, மதவாத மோதல் நாட்டில் உருவாகி வருகிறது



## அமைச்சர் சம்பிக்க எச்சரிக்கை

(கொழும்பு)

தெல்தெனிய திகன பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள வன்முறைச் சம்பவம் தொடர்பில் நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தனது முகநூல் பக்கத்தில் விசேட அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

"அம்பாறை - தெல்தெனிய மோதல் நிலைமைக்கு முக்கிய காரணம் அவை ஏற்பட்டவுடனேயே அவற்றுக்கு தீர்வு காணப்படாமை ஆகும். கடந்த வாரம் அம்பாறையிலும், நேற்று முன்தினம் தெல்தெனியவிலும் இடம்பெற்ற சம்பவங்களில் வெளிப்படும் தெளிவான உண்மை ஒன்று உள்ளது. அதுதான் நாட்டில் இனவாத, மதவாத மோதல் நிலையொன்று உருவாகி வருகின்றது என்பதாகும். இதற்குப் பிரதான காரணம் பிரச்சினையின் ஆரம்பத்திலேயே சட்டம் ஒழுங்கு மற்றும் பொலிஸ் பிரிவு என்பன தலையீடு செய்து தீர்க்க முன்வராமையே ஆகும்.

அம்பாறையில் உணவகத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் பொலிஸார் உடனடியாக தலையிட்டு விசாரணை செய்து சம்பவத்துடன் தொடர்புபட்ட இரு தரப்பினரையும் கைது செய்திருந்தால், அப்பிரச்சினை வெகுதூரம் சென்றிருக்காது.

அதேபோன்று, தெல்தெனியவில் இடம்பெற்ற மரணம் தொடர்பிலும் 3 தினங்களாக ஊடகங்களில் புகைந்து புகைந்து, வன்முறையான ஒரு சூழல் உருவானது. இந்த வேளையிலும், சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து, குறித்த மரணச் சடங்கை அமைதியான முறையில் நிறைவேற்ற சட்டம் ஒழுங்கு மற்றும் பொலிஸ் துறை செயற்பட்டிருந்தால் இந்த நிலைமை அங்கு ஏற்பட்டிருக்காது.

இந்தச் சம்பவங்களின் ஊடாக சிங்கள சமூகம் பாதுகாப்பாக இருப்பதாக யாராவது கூறுவார்களாயின் அது போலியானது. விசேடமாக தற்பொழுது எமது இராணுவம் மற்றும் சிங்கள சமூகம் என்பவற்றுக்கு எதிராக ஜெனிவாவில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தவறான கருத்தை உறுதி செய்ய முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. நாம் இன அழிப்பை மேற்கொள்பவர்கள் என தெரிவித்து எமது நாட்டை நெருக்கடிக்குள் தள்ள சர்வதேச ரீதியில் சில அமைப்புக்களினால் சதிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

நாட்டில் நடந்து வரும் இந்த சம்பவங்கள் கூட அவர்களின் அம்முயற்சிகளைப் பலப்படுத்தும் வகையிலேயே அமைந்துள்ளன. சிங்கள சமூகத்தைப் பாதுகாப்பதற்கு சிங்களவராக இருந்து நல்ல பெறுமானமுள்ள நடவடிக்கைகளைக் காட்டுவதும், சகவாழ்வுடன் நடந்து கொள்வதுமே வழியாகும். மாறாக, ஆவேசமான, பண்பாடற்ற செயற்பாடுகளினால் அல்ல.

மறுபுறத்தில் முஸ்லிம் எதிர்ப்புணர்வு உலகம் முழுவதும் பரவி வருகின்றது. இந்தியாவிலும், ஆப்கானிஸ்தானிலும், சிரியாவிலும், ஈராக்கிலும் இடம்பெறும் நிகழ்வுகள் மட்டும் தான் எமக்கு பொதுவாக தென்பட்டாலும் கூட, மேலைத்தேய நாடுகள் ஒவ்வொன்றிலும் தினமும் முஸ்லிம் எதிர்ப்பு மோதல் இடம்பெறுகின்றன.

அண்மைக்காலத்தில் ஜேர்மன், ஒஸ்ட்ரியா மற்றும் இத்தாலி போன்ற நாடுகளில் இடம்பெற்ற தேர்தல்களிலும் சுவீடன், பிரான்சு, பிரித்தானியா, நோர்வே போன்ற நாடுகளின் தேர்தல்களிலும் இஸ்லாம் எதிர்ப்பு போக்குள்ள கட்சிகளுக்கே அதிகாரம் கிடைக்கப் பெற்றது.

இலங்கையிலும், சிங்கள மக்களுக்கு மத்தியில் முஸ்லிம் மக்களின் வளர்ச்சி தொடர்பில் பாரிய அச்சம் ஏற்பட்டுள்ளது என்பது மறைப்பதற்குரிய விடயமல்ல. அத்துடன் மிகச் சிறிய அடிப்படைவாத இஸ்லாமியர்கள் குழு, சிங்களவர்கள் மத்தியில் மாத்திரமல்ல இந்துக்கள், கிறிஸ்தவர்கள் இடையேயும் பாரிய அச்சம் ஏற்படக் கூடியவாறு வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் செயற்பட்டு வருகின்றது.

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் கூட சில பகுதிகளில் தேர்தலில் போட்டியிட்ட முஸ்லிம் பெண் வேட்பாளர்களை, அவர்கள் முஸ்லிம்கள் அல்லர் என சில அடிப்படைவாதிகள் அறிக்கை விடுத்திருந்தனர். இதற்கு எதிராக முன்வைக்கப்பட்ட பதிலும், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படாத குறைபாடும் வெளிப்படையாகவே காணக்கூடியதாக இருந்தன.

அத்துடன், முஸ்லிம் சமூகத்திலுள்ள நடுநிலையானவர்கள் இந்த அடிப்படைவாதிகளின் கருத்துக்கு மறைமுகமாகவும், தனிப்பட்ட ரீதியிலும் வரவேற்பை வழங்காதிருந்த போதிலும், பகிரங்கமாக அதனை எதிர்க்க முன்வராமையானது அடிப்படைவாதிகளுக்கு அவர்கள் வழங்கிய ஆதரவாகவே பார்க்கப்படுகின்றது.

பண்பாடற்ற முரண்பாடான அடிப்படைவாத செயற்பாடுகள் எந்த சமூகத்திலிருந்து வெளிப்பட்டாலும், பாதுகாப்புப் பிரிவு நீதியான முறையில் பக்கச்சார்பின்றி விரைவாக செயற்படுவது அவசியமாகும்.

அத்துடன், நாட்டிற்கு எதிரான சக்திகளை தோல்வியடையச் செய்வதற்காக உழைப்பது சிங்கள, முஸ்லிம் சமூகங்கள் உட்பட ஏனைய சகல சமூகங்களினதும் பொறுப்பாகும் எனவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஐ.தே.கவால் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட மாட்டாது



## வசந்த சேனநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட மாட்டாது என வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சி பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை கொண்டு வருமாக இருந்தால், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களிலுள்ள சிலரின் ஆதரவை அதற்கு வழங்குவதா? இல்லையா? என்பதை தீர்மானிப்பது அதில் அடங்கியுள்ள விடயங்களை அவதானித்ததன் பின்னரே எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், வேறு ஒரு குழுவினால் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவருவதாயின் அதற்க ஆதரவு வழங்குவது தொடர்பில் ஐ.தே.கவின் குழுவினருடன் கலந்துரையாடவும் வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த அமைச்சரவை மறுசீரமைப்பின் பின்னர், ஊடகங்களிடம் பகிரங்கமாக பிரதமரை மாற்ற வேண்டும் எனவும், நல்லவழி முறையிலோ அல்லது கெட்ட வழி முறையிலோ அவரை மாற்றியே ஆக வேண்டுமென வசந்த சேனநாயக்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### புரிந்துகொள்ளாமல் வெறுப்பதாவது?

வீட்டைக் காலி செய்துவிட்டுப் புறப்பட்ட குடித்தனக்காரர் புதிதாய் அந்த வீட்டிற்கு வரவிருந்த குடித்தனக்காரரைப் பார்த்துச் சொன்னார். "போயும் போயும் இந்த வீடு தானா உங்களுக்குக் கிடைச்சுது? இந்த வீட்டுக்கார அம்மா ஒரு இராட்சசியே" என்று போகிற போக்கில் பற்ற வைத்துவிட்டுப் போய்விட்டார்.

புதியவர் ஏதற்கும் மசிகிறவர் அல்ல. பழைய குடித்தனக்காரர் சொன்ன கருத்தை ஒதுக்கி வைத்துவிட்டு மிகவும் தன்மையாக நடந்து கொண்டார். என்ன வியப்பு! வீட்டுக்கார அம்மாள் தண்ணீராய்ப் பழகினார். இவருக்கு வேலை மாற்றல் கிடைத்த போது இரு குடும்பங்களும் அழாக்குறையாகப் பிரிந்தார்கள்.

ஒருவருக்கு இராட்சசியாகத் தெரிந்தவர். மற்றவருக்கு இனிமையாகத் தெரிவது ஏன்?

ஒருவரையொருவர் புரிந்துகொள்ள மிகச் சரியான சந்தர்ப்பங்கள் வாய்க்காமல் போயிருக்கலாம். எல்லா மனிதர்களுக்குமே இரு முகங்கள் உண்டு. இதற்கு விதி விலக்கே கிடையாது.

இதைக் கவனத்தில் கொண்டால் ஒருவரிடம் உள்ள நல்ல விடயங்களை மட்டும் நாம் பெற முடியும். முதல் குடித்தனக்காரர் ஏனோ முதல் முகத்தை சுரண்டி விட்டிருக்கின்றார். அதுதான் பிரச்சினை!

சிலர் எடுத்த எடுப்பிலேயே இந்நாளைக் கண்டாலே எனக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை என்று ஆரம்பித்துவிடுகின்றார்கள்.

இதைப் புதிதாய்த் திருமணமாகி ஒரு மருமகள் வீட்டில் நுழையும் போது ஒரு மாமியார் சொன்னால் மருமகள் கதி என்னாவது? அல்லது இப்படி ஆளுக்கு ஆள் சொல்ல ஆரம்பித்தால் என்னாவது? மனிதத் தன்மைக்கு அப்புறம் என்ன மதிப்பு?

தன்னைவிடத் தகுதி குறைந்த மாப்பிள்ளையைக் கணவனாக அடைந்து அவனை மதிக்காமல் வாழ்ந்து பிறகு அவனது உள்ளத்தைப் புரிந்து கொண்டதும் இனிது நடந்த மணவாழ்க்கைகள் நிறைய!

தோற்றத்தைப் பார்த்தும் உடையைப் பார்த்தும் வசதிகளைப் பார்த்தும் நம் சுயநலம் மற்றும் பிறர் தரும் சிறுசிறு தோல்விகளை வைத்துமா ஒருவரைப் பற்றி முடிவுக்கு வருவது? அவர்களது உள்ளத்தைப் புரிந்துகொள்ள முயற்சி செய்வது எப்போது?

பார்வையற்றவர்கள் யானையைத் தொட்டுப் பார்த்து விதவிதமாகக் கூறியதைப் போலத்தான் மனிதர்களைப் பற்றிய அபிப்பிராயங்களும் எழும்.

ஆனால் உள்ளத்தைப் பார்த்து எடைபோட முடியுமானால், அதுதான் சரியான எடையாக இருக்கும்.

**லேனா தமிழ்வாணன்**

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

## வினாத்தாள் பகுதி – I

*1ஆம், 2ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.*


01. மழை நாள் ஒன்றில் இயல்போடு பொருந்தாத சொற்தொகுதி?
 1. வியர்வை, குளிர், வெப்பம்
 2. தாகம்,சூரிய ஒளி, காற்று
 3. ஈரம், சேறு, குடை

02. மலர்கள் என்ற சொல்லுடன் பொருந்தாத சொற்தொகுதி?
 1. பளபளப்பு, கடினம், நிறம்
 2. மென்மை, நிறம், மணம்
 3. வாசனை, ஒளி, இனிப்பு

03. தளவாடியில் பார்க்கும்போது மாற்றம் எதுவும் இன்றி தெரிவது?
 1. ZN 2. WS 3.TA

04. நேற்று வெள்ளிக்கிழமை எனின் நாளை மறுதினம்?
 1. சனி 2. திங்கள் 3. புதன்

05. இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை?



 1. 8 2. 4 3. 10

06. பின்வருவனவற்றுள் நெட்டாண்டு எது?
 1. 2004 2. 2018 3. 2019

07. ஒரு கடிகாரத்தில் நேரம் 2 மணி 30 நிமிடம் ஆகும். இன்னும் எத்தனை நிமிடங்களின் பின்பு மணி முள்ளும், நிமிட முள்ளும் செங்கோணத்தைக் காட்டும்.
 1. 30 நிமிடங்கள் 2. 15 நிமிடங்கள் 3. 25 நிமிடங்கள்

08. 30 நாட்களைக் கொண்ட மாதங்களின் எண்ணிக்கை.
 1. 8 2. 4 3. 15

09. 6 மனிதர்கள் 10 நாட்களில் செய்யும் வேலையை 3 மனிதர் எத்தனை நாட்களில் செய்வார்கள்?
 1. 30 2. 20 3. 15

10. சதுர எண்ணாகவும் ஒற்றை எண்ணாகவும் வருவது?
 1. 4, 15 2. 9, 25 3. 4, 21


11. 2015 ஆம் ஆண்டு எத்தனையாம் நூற்றாண்டு எத்தனையாம் தசாப்தம்?
 1. 21 ஆம் நூற்றாண்டு 2ஆம் தசாப்தம்
 2. 20ஆம் நூற்றாண்டு 6ஆம் தசாப்தம்
 3. 20ஆம் நூற்றாண்டு 1ஆம் தசாப்தம்

ஒரு செவ்வகத்தின் நீளம் அதன் அகலத்திலும் பார்க்க மூன்று மடங்கு ஆகும். அதன் சுற்றளவு 24 சென்ரி மீற்றர் எனில்

12. நீளம் யாது?
 1. 3 2. 9 3. 12

13. அகலம் யாது?
 1. 18 சதுர சென்ரி மீற்றர்
 2. 27 சதுர சென்ரி மீற்றர்
 3. 9 சதுர சென்ரி மீற்றர்

14. எண் கோலத்தை அவதானித்து விடை தருக?




 1. 31 2. 21 3. 84

பின்வரும் கூற்றுகளுக்குரிய மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

15. தாயானவள் எப்போதும்?
 1. அன்பானவராக இருப்பார்
 2. ஒரு பெண்ணாக இருப்பார்
 3. அரசாங்க ஊழியராக இருப்பார்

16. பாடசாலை ஒன்றில் எப்போதும் இருப்பது?
 1. ஆசிரியர் 2. மாணவர் 3. கட்டடம்

17. மணிக்கு 30km வேகத்தில் செல்லும் பேருந்து 5 மணித்தியாலத்தில் எத்தனை km சென்றிருக்கும்?
 1. 150 km 2. 105 km 3. 180 km

18. "அ" என்பவர் "ஆ" வின் தாயாவார்.ஆனால் "ஆ" என்பவர் "அ" வின் மகன் அல்ல அப்படியாயின் "ஆ" யார்?
 1. மருமகன் 2. பேரன் 3. மகள்


பை ஒன்றில் 12 சிவப்புப் பந்துகளும் 7 பச்சைப் பந்துகளும் 11 வெள்ளைப் பந்துகளும் இருந்தன.

19. பையில் இருந்து 1 பச்சைப் பந்தைப் பெறுவதற்கு ஆகக் குறைந்தது எத்தனை பந்துகள் வெளியே எடுக்க வேண்டும்.
 1. 13 2. 24 3. 1

20. பையிலிருந்து 1 சிவப்புப் பந்தைப் பெறுவதற்கு ஆகக் குறைந்தது எத்தனை பந்துகள் வெளியே எடுக்க வேண்டும்?
 1. 8 2. 24 3. 19

21. பையிலிருந்து 1 வெள்ளைப்பந்தைப் பெறுவதற்கு எத்தனை பந்து வெளியே எடுக்க வேண்டும்?
 1. 20 2. 12 3. 8

படவரைபை பாவித்து விடை தருக?




22. அப்பிள் பழத்தை மாத்திரம் விரும்புபவர் எத்தனை பேர்?
 1. 16 2. 12 3. 35

23. மூன்று பழங்களையும் விரும்புபவர் எத்தனை பேர்?
 1. 16 2. 7 3. 13

24. அப்பிள் பழத்தையும் மாம்பழத்தையும் மாத்திரம் விரும்புபவர் எத்தனை பேர்?
 1. 23 2. 16 3. 12

பாடலை வாசித்து வினாக்களுக்குரிய விடையை தெரிவு செய்க.

அம்புஜம் வாடித் தளர்ந்தம்மா – அயல்
ஆம்பலும் கண்டு களித்த தம்மா

25. இங்கு அம்புஜம் என்று குறிப்பிடுவது?
 1. மல்லிகை 2. தாமரை 3. ரோசா

26. களித்தது என்பது?
 1. மயங்குதல் 2. மகிழ்ச்சியடைதல் 3. வாடுதல்

பின்வரும் தகவல்களை அவதானித்து விடையைத் தெரிவு செய்க

| | |
|---|---|
| சிவப்பு முட்டை 1<br>வெள்ளை முட்டை 1 | சிவப்பு முட்டை 3<br>வெள்ளை முட்டை 2 |
| விலை ரூபா 12 | விலை ரூபா 30, [illegible] |

27. 4 சிவப்பு முட்டைகளினதும் 3 வெள்ளை முட்டைகளினதும் விலை என்ன?
 1. 30.00 2. 42.50 3. 28.00

28. 2 சிவப்பு முட்டைகளினதும் 1 வெள்ளை முட்டையினதும் விலை என்ன?
 1. 30.00 2. 18.00 3. 18.50

29. 15 ஆவது முக்கோண எண் யாது?
 1. 90 2. 120 3. 110

30. 2018 ஜனவரி எத்தனை சனிக்கிழமைகளைக் கொண்டது?
 1. 3 2. 5 3. 4

31. 2018 ஜனவரி சனிக்கிழமைகள் வரும் திகதிகளின் கூட்டுத்தொகை யாது?
 1. 52 2. 56 3. 50

32. 7 தீக்குச்சிக்களைக் கொண்டு ஆக்கக் கூடிய உரோமன் இலக்கம்?
 1. 15 2. 19 3. 18

33. தவணைப்பரீட்சை ஒன்றில்ரவிபெற்றபுள்ளிகளின்சராசரி65. அவன் பரீட்சையில் தோற்றிய பாடங்களின் எண்ணிக்கை 9 எனின் அவன் பெற்ற மொத்த புள்ளி?
 1. 145 2. 575 3. 175

34. நான்முகி ஒன்றின் விளிம்புகளின் எண்ணிக்கை?
 1. 4 2. 6 3. 8

35. இரண்டு முக்கோணிகளையும் மூன்று செவ்வகங்களையும் கொண்டு ஆக்கக் கூடிய திண்ம உரு எது?
 1. கூம்பகம் 2. அரியம் 3. நான்முகி

36. மல்வான எப்பழத்திற்கு பிரசித்தி பெற்றது?
 1. அப்பிள் 2. ரம்புட்டான் 3. தோடம்பழம்

37. குறைந்த சமச்சீர் எண்ணிக்கையுடைய தள உரு எது?
 1. செவ்வகம் 2. சதுரம் 2. வட்டம்

38. 1, 4, 9, 16, 25 ........ ........ அடுத்து வரும் இரு உறுப்புக்கள் முறையே?
 1. 28, 34 2. 26, 27 3. 36, 49

39. 0.5 ஐ பின்னமாகக் கூறினால்?
 1. 1/10 2. 5/10 3. 5/100

40. சினம் என்பதன் ஒத்த சொல்?
 1. சந்தோசம் 2. கோபம் 3. மகிழ்ச்சி

# வினாத்தாள் பகுதி – II

**பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.**

நான் பிறந்த சூழல் மிகவும் அழகான இயற்கைக் காட்சிகளைக் கொண்டது. பச்சைக் கம்பளம் விரித்தது போன்ற மலைத் தொடர்பில் நிரை நிரையாக நாட்டப்பட்ட தேயிலை செடிகள் காற்றிலே பழுத்து மணம் பரப்பும் கனிகள். அக்காட்சிகளைப் பார்த்து என் மனம் மகிழ்ந்தது.

**கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை பந்தியிலிருந்து தெரிந்தெடுத்துப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

01.
1. தேயிலைச் செடிகள் எவ்வாறு நாட்டப்பட்டிருந்தன?
2. தன்மை ஒருமைச் சொல் ஒன்று எழுதுக?
3. பழங்கள் என்பதன் ஒற்றை சொல் யாது?
4. மலைத்தொடர் என்பதை பிரித்தெழுதுக?
5. உவமானத்தை எழுதுக?
6. பந்தியில் வந்துள்ள அடுக்குமொழிச் சொல் எது?

02. **கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**
1. அவன் தாகத்திற்கு ......................... பருகினான் (இழநீர் / இளநீர்)
2. மாரிகாலத்தில் அதிக ...................... பெய்யும் (மலை / மழை)

03. **கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியங்களையும் அவதானித்து சரியாயின் சரி ☑ எனவும் பிழையாயின் பிழை ☒ எனவும் அடையாளம் இடுக.**
1. யானை கூட்டம் சென்றது (.......)
2. பூக்கள் மணம் பரப்பின (.......)
3. ஒவ்வொரு பழங்களும் சுவையானவை (.......)
4. விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகின (.......)
5. நானும் தம்பியும் பாடசாலைக்குச் சென்றார்கள் (.......)

04. **பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுக.**
1. கை கொடுத்தல் ........................................
2. நட்டாற்றில் விடல் ........................................

05. **தனிச்சொல்லை எழுதுக?**
1. 25 ஆவது ஆண்டில் எடுக்கப்படும் விழா .................
2. முனிவர்கள் வாழும் இடம் ...............

06. **கீழே தரப்பட்டுள்ள கவிதையில் உள்ள வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.**

கிழக்கு வெளுக்குது பார்
கீழ் வானம் சிவக்குது பார்
..........................................
புது மணம் வீசுது பார்

07. **எதிர்ப்பால் சொல் எழுதுக.**
கணவன் .....................

08. **பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.**
நீங்கள் எங்கு செல்கிறீர்கள் என ஆசிரியர் கேட்டார்.

09. அறஞ்செய்ய விரும்பு என்பதில் அறம் என்பது எதைக் குறிக்கிறது.
..........................................

10. **பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்க.**
ஆழம் அறியாமல் காலை ...............................

11. **கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.**
கரும்பலகை .................. முயல் ..................

12. **தமிழ் கருத்தை எழுதுக.**
1. Clap Your Hands
2. Please Open Your Book

13. **பின்வரும் வாக்கியத்தை ஆங்கிலத்தில் எழுதுக.**
நான் உள்ளே வரலாமா?

14. **பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக.**
பந்திய ..............................

15. **பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழில் எழுதுக.**
நாங்கள் பாடசாலைக்குப் போவோம்

16. **போசாக்கு உள்ள உணவுகளை உண்பதால் ஏற்படும் பயன்கள் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக.**

(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுகக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

**தரப்பட்டுள்ள புள்ளிக் கோடுகளில் விடைகளை எழுதுக.**

17. இருடதாயிரத்து ஒன்பது என்ற எண்குறிகளின் பெயரை எழுதுக.
..........................................................................................

18. இக்கட்டத்தினுள் உள்ள எண்களின் 9 மடங்குகளை ஒழுங்கு வரிசையில் எழுதுக. ....................................


| | | |
|---|---|---|
| 54 | 25 | 45 |
| 18 | | 36 |
| 47 | 27 | 60 |

19. பதினைந்திற்கு அடுத்துவரும் எண்ணை உரோம எண் குறியில் எழுதுக.
....................................

20. 0.8 ஐ நிறந் தீட்டிக் காட்டுக.



21.




இவ்வுருவில் உள்ளே உள்ள செங்கோணங் களின் எண்ணிக்கை யாது?
....................................

22. அரியம் ஒன்றில் உள்ள விளிம்புகளின் எண்ணிக்கை யாது?
....................................

உச்சிகளின் எண்ணிக்கை யாது?
....................................

23. ஒரு வியாபாரி 20 மாம்பழங்களில் 3/5 பங்கை விற்றான். அவனிடம் மீதியாக உள்ள பழங்கள் எத்தனை? .............................

24.



6 cm

4 cm

இவ்வுருவின் சுற்றளவு யாது? ...............................

25. பாத்திரம் ஒன்றில் கொள்ளும் நீரின் அளவு 2l 500ml. இப்பாத்திரத்தில் மேலும் 800ml நீர் எடுக்கப்படுகிறது. தற்போது பாத்திரத்தில் உள்ள நீரின் அளவுயாது? ....................................

26. ஒரு பேனாவின் விலை 16.50 சதம். ஒரு அப்பியாசக் கொப்பியின் விலை 20.00 ரூபாய். இரண்டு அப்பியாசக் கொப்பிகளும் 2 பேனாக்களும் வாங்கிக் கொண்டு கடைக்காரருக்கு 500 ரூபாய் கொடுத்தால் மீதிப்பணம் எவ்வளவு? ....................................

27. ஒரு செவ்வகத்தின் நீளம் 10 cm அகலம் 5 cm எனின் அதன் பரப்பளவு யாது? ....................................

28. 525 ரூபாயை 5 பேருக்கு சமமாகப் பகிர்ந்தால் ஒருவருக்கு கிடைக்கும் பணம் எவ்வளவு? ................. ரூபாய்.

29. 5 kg 500g சீனியை 500g கொண்ட சரைகளில் கட்டினால் எத்தனை சரைகள் கட்டலாம்? ..........................

30. 2005.05.25 ஆம் திகதி ஒருவருக்கு இன்று வயது என்ன?
.............. ஆண்டு .......... மாதம் ................. நாள்

**31 தொடக்கம் 60 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடைகள் கீழே தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.**

31. எமது நாட்டின் தேசியக் கொடியில் பச்சை நிறம் குறிப்பது?
1. தமிழ் 2. சிங்களவர்
3. முஸ்லிம்கள் 4. பறங்கியர்

32. கிளையில்லா தாவரம்?
1. பலா 2. மா 3. பனை 4. இலுப்பை

33. செம்மஞ்சள் நிறத்தைப் பெற்றுக்கொள்ள சிவப்பு நிறத்துடன் கலக்க வேண்டிய நிறம்?
1. பச்சை 2. ஊதா 3. மஞ்சள் 4. நீலம்

34. எமது நாட்டிற்கேயுரித்தான பறவை?
1. செம்முகப் பூங்குயில் 2. மயில் 3. கிளி 4. கழுகு

35. இலங்கையின் மிகப்பெரிய மாவட்டம்?
1. யாழ்ப்பாணம் 2. அநுராதபுரம் 3. கண்டி 4. மாத்தளை

36. SLDA குறியீடு காணப்படும் பொருள்?
1. சிங்கர் பால்மாபெட்டி 2. பற்பசை
3. உப்புபைக்கற் 4. மீன்ரின்

37. மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டின் 2ஆம் படி முறை?
1. உதிப்பு 2. மலர்வு
3. மனதை தளர்த்துதல் 4. உடலை தளர்த்துதல்

38. தன்னைச் சுற்றி வளைய முடைய கோள்?
1. சனி 2. வியாழன்
3. புவி 4. செவ்வாய்

39. வானவில்லில் ஏழு நிறங்கள் உண்டு என்பதைக் கண்டறிந்த விஞ்ஞானி?
1. தோமஸ் அல்வா எடிசன் 2. மார்க்கோனி
3. சேர்.ஐசாக் நியூட்டன் 3. சார்லஸ்பபேஜ்

40. தாதுசேன மன்னனால் கட்டப்பட்ட குளம்?
1. மின்னேரியா 2. கலாவாவி
3. பசவக்குளம் 4. தீசவாவி

அடுத்த புதன் மிகுதி வெளிவரும்

# முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கு ஜனாதிபதி மைத்திரி உறுதியளிப்பு

## ஹிஸ்புல்லா தெரிவிப்பு



(கொழும்பு)

முஸ்லிம்களின் பாதுகாப்பு விடயத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளதாக, புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைத் தொடர்பு கொண்டு கலந்துரையாடிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டதாக ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் மேலும், கருத்துத் தெரிவிக்கையில், "கண்டி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தொடர்பு கொண்டு தெளிவாக எடுத்துக்கூறியுள்ளேன். பின்னர், ஜனாதிபதி மீண்டும் என்னுடன் பேசியிருந்தார்.

பாதுகாப்புச் சபை கூட்டப்பட்டு இராணுவம், அதிரடிப் படை மற்றும் பொலிஸார் ஆகியோருக்கு கடுமையான உத்தரவுகளை வழங்கியுள்ளதாக குறிப்பிட்டார்.

அத்துடன், இவ்வாறான சம்பவங்களை ஒருபோதும் தாம் அனுமதிக்கப்போவதில்லை என்றும் சம்பந்தப்பட்ட அனைவரையும் தயவு தாட்சண்யமின்றி கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் பணிப்புரை வழங்கியுள்ளதாகவும், முஸ்லிம்களின் பாதுகாப்பு விடயத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் உறுதியளித்தார்.

இதேவேளை, முஸ்லிம்கள் இவ்விடயத்தில் மிகவும் நிதானமாக உணர்ச்சிவசப்படாமல் செயற்பட வேண்டும். ஊர் தலைமைத்துவங்களுக்கு கட்டுப்பட்டு அவர்களது வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டும்.

இந்த சம்பவங்களின் பின்னணியில் இருக்கின்ற அத்தனை சதிகாரர்களுக்கும் எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், உண்மைக்கு புறம்பான தகவல்களை பரப்பி மக்களை குழப்பும் வகையில் சமூக ஊடகங்களை பயன்படுத்தாமல் சரியான தகவல்களை மாத்திரம் பகிர வேண்டும். 'இனவாத செயற்பாடுகளை கட்டுப்படுத்தாவிட்டால் காத்தான்குடியில் ஹிஸ்புல்லாஹ் தீக்குளிப்பதாக' உண்மைக்குப் புறம்பான தகவலொன்றும் பரப்பப்பட்டு வருகின்றன.

நான் ஒரு முஸ்லிம். ஒருபோதும் அவ்வாறான கருத்துக்களை தெரிவிக்கமாட்டேன். இவ்வாறான விடயங்களில் சமூகம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குடும்ப உறவுகளால் அதிகரித்துவரும் பெண்களுக்கெதிரான வன்முறைகள்

## இலங்கை குறித்து ஐ.நா. ஆய்வறிக்கை




(கொழும்பு)

இலங்கையில் இடம்பெறும் பெண்கள் கொலை மற்றும் வன்முறைகளில் அதிகம் மிக நெருங்கிய குடும்ப உறவுகளால் மேற்கொள்ளப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்டுள்ள ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் நிதியம் மற்றும் களனிப் பல்கலைக்கழக குழுவினருக்கிடையிலான சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கையில் இந்த ஆய்வு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொடர்பான நிதியம் முதல்முறையாக இலங்கையில் மேற்கொண்ட ஆய்வில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்களின் போது சம்பந்தப்பட்ட 60 சதவீத பெண்கள் நீதித்துறையின் உதவியை அல்லது சட்ட நடைமுறைக்கான விடயங்களை அணுகுவதில்லை என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

பாலின அடிப்படையில் இடம்பெறும் இயற்கைக்கு மாறான உயிரிழப்பிற்கான பங்களிப்பு காரணங்களை கண்டறியும் நோக்கில் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த கலந்துரையாடலிற்கு ஐக்கிய நாடுகளின் நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி றிட்சு நக்கீன் (Ritsu Nacken) கலந்துகொண்டதுடன், களனிப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க தலைமை தாங்கினார்.

அத்துடன் குறித்த கலந்துரையாடலில், களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தை சேர்ந்த பேராசிரியர் அனுருத்த எதிரிசிங்க, கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் சுபாங்கி ஹேரத், சாவித்திரி குணசேகர கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப்பிரிவு பேராசிரியர் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

# சர்வதேச மகளிர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு-மருதங்கேணி பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா நாளை 8ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளரும் சட்டத்தரணியுமான திருமதி கோசலை மதன், கௌரவ விருந்தினர்களாக மருதங்கேணி பிரதேச வைத்திய சாலை பல்வைத்திய நிபுணர் திருமதி ஆன்ட் தனுஷா ஜெயவர்த்தனன் , மருதங்கேணி கால்நடை வைத்திய அதிகாரி திருமதி பவித்திரா திருச்செல்வநாயகம், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி வளர்மதி அம்பிகைபாகன், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய கல்வியியலாளர் திருமதி ஜெயலக்சுமி உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7-19)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1349

Search for people, places and things Nagendram Home

### சாருஜன்

கோபத்துல மொபைல தூக்கி எறியம் போது கூட, சரியா பஞ்சு மெத்தைல எறியுறவங்க கிட்டதான் கத்துக்கனும்



கோபத்திலும் நிதானமாய் இருப்பது எப்படின்னு...?

### சந்திரன்

என்னாங்க செருப்பு என் கால கடிச்சிடுச்சி



பின்ன அதை மிதிச்சா அது என்னைய மாதிரி சும்மா இருக்குமா?

### சாருகேஷ்


எல்லோரையும் அநேக நேரங்களில் திருப்திப்படுத்துபவை



பணம் மட்டுமே!

### சாமினி


உண்மையில் இரண்டு இதயங்களைச் சுமப்பது



கர்ப்பிணிப் பெண்கள் மட்டுமே....

### சாளினி

எதிர்ப்பு இல்லாமல் கூட ஒரு மனிதன் வாழ்ந்து விடலாம்...



ஆனால் எதிர்பார்ப்பு இல்லாமல் வாழவே முடியாது!

### சாமந்தி

அலுவலகத்தில ஆங்கிலம் சரியாகப் பேசத் தெரியாதவர்களை திட்டாதீர்கள்..



ஒருவேளை அவர்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்த பரம்பரையில் வந்தவர்களாக இருக்கக்கூடும்..

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## அடித்தால் திருப்பி அடிப்போம்; கொலை செய்தால் நாமும் செய்வோம்

# இது சிங்கள பௌத்த நாடு

## ஞானசார தேரர் பகிரங்க எச்சரிக்கை

(கொழும்பு)

கண்டி - திகன, தெல்தெனிய பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள வன்முறைச் சம்பவத்தை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கண்டனம் தெரிவித்தார்.

கண்டியில் ஏற்பட்டுள்ள இந்த சம்பவத்தை எம்மால் சற்றும் ஏற்றுக்கொள்ள முடியாது. சிங்களம், முஸ்லிம் என்ற பேதம் இல்லாமல் அனைவரும் சமாதானமாக இருக்க வேண்டும்.

அதை விடுத்து இவ்வாறான அசம்பாவிதங்களில் ஈடுபட்டால் விளைவு விபரீதமாக இருக்கும் என எச்சரித்துள்ளார்.

இது சிங்கள பௌத்த நாடு, இந்த நாட்டில் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை முஸ்லிம் மக்களுக்கு நாம் சொல்லித்தருகின்றோம்.

கண்டியில் டிப்பர் வாகனத்தில் சென்ற 32 வயதுடைய குமாரசிங்க என்பவர் சிலரால் தாக்கப்பட்டு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.


குறித்த இளைஞன் சிறந்த சமூக சேவையாளர். ஒரு குடும்பஸ்தர். இவரை நம்பி மனைவி மற்றும் இரு பிள்ளைகள் இருக்கின்றார்கள். இவர் முஸ்லிம், சிங்களம் என்று பேதம் பார்க்காமல் அனைவருக்கும் உதவி செய்து வந்துள்ளார்.

இவர் வாகனத்தில் சென்ற போது ஆட்டோவில் வந்தவர்களுக்கு இடம் கொடுக்காத காரணத்தினால் அந்த வாகனத்தை பின்தொடர்ந்து சென்று அந்த இளைஞனை முஸ்லிம் இளைஞர்கள் தாக்கியுள்ளனர்.

இதனால் குறித்த இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவ்வாறான நிலையிலேயே கண்டியில் கலவரம் ஏற்பட்டுள்ளது.

தற்போது நாடும் நாட்டு அரசியலும் ஸ்திரமற்ற நிலையில் காணப்படுகின்றது. அரசாங்கமும் மக்களும் தற்போது பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் முஸ்லிம் மக்கள் சிந்தித்து செயலாற்ற வேண்டும் என்றும், தயவு செய்து வன்முறைகளில் இறங்க வேண்டாம் என்றும் ஞானசார தேரர்



கேட்டுக் கொண்டுள்ளார்.

இது பௌத்த நாடு. அடித்தால் திருப்பி அடிப்போம். கொலை செய்தால் நாமும் செய்வோம்.

ஆகவே வன்முறைகள் வேண்டாம். அமைதியாக இருக்குமாறு அறிவுறுத்துகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பல்கலைக்கழக தொழிற்சங்க ஏற்பாட்டில் கொழும்பில் நேற்று எதிர்ப்புப் பேரணி



(கொழும்பு)

பல்கலைக்கழக தொழிற்சங்க ஒன்றிணைந்த குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆர்ப்பாட்ட பேரணி காரணமாக நேற்று கொழும்பு நகர சபைக்கு அருகில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

5 கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் கடந்த 6 நாட்களாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், பல்கலைக்கழக தொழிற்சங்க ஒன்றிணைந்த குழுவால், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் அனைவரையும் கொழும்பிற்கு அழைத்து தற்போது எதிர்ப்பு பேரணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த போராட்டத்தால் அனைத்து பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைகளை பிற்போடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதனிடையே, பல்கலைக்கழக கல்விசாரா பணியாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவளிப்பதாக பல்கலைக்கழக நிறைவேற்று தர அதிகாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## அல்லைப்பிட்டியில் ஆங்கில பாடசாலை



(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகம் அல்லைப்பிட்டி சிந்தாமணி பிள்ளையார் கோவிலுக்கு அருகில் அமைக்கப்படவுள்ள, சர்வதேச ஆங்கிலப் பாடசாலைக்கான, அடிக்கல் நாட்டும் நிகழ்வு யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் கடந்த முதலாம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில், தீவக மறைக்கோட்ட குருமுதல்வரும், மண்டைதீவு- அல்லைப்பிட்டி பங்குத்தந்தையுமான அருட்பணி மனுவேற் பிள்ளை டேவிட் அடிகளார் உட்பட பல கத்தோலிக்க மத குருமார்களும், அல்லைப்பிட்டி மக்களும் கலந்து கொண்டனர். (இ-7)

## உற்பத்திப் பொருள் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) பிரதேசசெயலகம் நடத்தும் பெண்களின் உற்பத்திப் பொருள் கண்காட்சி நாளை 8ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 4 மணிவரை மருதங்கேணி பிரதேச செயலகத்தில் இடம்பெறும். (இ-7-19)

## சிலாபத்துறை பிரதான வீதியில் பயணித்த ஆட்டோ திடீரென தீப்பற்றி எரிந்து நாசம்

(கொழும்பு)

சிலாபத்துறை -அரிப்பு பிரதான வீதியில் சென்று கொண்டிருந்த ஆட்டோ ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை காலை திடீரெனத் தீப்பற்றியுள்ளது.

குறித்த ஆட்டோவை செலுத்திச் சென்றவர் உயிர் தப்பியுள்ள போதும் ஆட்டோ முழுமையாக தீயில் எரிந்து நாசமானது. சம்பவ இடத்திற்கு சென்ற சிலாபத்துறை பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)





## எதிர்வரும் மாகாணசபை தேர்தலை கலப்பு முறையில் நடத்தத்திட்டம்

## அமைச்சர் முஸ்தபா தகவல்

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபை தேர்தலை கலப்பு முறையில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக உள்ளூராட்சிமன்ற மற்றும் மாகாணசபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான ஆயத்தப் பணிகள் குறித்து தெளிவுபடுத்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,



"மாகாணசபைத் தேர்தலுக்கான எல்லைநிர்ணய பணிகள் நிறைவடைந்துள்ளன. இதற்கு நாடாளுமன்ற அனுமதி மாத்திரம் பெறப்படவுள்ளது.

கலப்பு தேர்தல் முறையை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நாடாளுமன்றம் அங்கீகரித்துள்ளது.

எனவே கலப்பு தேர்தல் முறைமையின் கீழாகவே மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும்.

அத்துடன், கலப்பு தேர்தல் முறையின் மூலம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இனம்காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை ஏற்படுத்தப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இணைந்த வடக்கு–கிழக்கிலேயே வன்முறைகளைத் தவிர்க்கலாம்

(ஏறாவூர்)


இணைந்த வடக்கு - கிழக்கில் சமஷ்டி தீர்வினைப் பெற்று தமிழ் பேசும் மக்கள் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்பதையே நாட்டில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறைகள் உணர்த்தி நிற்கின்றன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோரகல்லிமடு பகுதியில் உள்ள மாதர் அபிவிருத்தி சங்கங்களுக்கு கதிரைகள் வழங்கிவைக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில், "இணைந்த வடக்கு -கிழக்கில் ஒரு சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்துவதற்கு தமிழ் கட்சிகள் அனைத்தும் இணைந்து தமிழ் மக்களின் அனைத்தையும் பாதுகாக்க முன்வர வேண்டும்.

கடந்த காலத்தில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் கிழக்கில் முஸ்லிம் மக்கள் மீதும் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. தமிழ் பேசும் மக்கள் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதையே இவ்வாறான சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

எதிர்காலத்தில் வரவுள்ள புதிய அரசியல் யாப்பின் உருவாக்கத்தில் உறுதுணையாக இருக்க வேண்டும். இணைந்த வடக்கு-கிழக்கில் நாங்கள் ஒற்றுமையாக வாழக்கூடிய சூழ்நிலையினை நாங்கள் பேசி தீர்மானிக்க வேண்டும் என்பதையே முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் உறுதிப்படுத்தி நிற்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




# முதலுதவி பயிற்றுவிப்பாளர்களுக்கு யாழில் பயிற்சி



(யாழ்ப்பாணம்)

சென்.ஜோன் அம்புலன்ஸ் பயிற்சி நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற முதலுதவி பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி சென். ஜோன் அம்புலன்ஸ் யாழ்.மாவட்ட செ.செல்வரஞ்சன் தலைமையில் நடைபெற்றது. இதில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். மேலும் இலங்கையில் தமிழ்மொழி மூலமாக முதல் முறையாக முதலுதவி பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி வடக்கு மாகாணத்தில் நடைபெற்றது. சென்.ஜோன் அம்புலன்ஸ் தேசிய தலைமையகத்தின் ஆணையாளர் Dr.J.M.Nilam இப்பயிற்சி நெறியை வழங்கினார். இதில் திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத் தீவு, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் இருந்தும் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் உத்தியோகத்தர்கள் 85 இற்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றினர். (இ)

# சீமெந்து விலை அதிகரிப்பை அரசு ரத்து செய்ய வேண்டும்

(கொழும்பு)

சீமெந்து விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் விடுத்துள்ள அறிவிப்பை விரைந்து இரத்து செய்யுமாறு தேசிய நுகர்வோர் உரிமைகளை பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.

சீமெந்து விலை அதிகரிப்பு தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

இலங்கையில் சீமெந்து தயாரிப்பு நிறுவனங்களாக இரு பிரதான நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. அதே சந்தர்ப்பத்தில் மேலதிகமாக 24 சீமெந்து நிறுவனங்களும் இயங்கி வருகின்றன. வருடத்திற்கு சிறப்பான வருமானங்களை ஈட்டுபவையாகவும் இச்சீமெந்து நிறுவனங்கள் காணப்படுகின்றன.

2003 ஆம் ஆண்டு நுகர்வோர் தொடர்பான சட்டத்தின் அடிப்படையில் நோக்கும் போது சீமெந்து விலை அதிகரிப்பதற்கான நுகர்வோர் விவகாரங்கள் தொடர்பான ஆணையகத்தில் தனது அனுமதியை கோர வேண்டும். ஆனால் கடந்த வாரத்தில் ஓல்சிம் சீமெந்தின் விலை 30 ரூபாவால் அதிகரித்த விலையில் விற்கப்பட்டு வருகின்றது. சிலரின் அரசியல் நோக்கத்துக்காகவே இவ்விலை உயர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஓல்சிம் சீமெந்து பக்கற் ஒன்றின் விலை 930 ரூபாவாக காணப்படுகின்றது. 30 ரூபாய் விலை அதிகரிப்பினால் ஓல்சிம் சீமெந்து 960 ரூபாய் அதிக விலையில் விற்கப்படுகின்றது. இது நுகர்வோரின் உரிமைகளை மீறும் வகையில் உள்ளன. இதனால் நுகர்வோர் சீமெந்து கொள்வனவு செய்வதில் பாரிய சிக்கலினை மேற்கொண்டு வருகின்றனர். சீமெந்து விலை அதிகரிப்பு தொடர்பில் விரைந்து தீர்மானத்தை அரசாங்கம் எடுக்க வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# இலங்கையில் வருடாந்தம் 1700 சிசு மரணங்கள்

## சுகாதார அமைச்சு அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் வருடாந்தம் 1700 சிசு மரணங்கள் சம்பவிக்கின்றன. இவை தாயின் கருவறையில் சிசு உருவாகி 28 வாரங்களின் பின் ஏற்படக்கூடிய கருச்சிதைவினால் ஏற்படக்கூடியன வாகும். குழந்தை பிறந்து முதல் வாரத்திற்குள் 1550 சிசு மரணங்கள் சம்பவிக்கின்றன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

கொழும்பு சுகாதார பணிமனையில் உலக பிறவிக் குறைபாடுகள் தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தாய் அல்லது தந்தையின் பரம்பரையில் காணப்படும் குறைபாடுகளே சிசு மரணங்களுக்கு பிரதான காரணங்களாகும். ஆரோக்கியமற்ற, வலது குறைந்த குழந்தைகள் பிறக்க கர்ப்பிணியின் சூழல், தாயிடம் காணப்படும் நோய்கள், மனநிலை, பாவிக்கும் மருந்து வகைகளின் தாக்கம் என்பன காரணமாகின்றன.

அதேவேளை 3.5 சதவீதமான சிசு மரணங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் இதுவரையில் கண்டறியப்படவில்லை. இந்நகைய கருச்சிதைவானது ஆண்டுக்கு சுமார் 100000 கர்ப்பிணி தாய்மாருக்கிடையே நிகழ்கின்றது.

கருவுற்ற தாய் தனது குழந்தையின் பிரசவம் தொடர்பில் அக்கறையுடன் இருக்க வேண்டும். பெரும்பாலான தாய்மார் தனது உடல் ஆரோக்கியம் குறித்து அக்கறை காட்டும் அதேவேளை தனது உள ஆரோக்கியம் தொடர்பில் அக்கறை கொள்வதில்லை.

இதனால் பிறக்கும் குழந்தை ஆரோக்கியமற்றதாகவும் உடல் உபாதைகளுக்கு ஆளான குழந்தையாகவும் பிறக்கின்றன. சில தாய்மார்கள் மது அருந்தும் பழக்கமுடையவர்களாயின், பிறக்கும் குழந்தை கண்கள் ஒடுங்கியவாறும் வாயின் மேலுதடு சற்று தூக்கிய நிலையிலும் பிறக்க வாய்ப்புண்டு. ஆனால் இத்தகைய குழந்தைகள் ஆரோக்கியமான வர்கள் என நினைக்கின்றார்கள். ஆனால் அவையும் ஒருவித குறைபாடுகளாகும் எனப் பலருக்குத் தெரிவதில்லை.

மேலும் பரம்பரையில் ஏதேனும் ஒரு குழந்தை பிறந்து சில நாட்களில் இறக்குமாயின் அல்லது ஏதேனும் குறைபாடுகளோடு பிறந்து இறக்குமாயின் அவ்வாறு இறந்த குழந்தையை கட்டாயம் மரபணு சோதனைக்கு உட்படுத்த வேண்டும். ஆனால் பொதுமக்கள் அதை விரும்புவதில்லை. மூடநம்பிக்கைகளினால் தனது அடுத்த பிரசவத்தையும் முறையாக செய்ய முடியாமல் ஆரோக்கியமான குழந்தையை பெற்றெடுக்க தவறுகின்றனர்.

மரபணு சோதனை செய்வதனூடாக குழந்தை இறக்க காரணம் என்ன, அடுத்த குழந்தைக்கும் அதே மாதிரியான பிரச்சினைகள் ஏற்படுமா போன்ற பல கேள்விகளுக்கான தீர்வினை கண்டறியலாம்.

எனவே குழந்தை பிறப்பு தொடர்பில் தாய், தந்தை விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம். மேலும் தனது கர்ப்ப காலத்தில் பிரசவம் தொடர்பில் வைத்தியர்களால் முன்வைக்கப்படும் ஆலோசனைகளை கேட்டு அவர்களால் பரிந்துரைக்கப்படும் மாத்திரைகளை மட்டுமே உட்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# நியமனம் குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)


அபிவிருத்தி உத்தியோகத்தர் (D.O) நியமனம் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாக கலந்துரையாடல் எதிர்வரும் 14ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கொழும்பு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சின் முன்னால் நடைபெறவுள்ளதாக ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

எனவே இது தொடர்பாக விண்ணப்பித்த அனைத்து வேலையற்ற பட்டதாரிகளும் இக்கலந்துரையாடலில் அவசியம் கலந்து கொள்ளுமாறு அச்சங்கம் பட்டதாரிகள் அனைவரையும் கேட்டுள்ளது.

மேலதிக தொடர்பிற்கு 071 353 3827, 077 334 4611 தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனங்களை விரைந்து பெற ஒன்றிணைந்த பட்டதாரிகள் சங்கத்தினால் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சின் (கொழும்பில்) முன் இடம்பெறவுள்ள குறித்த கலந்துரையாடலில் வடக்கு மாகாண அனைத்து வேலையற்ற பட்டதாரிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கேட்டுள்ளது. (இ-7)

# தாக்கப்பட்ட பள்ளிவாசலை பார்வையிட்டார் ஹக்கீம்





(கண்டி)

கண்டி, தென்னகும்புர பகுதியில் தாக்கப்பட்ட பள்ளிவாசலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீம்நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பள்ளிவாசல் தாக்கப்பட்டு சில மணி நேரங்களிலேயே சம்பவ இடத்திற்கு சென்ற அமைச்சர், தாக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டதோடு, பள்ளிவாசல் நிர்வாகத்தினருடனும் கலந்துரையாடினார்.

பார்வையிட்டதன் பின்னர், குறித்த பகுதிக்கு பாதுகாப்பு வழங்குமாறும் பொலிஸாரிடம் கேட்டுக்கொண்டார்.

குறித்த பள்ளிவாசலுக்கு பெற்றோல் குண்டு வீசப்பட்டதாக கூறப்பட்டபோதும், பள்ளிவாசலுக்கு எந்தவொரு சேதமும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சட்டத்தின் முன் அனைவரும் சமம் தேசவழமைச் சட்டத்தில் பெண்கள்?

சட்டம் என்பது அனைவருக்கும் பொதுவானது. இதனாலேயே இறைவனைக்கூட இந்துக்கள் சட்டநாதர் என்னும் பெயரில் வணங்குகின்றனர். இருப்பினும் சட்டம் ஏழைகளுக்கொரு வடிவிலும் பணக்காரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இன்னொரு வடிவிலும் செயற்படுகின்றது என்றார் அறிஞர் பேர்னாட்ஷா. மரபுகளையும் வழுக்காறுகளையும் மையமா கக் கொண்டு கட்டமைக்கப்பட்டிருக்கும் சட்டமானது யாவருக்கும் சமமான அங்கீகாரத்தையும் சுய கௌரவத்தையும் வழங்க வேண்டிய பாரிய பொறுப்புடைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. ஆயினும் பெண்கள் தொடர்பான இலங்கையின் தனியார் சட்டங்கள் தொடர்பான பாரிய அதிருப்திகளும் விமர்சனங்களும் சாதாரண சாமானிய மக்களிடையே மட்டுமன்றி பல பழுத்த சட்ட நியாயாதிக்கவாதிகளிடம் கூட நிலவி வருகின்றது. நாய் என்றால் குட்டை இருக்கும், சட்டம் என்றால் ஓட்டை இருக்கும் என சாதாரண பொது மக்களே விமர்சிக்குமளவுக்கு இலங்கையின் தனியார் சட்டங் களாகிய தேசவளமைச் சட்டம், முஸ்லிம் சட்டம், கண்டியன் சட்டம் என்பன பாரிய அநீதியை பெண்களுக்கு இழைத்துள்ளன. இதனாலேயே பிரபல குடியியல் வழக்கறிஞரும், பெண்ணியதத்துவவியல் சிந்தனையாளருமாகிய பேராசிரியர் சாவித்திரி குணசேகர கருத்து வெளியிடும்போது அதிகாரத்திற்கு எதிரான வழக்குகளில் கறுப்பு அங்கி அணிந்து பாதிக்கப்பட்ட ஏழை பெண்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்கலாம் என்பது இலங்கையில் இன்னமும் பகற்கனவே எனக் குறிப்பிட்டார்.

2500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இலங்கைத் தீவின் வரலாற்றில் பெண்களின் பங்களிப்பு என்பது மிகவும் கனதியானதும் அர்த்தபுஷ்டி மிக்கதுமாக விளங்குகின்றது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் கூட மன்னராட்சிக் காலத்தில் விகாரமாதேவி, சுசுலாதேவி, லீலாவதி அரசி போன்றவர்கள் முக்கியஇடம் பிடித்தனர். சுதந்திரத்திற்கு பின்னரான ஜனநாயக அரசியலில் 1960 ஆம் ஆண்டு உலகிற்கே முதலாவது பெண் பிரதமரை அறிமுகம் செய்த பெருமை இலங்கைத் தீவிற்கு உண்டு. மேலும் 11 ஆண்டுகளாக இலங்கையின் அரசியல் தலைவராக, அரசாங்கத்தின் தலைவராக, முப்படைகளின் கட்டளைத் தளபதியாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விளங்கினார். இது ஒருபுறமிருக்க இலங்கையின் பிரதான வருவாய்த்துறைகளாக அமைந்திருக்கும் முதல் மூன்று துறைகளிலும் கணிசமான வகிபாகம் செலுத்துவதும் பெண்களே. அவையாவன, இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழும் பெருந் தோட்ட தேயிலை உற்பத்தியில் 80 விழுக்காடு பங்களிப்பு பெண்களாலேயே வழங்கப்படுகின்றது. இரண்டாவது இலங்கையின் பாரிய வருவாயாகிய மத்திய கிழக்காசியாவில் இருந்து கிடைக்கும் அந்நிய செலாவணி பணியாளர்களாக செல்வதில் 71 சதவீதம் பெண்களே. மூன்றாவது பாரிய வருவாயாகிய கொழும்பு சுதந்திர வர்த்தக வலயத்தின் ஆடை ஏற்றுமதி கைத்தொழிலில் முழுமையான பங்களிப்பு பெண்களாலேயே வழங்கப்படுகின்றது. இது ஒருபுறமிருக்க தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமைக்காகவும் தங்களை தாங்களே ஆள வேண்டுமென்ற விடுதலை போராட்டத்தின் 30 ஆண்டு கால வரலாற்றில் பெண்களின் பங்களிப்பு பல களமுனைகளில் ஆண்களுக்கு நிகராக அமைந்ததென போராட்டகுறிப்புகள் அறிவிக்கின்றன.



நாளை சர்வதேச மகளிர் தினம். இதனை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகின்றது.

இப்படியெல்லாம் அமைந்தாலும் கூட சட்டம் பெண்களுக்கான உரிமைகளை தனியார் சட்டங் கள் Personal Laws ஊடாக வரையறை செய்வது வேதனையிலும் வேதனையானது. இது வேலியே பயிரை மேய்வதற்கு ஒப்பானது. அடிப்படையில் இலங்கையின் தாய் சட்டமாக விளங்கும் அரசியலமைப்பின் 12(1) ஆவது உறுப்புரைச் சட்டத்தின் முன் அனைவரும் எவ்வித இன, மத, மொழி, சாதி, பால், அரசியல் மற்றும் பிறப்பிடம் தொடர்பான பாரபட்சமோ பாகுபாடோ இன்றி அனை வரும் சமமானவர்கள் என வலியுறுத்துகின்றது. இது அரசியலமைப்பின் மீள முடியாத Enrichment Provision ஆக அமையப் பெற்றாலும் அரசியலமைப்பின் 16(1) உறுப்புரையின் படி இலங்கையின் தனியார் சட்டம் என வகுக்கப்படும் தேசவளமைச் சட்டம், முஸ்லிம் சட்டம், கண்டியன் சட்டம் ஆகியவற்றோடு 12(1) ஆவது உறுப்புரை முரண்படுமாயின் உறுப்புரை 16(1) தான் மேலோங்கி (Prevail) ஆகி நிற்க 12(1) சட்ட வலிதற்றதாக மாறும். ஆகவே அடிப்படை மனித உரிமையினை சமமாக வலியுறுத்தும் All are equal before law என்கிற ஜனநாயக சித்தாந்தம், சமூக வழக்காறுகளுக்காகவும் முன்னைய சிறந்நாள் மரபுகளுக்கு முன்னால் தோற்றுப் போகின்றமை இலங்கையின் சனநாயகத்தினையும் இலங்கையின் நீதித் துறையின் ஆளுமையையும் கேள்விக்குட்படுத்துகின்றது.

தனியார் சட்டங்கள் என்றால் என்ன? ஆரம்ப காலத்தில் இலங்கையில் தேசவழமைச் சட்டம், முஸ்லிம் சட்டம், கண்டியன் சட்டம் என்பவற்றோடு முக்குவர் சட்டமும் காணப்பட்டது. பிற்காலத்தில் மட்டக்களப்பு கரையோர பகுதி களில் நிலவிய முக்குவர் சட்டம் இல்லா தொழிக்கப்பட்டது. (aboli shed).

இத் தனியார் சட்டங்கள் சில குறிப்பிட்ட பிரதேசங்களில் மட்டும் அவரவர் பண்பாடு, கலாசாரம், நீண்ட நெடுங்காலமாக நிலவி வரும் மரபுகளை மையமாக கொண்டு வகுக்கப்பட்ட சட்ட ஒழுங்கு விதிகளாகும். உதாரணமாக தேசவழமைச் சட்டம் என்பது இலங்கைத் தீவின் வட மாகாணத் தமிழர்களுக்கு மட்டுமே உரித்தான குடியியல் சார் சட்டமாகும். அதே போல கண்டியன் சட்டமென்பது கண்டி மாகாணத்தில் வாழும் மக்களுக்குரிய ஓர் இடம் சார் சட்டமாகும். மேலும் முஸ்லிம் சட்டமென்பது இலங்கையின் எப் பாகத்திலும் வாழும் முஸ்லிம் மக்களின் சமய வழக்காறுகளை பிரதிபலிக்கும் ஆள்சார் சட்டமாகும். இங்கே தனியார் சட்டங்க ளில் உள்ள பிரதான சவால் யாதெனில், அவை ஆணாதிக்க மனப்பாங்குடனும் பெண்களுக்கான சமத்துவத்தையும் சட்டரீதியாக வழங்குவதில் பல வழிகளில் தோற்றுப் போயிருக்கின்றது.

குறிப்பாக தேசவழமைச் சட்டத்தின் யாழ்ப்பாண திருமணம் சுட்டளைச் சட்டத்தின் Section 6 குறிப்பிடும் போது திருமணமான பெண் ஒருவர் தன்னுடைய பெற்றோரினால் வழங்கப்பட்ட சீதனச் சொத்தை விற்க வேண்டுமானால் கூட கணவரினுடைய கட்டாய சம்மதத்தினை வலியுறுத்துகின்றது. இச் சட்ட ஏற்பாடு பால் நிலை சமத்துவம் பற்றியும் பெண்களின் சொத்துரிமை தொடர்பில் பாரிய கேள்விக் குறியாகவே அமைகிறது. வேதனை என்னவெனில் போருக்கு பின்னரான நிலைமாறு கால நீதி (Transitional Justice) நீதிப் பருவத்தில் கணவன் இறந்து விட்டாரோ உயிருடன் இருக்கிறாரோ என அறியாமலிருக்கும் 10,000 குடும்பத் தலைவிகளின் நிலை இச் சட்டத்துடனூடாக மேலும் அவலமாக்கப்பட்டுள்ளது. போரும் அது தந்த வடுக்களும் ஆறாத நிலையில் தமது சொத்துக்களை விற்றாவது தமது சீவனோபாயத்தை கைக்கொள்ள கணவனின் சம்மதம் என்பது பாரிய இட்டுக்கட்டையாகவுள்ளது. வலிந்து காணாமல் செய்யப்பட்ட கணவன்மாரின் மனைவிகள் தமது கணவன் இன்னமும் உயிரோடு தான் இருப்பார் என்ற அதீத நம்பிக்கையில் இருப்பதால் மரணச் சான்றிதழையும் பெற மறுக்கின்றனர். இதனால் பாரிய பொருளாதார சுமைகளையும் சுமக்கின்ற அவலத்தினுள் வாழ்கின்றனர். இது ஒரு புறமிருக்க மறு புறத்தே யாழ். பல்கலை சட்ட மாணவர்கள் சென்ற ஆண்டு மேற்கொண்ட கருத்துக் கணிப்பில் கணவனின் சம்மதத்துடனேயே பெண்கள் தமது சொத்துக்களை கைமாற்றவோ விற்கவோ முடியும் என்ற சட்ட ஏற்பாடு தற்போதைய சூழ்நிலையிலும் சரியானதே என சில பெண் அரச ஊழியர்கள் வாதிட்டமை பெண்ணடிமைத்தனம் இப்போதும் பெண்களாலேயே வழி மொழிப்படுகின்றது என்ற அச்ச உணர்வையும் உண்டு பண்ணுகிறது. மேலும் யாழ்ப்பாண திருமண கட்டளைச் சட்டத்தின் 3 (1) பிரிவானது வட மாகாணத்திலிருந்து பிறந்த பெண் வடமாகாணத்தை சேராத ஆணொருவரை திருமணம் செய்யும் போது தேச வழமைச் சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட மாட்டார் எனவும் 3(2) பிரிவின்படி பெண் ஒருவர் வட மாகாணத்தில் பிறக்காது விடினும் வடமாகாணத்தில் பிறந்து தேசவழமைச் சட்டத்தால் அப் பெண்ணும் தேசவழமைச் சட்டத்தாலேயே ஆளப்படுவாள் என சட்டம் இடித்துரைக்கின்றது. மேற்படி சட்ட சிந்தாந்தங்களை வேலுப்பிள்ளை எதிர் சிவகாமிப்பிள்ளை பெர்னாண்டோ எதிர் புரொக்டர் ஆகிய வழக்குகள் சிறப்பாக நிறுவியுள்ளன. இவை யாழ்ப்பாணத்தில் ஆணாதிக்க மனநிலையை சட்ட ரீதியாக நிறுவல் செய்கின்றன. மேலும் இதுபோன்றே முஸ்லிம் திருமணச் சட்டம் திருமண ஏற்பாடுகள் குறித்து பேசும் போது மணமகளின் சம்மதம் அடிப்படையான தொன்றாக கருதப்படுவது கிடையாது. மணமகளின் தந்தைக்கு அல்லது சகோதரனுக்கோ அவ்வுரிமை உண்டென்பது பெண்களின் அடிப்படை உரிமையை கேள்விக்குள்ளாக்குகிறது.

மேலும் முஸ்லிம் சட்டத்தின் பிரகாரம் விதவைகளுக்கான சொத்துப்பிரிப்பும் நியாயமான தாக அமைவதில்லை. அத்துடன் தத்தெடுக்கப்பட்ட வளர்ப்புப் பிள்ளைகளுக்கு எவ்விதமான சொத்துரிமையும் வளர்ப்புப் பெற்றோரிடமிருந்து பெற முடியாது. இச் சட்டவேற்பாட்டின் படி வளர்ப்பு பிள்ளை பெண்ணாக இருப்பினும் அதன் எதிர்காலம் பற்றிய நம்பிக்கை இருள் மயமானதாகவே அமையும். அது போன்றே கண்டியச் சட்டத்திலும் "தீக்" என்ற மரபின் படி திருமணம் செய்யும் பெண்களுக்கும் சட்டரீதியானசொத்துரிமை வரையறை செய்யப்படுகின்றது. ஒட்டு மொத்தத்தில் ஒரு நாட்டின் நீதித் துறையானது அந் நாட்டு பெண்களின் மனித உரிமைகளை பாதுகாக்கும் இறுதியான நம்பிக்கை பாதுகாவலனாகவே அமைய வேண்டுமே தவிர பெண்களின் உரிமைகளை அழித்தொழிக்கும் அபாய கருவியாக அமைதல் கூடாது.

ஸ்ரீ. சிவஸ்கந்தஸ்ரீ
சட்டத்துறை மாணவன்
யாழ்.பல்கலைக்கழகம்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 70 | 62 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 50 | 60 | 50 |
| தக்காளி | 20 | 20 | 25 | 40 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 40 | 40 |
| கோவா | 30 | 45 | 40 | 50 | 70 |
| கரட் | 80 | 100 | 70 | 140 | 70 |
| பூசணி | 60 | 40 | 40 | 80 | 50 |
| புடோல் | 40 | 40 | 30 | 60 | 70 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 80 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 85 | 100 | 120 |
| பாகற்காய் | 140 | 140 | 110 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 70 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 80 | 60 |
| பயற்றங்காய் | 60 | 60 | 40 | 80 | 80 |
| லீக்ஸ் | 120 | 160 | 30 | 140 | 160 |
| பீற்றூட் | 220 | 30 | 30 | 50 | 160 |
| குடமிளகாய் | 80 | 100 | 45 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 800 | 600 |
| போஞ்சி | 80 | 120 | 70 | 200 | 120 |
| கத்தரிதம்புரா | 60 | 30 | 50 | 60 | 50 |
| கீரை-1பிடி | 30 | 20 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 70 | 30 | 40 | 60 | 40 |
| தேங்காய்(ஒன்று) | 90 | 100 | 35-90 | 75 | 90 |
| இராசவள்ளி | 160 | 160 | 140 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 80 | 70 | 120 | 100 |
| முள்ளங்கி | 20 | 60 | 30 | 40 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 40 | — | 80 | 70 |

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் பிரச்சினையை சர்வதேசம் தீர்த்திருந்தால்...

கண்டியில் முஸ்லிம் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட இன வன்மம் இலங்கையின் உள்ளார்ந்த நிலைப்பாடு என்ன? என்பதை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியுள்ளது.

ஒரு நோயாளியை எக்ஸ்றே எடுத்தும் ஸ்கானிங் செய்தும் நோயை நிர்ணயம் செய்வது போல, இலங்கை நாட்டை ஸ்கானிங் செய்து பார்த்தால்; அம்பாறையிலும் கண்டியிலும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக நடந்த வன்செயல், இலங்கையில் இருக்கக்கூடிய பேரினவாத நோயை கண்டறிய முடியும்.

கண்டியில் முஸ்லிம் மக்களின் வீடுகளையும் வர்த்தக நிலையங்களையும் எரியூட்டிய கொடுஞ் செயல் கண்டு இதயம் பதைபதைக்கிறது.

இந்த நாட்டில் தனித்துச் சிங்களவர்கள் மட்டுமே வாழ வேண்டும் என்பதுதான் பேரினவாதத்தினதும் குறிப்பிட்ட பௌத்த பிக்குகளினதும் நினைப்பாக உள்ளது.

காலத்துக்குக் காலம் பௌத்த சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களைக் கொன்று குவித்து அவர்களின் சொத்துக்களையும் கபளீகரம் செய்ததன் காரணமாகவே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

எனினும் அரசாட்சி, ஜனநாயகம் என்ற பெயரால் அடிப்படைப் பிரச்சினைகளை மறைப்புச் செய்து; தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதமாக பேரினவாத அரசுகள் வெளிக்காட்டி நின்றன.

இலங்கை ஆட்சியாளர்களின் சூழ்ச்சிகளை நம்பிய உலக நாடுகள் இலங்கை அரசைக் காப்பாற்றுவதில் கவனம் செலுத்தினவேயன்றி, தமிழ் இளைஞர்கள் போராட வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானது ஏன்? தமிழ் மக் களின் விடுதலைப் போராட்டத்துக்குப் பின்பேனும் இலங்கை அரசு உரிமைப் பகிர்வைச் செய்ததா? என்பது பற்றி எந்தக் கவனிப்பையும் மேற்கொள்ளவில்லை.

ஆம், 2009ஆம் ஆண்டு வன்னி யுத்தம் முடிந்த கையோடு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு முடிவுகட்டு; சிறுபான்மை இன மக்களின் உரிமையைக் கொடு என்று இலங்கை அரசுக்கு உலக நாடுகள் உத்தரவு பிறப்பித்து அதை நடைமுறைப்படுத்தி இருந்தால்,

இன்று அம்பாறையிலும் கண்டியிலும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்செயல் நடந்திருக்க மாட்டாது.

ஆக, உலக்நாடுகளின் அசமந்தப் போக்கும் சிறுபான்மை இன மக்களின் உரிமைசார் விடயத்தில் இருக்கக்கூடிய சர்வதேச சட்ட நியதிகள் உரியவாறு பின்பற்றப்படாமையும் சிறுபான்மை இன மக்கள் பேரினவாதம் கக்குகின்ற தீயில் கருகிப் போவதுதான் விதியாயிற்று.

எதுஎவ்வாறாயினும் கண்டியில் நடந்த வன்செயல் தமிழ் – முஸ்லிம் மக்களிடையே ஏற்பட வேண்டிய ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தி நிற்கிறது என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

இதுபற்றி இனியேனும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் சிந்திக்க வேண்டும்.

## கண்டியில் இடம்பெற்ற கலவரம்

# சமாதானத்தை சீர்குலைத்து அச்சநிலையை ஏற்படுத்தியுள்ளது

### பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தெரிவிப்பு

கண்டிப் பகுதியில் இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் மீண்டும் இந்த நாடு கொடிய இனவாத சேற்றுக்குள் புதைக்கப்பட்டு நிம்மதியற்ற சமாதானம் சீர்குலைக்கப்பட்ட அச்சம் சூழ்ந்த ஒரு சூழலுக்குள் எமது மக்களை தள்ளிவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தெரிவித்துள்ளார்.

ஒரு சாரதி சில இளைஞர்களால் தாக்கப்பட்டு உயிரிழந்த சம்பவமானது தனிப்பட்ட நபர்களுக்கு இடையே ஏற்பட்ட முறுகல் நிலையை உருவாக்கியது. இது ஒரு சட்டபூர்வமாக தண்டனைக்குரிய குற்றவியல் குற்றமாகும். இது சம்பந்தமாக இத்தாக்குதலை நடத்திய சில இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இப்படியான விரும்பத்தகாத முறை மீறல்கள் நடப்பது என்பது இடம்பெறும் சம்பவங்கள்தான். தனிப்பட்ட நபர்களுக்கிடையே மோதல்கள் ஏன் கொலைகள் தொடரபாகக்கூட நடவடிக்கை எடுப்பதற்காகவே பொலிஸ்திணைக்களம், நீதிமன்றம், சிறைச்சாலை என்பன உள்ளன.

ஆனால், இப்படியான சம்பவங்களுக்கு இனவாதம் பூசப்பட்டு, தனிப்பட்ட நபர்களுக்கிடையேயான பிரச்சினைகளை இனங்களுக்கு இடையேயான மோதல்களாக மாற்றி வன்முறைகளில் ஒரு பிரதேசத்தையே தள்ளுவது எவ்விதத்திலும் அனுமதிக்கப்படக்கூடியதல்ல.

இது நாட்டின் ஒட்டுமொத்த அமைதியையும் குலைக்கும் ஒரு பயங்கரவாத நடவடிக்கை என்றே நாம் கருதுகிறோம்.

கண்டிப் பகுதியின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் நீண்டகாலமாகவே ஒற்றுமையாகவும் ஒருவரையொருவர் நல்லுறவைப் பேணியும் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் கண்டி மாவட்டத்தையே கலங்க வைக்கும் இன மோதல்கள் கட்டவிழ்த்துவிடப்படுகின்றன என்றால் அதற்குப் பின்னால் இனவாதத்தின் அரூபக் கரங்கள் வலிமையுடன் செயற்பட்டுள்ளன என்பதை எம்மால் தெளிவாகவே புரிந்து கொள்ள முடியும்.

எனவே இப் பிரச்சினை பற்றியும் இது உற்பத்தியான உண்மையான மூலம் தொடரபிலும் இது பெருப்பிக்கப்பட்டு மோசமான வன்முறையாக மாற்றப்பட்டமையின் பின்னாலுள்ள சக்திகள் பற்றியும் நாம தெளிவான ஒரு புரிதலுக்கு வரவேண்டியவர்களாகவுள்ளோம்.

சாதாரணமாக வன்முறைகளில் முன்னின்று செயற்படும் ஏவல் பிசாசுகளை கைது செய்வதும் தண்டனை அளிப்பதும் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையப் போவதில்லை.

பிரச்சினையின் மூல வேர் கண்டுபிடிக்கப்பட்டு அகழ்நதெடுக்கப்பட்டு அழிக்கப்படாவிட்டால், இத்தகைய துர்ப்பாக்கிய நிலைமைகள் மீண்டும் மீண்டும் முளைவிடும் என்பதில் எவ்வித சந்தேகத்துக்கும் இடமில்லை.

அதை சட்டத்தின்மூலமோ நீதிமன்றத்தின் மூலமோ நிறைவேற்றிவிட முடியாது. அடிப்படையில் இவற்றுக்குப் பின்னால் நின்று செயற்படும் அரசியல் ஆதாயத்துக்காக இனவாதத் தீயை மூட்டிவிடும் தீய சக்திகள் இனங்காணப்பட வேண்டும்.

அவர்களை கட்டுப்படுத்தும் வகையில் துணிச்சலான நடவடிக்கைகளை எடுப்பதுடன், அவர்களை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தும் முயற்சிகளும் வேகமாக எடுககப்படவேண்டும்.

இன்று சில முஸ்லிம் தலைவர்கள் வடக்கு - கிழக்கு இணைப்புக்கு எதிராக குரல் கொடுத்து வருகின்றனர். வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது முஸ்லிம் மக்களையும் தமிழ் மக்களையும் ஒன்றிணைத்து பலமான சக்தியாக உருவாக்கி விடும் என்ற காரணத்தால் இனவாத சக்திகள் அதை கடுமையாக எதிர்த்தன.

அதேவேளையில் வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்க்கும் முஸ்லிம் தலைமைகள் சிங்கள இனவாதிகளின் அபிலாசைகளுக்கு செயற்படுகின்றன என்பதை அவர்கள் புரிந்துகொண்டு அந்த மாயையில் இருந்து விடுபடவேண்டும் என்று உரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நாம் இனவாத சக்திகளை திருப்திப்படுத்துவதன் மூலம் எமக்கான உரிமைகளை பெறமுடியும்என நினைப்பது எவ்வளவு முட்டாள்தனம் என்பதை அண்மையில் இடம்பெற்ற ஹிந்துல, அம்பாறை, கண்டி போன்ற இடங்களில் இடம்பெற்ற வன்முறைகள் உணர்த்தி நிற்கின்றன.

எனவே அம்பாறை, கண்டி ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக உண்மைக் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின்முன் நிறுத்தப்படவேண்டுமென்பதையும் அவர்களின் பின்னால் நின்று அவர்களை இயக்கிய இனவாத சக்திகள் மக்கள் முன் அம்பலப்படுத்தப்பட்டு அவர்களின் நடவடிககைகள் கட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டுமென்பதையும் நான் இந்த உயரிய சபையில் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதேவேளையில் முஸ்லிம்களுக்கு எதிரான அநீதிகளை கண்டித்து தமிழ்மக்களும் தமிழ்மக்களுக்கு எதிரான அநீதிகளை கண்டித்து முஸ்லிம் மக்களும் தமிழ் பேசும் மக்கள் என்ற முறையிலும் ஒடுக்கப்படும் சிறுபான்மை இனம் என்ற வகையிலும் குரல்கொடுக்க வேணடுமஎனத்தெரிவித்துள்ளார். (ம)

## வவுனியா பேருந்து நிலையத்தில் கஞ்சாவுடன் இளைஞன் கைது

வவுனியா பொலிஸ் நிலையப்பிரிவில் உள்ள புதிய பேருந்து நிலையத்தில் வைத்து 2 கிலோவும் 117 கிராமும் நிறையுடைய கேரளக் கஞ்சாவுடன் வந்தேகம பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மகிந்த வில்வ ஆராச்சி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் சந்தேகத்திற்கிடமான வகையில் காணப்பட்ட நபர் ஒருவரை தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது அவரது பயணப் பையினுள் நுட்பமான முறையில் உருமறைப்புச் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த 2 கிலோவும் 117 கிராமும் நிறையுடைய கேரளக் கஞ்சாவுடன் வந்தேகம பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப் பட்டுள்ள தடயப் பொருள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன், கைதான சந்தேக நபரிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபரை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிமேலும் தெரிவித்துள்ளார். (ம-15,281)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### மனப்படகின் பாயை விரி



✦ பல ஆண்டுகளாக பூட்டிக் கிடக்கும் அறை இருண்டு கிடக்கும். ஆனால், அந்த அறைக்குள் விளக்கினைக் கொண்டு வந்த உடனேயே இருள் மறைந்து ஒளி பரவும். அதுபோல, இறைவனின் கருணைப் பார்வை பட்டவுடனே யே பல பிறவிகளில் செய்த பாவங்களும் உடனேயே நீங்கிவிடும்.

✦ இறைவனின் அருள் என்னும் காற்று இடையறாது வீசிக் கொண்டு தான் இருக்கிறது. வாழ்க்கை என்னும் கடலில் முன்னேற விரும்பினால் உனது மனமாகிய படகின் பாயை விரித்தால் கடலைக் கடந்து கரை சேரலாம்.

✦ இறைவனின் திருப்புகழைப் பாடும் போது, கைகளை அசைத்துக் கொண்டும், இசைத்துக் கொண்டும் பாடுவாயாக. அப்போது பாவம் என்னும் பறவைகள் பறந்தோடிப் போகும்.

✦ சேற்றில் புரள்வது தான் குழந்தையின் இயல்பு. ஆனால், தாய் குழந்தையை அப்படியே விடாமல் குளிக்கச் செய்து சோறூட்டுவாள். அதுபோல பாவம் செய்வது மனித இயல்பு என்று கடவுள் விட்டுவிடுவதில்லை. கடைத்தேற்றும் வழிமுறைகளை அருள் செய்கிறார்.

✦ நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாமே உண்டு. நம்பிக்கை இல்லாதவனுக்கோ ஒன்றுமே இல்லை. நம்பிக்கை தான் வாழ்வு. வேண்டாத சந்தேகமோ, மனிதனை அழிவுப் பாதையில் கொண்டு சென்று விடும்.

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**வீடு கட்ட எந்த நட்சத்திரம் உகந்தது?**

அச்சுவினி, ரோகிணி, திருவாதிரை, புனர்பூசம், உத்தரம், சுவாதி, அனுசம், உத்தராடம், திருவோணம், சதயம், உத்தரட்டாதி.

குறிப்பு: இவைகள் பொதுவாகக் கொடுக்கப்பட்டது.

அவரவர் இராசிக்குத் தகுந்தாற்போல் சந்திராஷ்டமம் வராத நாளாக தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். *(தொடரும்)*

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ். பிரதேசத்தில் ஏ9 வீதியில் (புங்கன்குளத்திலிருந்து கச்சேரி நல்லூர் வீதி சந்தி வரை), பாரதி லேன், புங்கன்குளம் வீதி புகையிரத கடவை வரை, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, பேரின்பநாயகம் வீதி, காட்டுக்கந்தோர் வீதி, மாவை கலடடி, கொல்லங்கலட்டி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில பட்டானிச் சூரிலிருந்து பம்பைமடு வரை, நெளுக்குளம் தொழில்நுட்பக்கல்லூரி, தவசிக்குளம் கிராமம், சாளம்பைக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# வடக்கின் மாபெரும் போர் நாளை ஆரம்பம்


சென்.ஜோன்ஸ் கல்லூரி


யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

கிரிக்கெட் ரசிகர்களை யாழ்ப்பாணத்தின் பக்கம் பார்வையை திரும்ப வைக்கும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 112 ஆவது வடக்கின் மாபெரும் போர் நாளை 8 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 9, 10 ஆம் திகதிகளென மூன்று தினங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சென்.தோமஸ் - றோயல் கல்லூரிகளுக்கிடையில் நடைபெறும், நீலங்களின் போர் கிரிக்கெட் போட்டிகளின் பின்னர் நீண்ட வரலாற்று பாரம்பரியத்தைக் கொண்ட போட்டியாக, இந்த வடக்கின் மாபெரும் போர் காணப்படுகின்றது.

**வரலாறும் சாதனைகளும்**

1901 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த கிரிக்கெட் போட்டியானது இன்றைக்கு 111 போட்டிகளைக் கடந்து வந்துள்ளது. தவிர்க்க முடியாத காரணத்தால் சில போட்டிகள் நடைபெறவில்லை.

இதுவரையில் நடைபெற்ற 111 போட்டிகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 36 போட்டிகளிலும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 27 போட்டிகளிலும் வெற்றிபெற்றன. 40 போட்டிகள் சமநிலையிலும், 7 போட்டிகளின் முடிவுகள் தெரியாத நிலையிலும், 1 போட்டி கைவிடப்பட்டும் உள்ளன. கடந்த 111 ஆவது வருடப் போட்டியில், கபில்ராஜின் அகசாயசூர பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் அணி, இனிங்ஸ் 7 ஓட்டங்களால் வெற்றியைப் பெற்றது. 26 வருடங்களின் பின்னர் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி பெற்ற இனிங்ஸ் வெற்றியாக இந்த வெற்றி அமைந்திருந்தது. நீண்ட காலத்துக்கு பின்னர் இரண்டு நாளிலேயே போட்டியானது முடிவடைந்தும் போனது. 1993 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 9 விக்கெட் இழப்புக்கு பெற்ற 354 ஓட்டங்கள் ஒரு இனிங்ஸில் பெற்ற அதிகூடிய ஓட்டமாகவுள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி 1999 ஆம் ஆண்டு 6 விக்கெட் இழப்புக்குப் பெற்ற 326 ஓட்டங்கள் அந்த அணியின் அதிகூடிய ஓட்டங்களாக இருக்கின்றது.

வடக்கின் மாபெரும் சமரில், இதுவரையில் 20 சதங்கள் பெறப்பட்டுள்ளன.

1990 ஆம் ஆண்டு சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரன் எஸ்.சுரேஸ்குமார் பெற்ற 145 ஓட்டங்கள் அதிகூடிய தனிநபர் ஓட்டமாகவுள்ளது.

1951 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வி.சண்முகம் 26 ஓட்டங்கள் 9 விக்கெட்கள் கைப்பற்றியது, இதுவரையில் சிறந்த பந்து வீச்சு பரிதியாக இருக்கின்றது. 1950 ஆம் ஆண்டு சென்.ஜோன்ஸ் கல்லூரியை சேர்ந்த ஈ.ஜி.தேவநாயகம் 33 ஓட்டங்கள் கொடுத்து 9 விக்கெட்கள் கைப்பற்றியமை அந்த அணியின் சிறந்த பந்து வீச்சாகவுள்ளது.

# வெற்றியைத் தக்க வைப்போம்- சென்.ஜோன்ஸ்! வெற்றி பெற்றேயாகுவோம்- யாழ். மத்திய கல்லூரி!

**சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி**

ஏ.டானியல் சுரேந்திரனின் அனுபவமான பயிற்றுவிப்பின் கீழ் சென்.ஜோன்ஸ் அணி பல வெற்றிகளைக் கடந்துள்ளது. அதிலும் கொழும்பு றோயல் கல்லூரிக்கு எதிரான வெற்றியானது மகத்தானது. இலங்கை பூராகவும் அது பேசப்பட்டது. அந்த அணியின் பயிற்றுநர் அணிக்கு மிக்க பலமாகவுள்ளார்.

சென்.ஜோன்ஸ் அணியின் விளையாட்டுப் பொறுப்பாசிரியராக வி.குமணன் உள்ளார். அணியின் தலைவராக வசந்தன் யதுசன் உள்ளார். அவரது தலைமையில், இம்முறை அணி களமிறங்குகின்றது.

**வசந்தன் யதுசன் - அணித்தலைவர்**

அணியின் மிகவும் அனுபவம் மற்றும் திறன் கொண்ட அணித்தலைவர். இடது கை துடுப்பாட்டம் மற்றும் இடது கை சுழற்பந்து வீச்சாளரான இவர் 6 வருடங்கள் அனுபவம் கொண்டவர். சிறி பியரத்ன மகா வித்தியாலய அணிக்கு எதிராக இவ்வருடம் சதமடித்திருந்தார். 19 வயதுப் பிரிவு வடமாகாண அணியின் தலைவராக இருந்தார். 110 ஆவது வடக்கின் மாபெரும் போரில், சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த சகலதுறை ஆட்டக்காரர் விருதுகளைத் தட்டிச் சென்றிருந்தார். 111 ஆவது வடக்கின் மாபெரும் போரில் சிறந்த துடுப்பாட்ட விருதையும் தட்டிச் சென்றார். மேலும் அந்த வருடம் நடைபெற்ற 15 ஆவது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் போட்டியில் சிறப்பாட்டக்காரர் விருதையும் தட்டிச் சென்றார்.

**கனகரட்ணம் கபில்ராஜ் - அணியின் உபதலைவர்**

வலது கை அதிரடி துடுப்பாட்ட வீரர், என்பதை விட வலது கை துல்லியமான வேகப் பந்துவீச்சாளர் என்பதே சாலப்பொருத்தமாகும். இவர் தான் அணியின் உபதலைவர். 5 வருடங்கள் அனுபவம் கொண்டவர். கடந்த 2016 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற தென்னாபிரிக்க 19 வயதுப் பிரிவு அணியுடனான போட்டியில், இலங்கை 19 வயதுப் பிரிவு அணியில் இவர் இடம்பிடித்திருந்தார். 111 ஆவது வடக்கின் மாபெரும் போரின் சிறந்த பந்து வீச்சாளர் மற்றும் சிறப் பாட்டக்காரராகவும் தெரிவு செய்யப்பட்டார். 111 ஆவது வடக்கின் மாபெரும் போரில் சென்.ஜோன்ஸ் வெற்றிபெற காரணமானவர்.

முர்பின் அபிநாஸ், நாகேநதிரராஜா சௌமியன், செல்வகுணாலன் ஜோஜல் பிரவீன், தேவதாஸ்செரோபன், வடிவேல் அலெக்ஸன், சாந்தகுமார் சானுகண, நெய்வேந்திரம் டினோசன்,

யாழ்.மாவட்ட 15 வயதுப் பிரிவு துடுப்பாட்ட அணி மற்றும் பிறிமா கிண்ண, வடமாகாண 15 வயதுப்பிரிவு அணி ஆகியவற்றின் அணித் தலைவர்.

ஜேசுராசா சுபீட்சன் ரிப்பியுஸ், பரராஜசிங்கம் எல்சன் டேனுசன், சிறிகாந்தன் பிரசாந்த், நாகேஸ்வரன் ரதுஸன், மகேந்திரன் கேமதுசாந்த், டேவிட் ஜெநாதன் பிரசன்னா, கிறிஸ்றி பி தனுஜன், ஆனந்தராஜன் யதுசன், சண்முகநாதன் ஜேஜீவன், நெல்சன் நித்தியானந்தன் டிலுக்ஸன், ஜெயதிலகன் மரிய திலக்ஸன்.

**இந்த வருடத்தில் சென்.ஜோன்ஸ் பெற்ற வெற்றிகள்**

கிளிநொச்சி மத்திய கல்லூரியுடன் 7 விக்கெட்களால் வெற்றி.

கொழும்பு றோயல் கல்லூரியுடன் 10 ஓட்டங்களால் வெற்றி.

பாதுக்க சிறி பிரியரத்ன மகா வித்தியாலயத்துடன் 10 விக்கெட்களால் வெற்றி

கண்டி கிங்ஸ்வூட் கல்லூரியுடன் 5 விக்கெட்களால் வெற்றி.

கேகாலை வித்தியாலயத்துடன் 8 விக்கெட்களால் வெற்றி.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியுடன் 287 ஓட்டங்களால் வெற்றி.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியுடன் இனிங்ஸ் மற்றும் 87 ஓட்டங்களால் வெற்றி.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியுடன் இனிங்ஸ் மற்றும் 59 ஓட்டங்களால் வெற்றி.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியுடனான போட்டியில் இனிங்ஸ் மற்றும் 101 ஓட்டங்களால் வெற்றி

**சென்.ஜோன்ஸ் அணி அடைந்த தோல்விகள்**

பாணாந்துறை சிறி சுமங்கல கல்லூரியுடனான போட்டியில், இனிங்ஸ் மற்றும் 30 ஓட்டங்களால் தோல்வி.

களனிய சிறி தர்மலோகக் கல்லூரியுடனான போட்டியில் 6 விக்கெட்களால் தோல்வி.

இதனைத்தவிர, மவுண்டன் லெவனியா சென்.தோமஸ் கல்லூரி, பிலியந்தல மத்திய கல்லூரி, ரத்கம தேவபத்திராஜ மகா வித்தியாலயம் ஆகிய அணிகளுக்கிடையிலான போட்டிகளை சமநிலையில் முடித்துள்ளது.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி அனுபவமும் பொறுமையும் மிக்க, வடக்கின் மாபெரும் போரில் வெற்றி அணிகளை உருவாக்கிய சந்திரமோனதாஸ் சுரேஸ் மோகனின் பயிற்றுவிப்பில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, 4 வருடாங்கள் அனுபவம் கொண்ட சிவலிங்கம் தசோபனின் தலைமையில் களமிறங்குகின்றது.

**சிவலிங்கம் நசோபண் - அணித்தலைவர்**

4 வருடங்கள் அனுபவம் கொண்ட இவர், வலது கை துடுப்பாட்ட வீரரும் ஆவார். கூடவே வலது கை சுழற்பந்து வீச்சாளரும் ஆவார். கண்டி சென்.அன்ரனீஸ் கல்லூரி அணி மற்றும் கண்டி அக்குராண கல்லூரி அணிகளுக்கு எதிரான போட்டியில் சதமடித்திருந்தார். வடமாகாண 19 வயதுப்பிரிவு அணியின் இடம்பிடித்துள்ளார். 111 ஆவது வடக்கின் மாபெரும் போரில் சகலதுறை ஆட்டக்காரருக்கான விருதைத் தட்டிச் சென்றார்.

**சிறிஸ்கந்தராஜா கௌதமன் - அணியின் உப தலைவர்**

4 வருடங்கள் அனுபவம் கொண்ட இவர், ஒரு வலது கை துடுப்பாட்ட வீரர் ஆவார். வடமாகாண துடுப்பாட்ட அணியில் இடம்பிடித்துள்ளார். 109 ஆவது வடக்கின் மாபெரும் போரில் சிறந்த களத்தடுப்பாளருக்கான விருதைப் பெற்றிருந்தார்.

செல்வராசா மதுசன், அன்ரனிதாஸ் ஜெய தர்சன், சுதரசன் துசாந்தன், சூரியகுமார் சுஜன், கமலராஜா இயலரசன், இராஜரத்னம் ராஜ்கிளின்டன், விஜயகாந் விஜஸ்காந்த், சுரேந்திரன் டிலிசியன், சரவணமுத்து நிதர்சன், தீஸன் விதுசன, திருனேலகாந்தசிவம் ஹற்சன்னா, மதீஸ்வரன் ச்ஞ்சயன்.

**திலீப்குமார் கௌதம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி இவ்வருடம் பெற்ற வெற்றிகள்**

கண்டி சிறி சுமங்கல கல்லூரியுடனான போட்டியில், இனிங்ஸ் மற்றும் 32 ஓட்டங்களால் வெற்றி

கண்டி அக்குரண அசார் கல்லூரியுடனான போட்டியில் இனிங்ஸ் மற்றும் 172 ஓட்டங்களால் வெற்றி.

கண்டி நாவல மத்திய மகா வித்தியாலயத்துடன் 167 ஓட்டங்களால் வெற்றி.

தெல்லிப்பழை மகா ஜனாக் கல்லூரியுடனான போட்டியில் 151 ஓட்டங்களால் வெற்றி.

கொக்குவில் இந்துக் கல்லூரி, கண்டி சென்.அன்ரனீஸ் கல்லூரி, டட்லி சேனநாயக்க மத்திய கல்லூரி, மாரவில சென்.சேவியர் கல்லூரி, யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மாத்தளை சென்.தோமஸ் கல்லூரி ஆகிய அணிகளுக்கிடையிலான போட்டிகளை சமநிலையில் முடித்திருந்தது. தவிர எந்த தோல்வியையும் இந்த வருடம் மத்தி எதிர்கொள்ளவில்லை.

கடந்த வருடம் சென்.ஜோன்ஸ் அணிகள் தாங்கள் பெற்ற வெற்றியை தக்க வைக்க வேண்டும் என்பதனைக் குறிக்கோளாகக் கொண்டு இம்முறை களமிறங்குவார்கள். அந்த தோல்விக்கு மருந்து தேடும் வகையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் இம்முறை களமிறங்கும். எது எவ்வாறாயினும் போட்டி மிக மிக சுவாரஸ்யமாக அமையும். ரசிகர்களுக்கு விருந்தைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

- சுரேன்

## அவசர காலச்சட்டம்...

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவினை செயல்வலுப்படுத்தி மட்டுப்படுத்தப்பட்ட எல்லைகளுடன் ஒருவார காலத்திற்கு நாடுபூராகவும் அவசர கால நிலை ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அவசரகால நிலையை பிரகடனப்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்த விடயங்கள் பின்வருமாறு,

1.கடந்த இரு வாரங்களாக இடம்பெற்றுள்ள குழப்பமான மற்றும் சட்ட விரோத செயற்பாடுகள்.

2.அத்தகைய சம்பவங்களினால் ஏற்பட்டுள்ள உயிர் மற்றும் சொத்துக்களின் இழப்பு.

3.அத்தகைய சம்பவங்களினால் இனங்கள் மற்றும் சமயங்களுக்கிடையே குழப்பமான, அமைதியற்ற நிலைமைகள் ஏற்பட்டுள்ளமை.

4.சொத்துக்கள், வணக்கஸ்தலங்கள், போக்குவரத்து வசதிகள் போன்றவற்றிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள தாக்குதல்களினால் ஏற்பட்டுள்ள இழப்புக்கள் .

மேற்கூறப்பட்ட சட்ட-விரோத செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறுதல்.

மேற்படி நிகழ்வுகள் வன்முறை சூழ்நிலையில் கட்டமைக்கப்பட்ட குழுக்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளமை.

இந் நிலைமைகளை சீர்செய்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசிய நடவடிக்கையாக மட்டுப்படுத்தப்பட்ட எல்லைகளுடன் பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் இரண்டாம் பிரிவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, பாதுகாப்பான சூழலை மீண்டும் உறுதிசெய்தல், பொதுமக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதுடன் அத்தியாவசிய தேவைகளையும் சேவைகளையும் வழங்குதல் மற்றும் அமைதி நிலையை ஏற்படுத்தல் போன்ற காரணங்களுக்காக மட்டுப்படுத்தப்பட்ட எல்லைகளுடன் ஒருவார காலத்திற்கு பொதுமக்கள் கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவினை செயல்வலுப்படுத்தி அவசரகால ஒழுங்கு விதியை அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவ்வாறு அவசரகால நிலை அமுல்படுத்தப்படுவதனால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளின் மூலம் தற்போதுள்ள நிலைமைகளை சீர்படுத்த தேவையான சட்ட அதிகாரங்கள் இலங்கை பொலிஸாருக்கும் முப்படையினருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

ஏதேனும் சட்ட விரோத நடவடிக்கைகளோ அல்லது இன மற்றும் சமய ரீதியான அமைதியற்ற சூழ்நிலைகளோ அல்லது அவற்றை ஏற்படுத்தும் நபர்களோ இனங்காணப்படுவார்களாயின் அவர்களது இன, மத அடையாளங்களையோ அல்லது கட்சி, நிற அரசியல் தொடர்புகளையோ கருத்திற்கொள்ளாது பக்கச்சார்பற்ற துரித நடவடிக்கைகளை அவர்களுக்கு எதிராக நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி பாதுகாப்புத் துறையினருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இந்த ஒழுங்கு விதிகளை செயற்படுத்தும் போது அமைதியாகவும் நேர்மையாகவும் மக்களின் நலனிற்கும் அவர்களது அன்றாட வாழ்க்கைக்கும் இடையூறுகள் ஏற்படாத வண்ணம் செயலாற்றுமாறும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறாத வகையில் செயற்படுமாறும் பொலிஸாருக்கும் முப்படையினருக்கும் ஜனாதிபதி விசேட அறிவுறுத்தலை வழங்கியுள்ளார். (ம)

## இனவாதத்தை தூண்டு...

பெற்ற இனங்களுக்கிடையில் வேற்றுமையையும் மோதல்களையும் ஏற்படுத்தும், ஒற்றுமையை சீர்குலைக்கும் மிகவும் கவலைக்குரிய சம்பவங்கள் காரணமாக நாட்டில் ஏற்பட்டிருக்கும் பதற்ற நிலையினைக் கவனத்தில் கொண்டே இன்று நான் இந்த விசேட அறிக்கையினை வெளியிடுகிறேன்.

வரலாற்றுக் காலம்தொட்டே நாம் நமது நாட்டின் உள்நாட்டு மோதல்கள் பற்றியும் பிற ஆக்கிரமிப்புக்கள் பற்றியும் நீண்ட அனுபவத்தை கொண்டிருக்கும் ஒரு இனமாவோம். குறிப்பாக கடந்த பல தசாப்தங்களாக நமது நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம், மலே, பேகர் ஆகிய அனைத்து இனங்களும் சமாதானத்துடனும் ஒற்றுமையுடனும் அமைதியாக வாழ்ந்து வந்தார்கள். 1940களை நோக்கி செல்வோமாயின் பிரித்தானிய ஆட்சியிலிருந்த நமது நாட்டுக்கு விடுதலையைப் பெற்றுக்கொள்வதற்காக சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய அனைத்து இனத்தவர்களும் சகோதரத்துவத்துடன் ஒன்றுபட்டு போராடி தேசிய சுதந்திரத்தை பெற்றுக் கொண்டோம். இருபபினும் பிற்காலத்தில் ஏற்பட்ட இனங்களுக்கிடையிலான மோதல் நிலை எம்மை நீண்டகால யுத்தத்தைநோக்கி இட்டுச் சென்றது மட்டுமல்லாது, அதன் விளைவாக பாரிய அவலங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்ததுடன், நாம் மனம் வருந்தத்தக்க நிலைக்கும் தள்ளப்பட்டோம்.

இருப்பினும் கடந்த மூன்று ஆண்டுகளாக நாம் இந்த நாட்டின் தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் அரசு என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இப்பின்னணியில் கடந்த சில தினங்களாக அம்பாறை, கண்டி ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் உயிர்ச் சேதங்களையும் பொருட் சேதங்களையும் ஏற்படுத்தியிருப்பதுடன் அப்பிரதேசங்களில் ஏற்பட்ட பதற்ற நிலை காரணமாக, நாட்டில், குறிப்பாக மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்படுகின்ற ஒரு சூழல் உருவாகியிருக்கின்றது.

இந்த சம்பவங்கள் காரணமாக உயிரிழப்புக்களுக்கும் பொருள் இழப்புக்களுக்கும் முகம்கொடுத்த அனைத்துக் குடும்பங்களுக்கும் அவர்களது உறவுகளுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன், மேற்கொள்ளப்பட்ட அனைத்து வன்முறைச் சம்பவங்களையும் இச்சந்தர்ப்பத்தில் நான் மிக வன்மையாகக் கண்டிக்கின்றேன். அந்த அசம்பாவிதங்களை கண்டிக்கின்ற அதேவேளை அச்செயல்களில் ஈடுபட்ட தனி மனிதர்கள், அமைப்புக்கள், குழுக்கள் ஆகிய அனைத்து தரப்புக்களுக்கும் எதிராக சட்டத்தினை மிக நேர்த்தியாக செயற்படுத்த வேண்டுமென நான் பொலிஸ் துறைக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறேன்.

அதேபோல் ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலைமையினை சாந்தப்படுத்துவதற்கும், இந்த பதற்ற நிலைமையினை போக்குவதற்கும், அப்பிரதேசங்களில் சமாதானத்தை ஏற்படுத்தி நாட்டின் அனைவரும் சுதந்திரமாகவும், அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு பொலிஸ், விசேட அதிரடிப்படை, இராணுவம் மற்றும் அரச அதிகாரிகள், பிரதேச அரசியல்வாதிகள் ஆகியோரை ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு ஆலோசனை வழங்கியிருக்கிறேன்.

அதேபோன்று ஏற்பட்டிருக்கும் இந்நிலைமையினை கருத்திற்கொண்டு நாம் நமது நாட்டினுள் மிகத் தெளிவாக ஏற்படுத்தவேண்டிய தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் அன்னியோன்னிய புரிந்துணர்வு, இனங்களுக்கிடையிலான நட்பு ஆகியவற்றை மீண்டும கட்டியெழுப்புவதற்கு ஒரு அரசு என்றவகையில் எடுக்கவேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதை நான் இங்கே கூறவிரும்புகிறேன். வணக்கத்துக்குரிய மகாநாயக்கர்கள் உள்ளிட்ட மகா சங்கத்தினரதும், இந்து இஸ்லாம் கிறிஸ்தவ மதத் தலைவர்களினதும் வழிகாட்டலும் பங்களிப்பும் இச்சமயத்தில் மிக முக்கியமாக தேவைப்படுகின்றது என்பதை மிகுந்த கௌரவத்துடன் வலியுறுத்துகின்ற அதேவேளை, பிரதேச அரசியல் தலைமைகளுக்கு இம்மோதல்களை தடுப்பதற்கும், பதற்றத்தினை தணிப்பதற்கும் தேவையான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொடுக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் பொலிஸ், இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படை, நேற்றுமுதல், இன்றும் எதிர்வரும் நாட்களிலும் 24 மணித்தியாலங்களும் தொடர்ச்சியாக செயற்படுவதன் மூலம் இப்பிரதேசங்களில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென நான் ஆலோசனைகளை வழங்கியிருக்கிறேன்.

ஏற்பட்டுள்ள இந்த நிலைமையைப்பற்றி கலந்தாலோசிப்பதற்காக விசேட தேசிய பாதுகாப்பு சபை கூட்டமொன்றை நடத்தி தேவையான தீர்மானங்களை எடுத்திருப்பதுடன், கௌரவ பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையுடன் கலந்தாலோசித்து எதிர்காலத்தக்கு தேவையான முறையான திட்டத்தினையும் வகுத்திருக்கின்றோம். அதனால் அனைவரும் சமாதானத்துடனும் அமைதியாகவும் வாழ முயற்சிக்கும் அதேவேளை, குறிப்பாக, பௌத்த நாடு என்ற வகையில் "குரோதத்தால் குரோதம் தணியாது", "பழிதீர்ப்பதால் பகைமை தீராது" என்ற பௌத்த சிந்தனையை அறிந்தவர்கள் என்றவகையில், எந்தவிதமான துன்புறுத்தல்களிலோ வன்முறைகளிலோ ஈடுபடுவதன் மூலம் எமது நாட்டுக்கே அவப்பெயரும் களங்கமும் ஏற்படும் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

அதேபோன்று இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களைச் சேர்ந்த நம்நாட்டவர்கள் தந்தமது மதங்களின் வழிகாட்டல்களுக்கமைய சமாநானத்துடனும் சகவாழ்வுடனும் வாழ்வதன் மூலம் உருவாக்கப்பட்டிருக்கின்ற இந்த சுதந்திரமான சூழலை மென்மேலும் பலப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை மேலோங்கச் செய்து, நம்நாட்டின் எதிர்கால நடவடிக்கைகளை ஐக்கியத்துடனும் சமாதானத்துடனும் ஒன்றுபட்டு சமாதானமான முறையில் முன்னெடுப்போம் என்ற வேண்டுகோளை விடுக்கின்றேன். நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கும் ஒற்றுமையை பலப்படுத்தவும், இனங்களுக்கிடையில் ஐக்கியம், அமைதி, நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்தவும் ஓர் அரசு என்றவகையில் எடுக்கவேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து, வன்முறையில் ஈடுபடும் தரப்பினருக்கு எதிராக எடுக்கப்படக்கூடிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதை இங்கு நான் கூறிவைக்க விரும்புகிறேன். அத்தோடு பல்வேறு வதந்திகளையும் கட்டுக்கதைகளையும் சமூக ஊடகங்கள், இணையத்தளங்கள், தொலைபேசி ஆகியவற்றின் ஊடாக பரப்பி, மிக மோசமாக மக்கள் மத்தியிலும் நாட்டினுள்ளும் சமாதானத்தை சீர்குலைக்க முயலும் சில தரப்பினர் இருப்பது என்பது தெரிய வந்திருக்கின்றது. அவ்வாறானவர்களுக்கு எதிராக மிக உறுதியான முறையில் சட்டத்தை நடைமுறைப்படுத்தி, அவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுதந்திரமான சுமுகமான சூழலில் மகிழ்ச்சியுடன் வாழக்கூடிய எமது தாய்நாட்டை கட்டியெழுப்புவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் அரசு என்ற வகையிலும் அரச தலைவர் என்ற வகையில் அனைத்து நடவடிக்கைகளும் எடுப்பேன் என்பதை உங்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக இதனை நான் வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்கிறேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# கண்டி, அம்பாறை சம்பவங்களுக்கு அரசாங்கம் வன்மையான கண்டனம்

### தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

இனங்களுக்கிடையிலான சமூக ஒற்றுமையினை சீர்குலைக்கும் வகையில் அம்பாறை, தெல்தெனிய மற்றும் திகன ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்களை அரசாங்கம் வன்மையாக கண்டித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன ஒற்றுமைக்கு பங்கம் விளைவிக்கும் வகையிலும், நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையிலும் சமூக ஊடகங்களின் ஊடாகவும் வலைத்தளங்களின் ஊடாகவும் குரோதத்தை வளர்க்கக்கூடிய தகவல்களை பரப்ப முயற்சிப்பவர்களையும் வன்மையாக கண்டிப்பதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த மூன்று தசாப்தகாலமாக நிலவி வந்த அமைதியற்ற சூழல் மீண்டும் ஏற்படுவதை தவிர்க்க வேண்டும். அதற்காக அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டுமென அவ் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு, நல்லிணக்கத்தை பாதிக்கும் எந்தவொரு நடவடிக்கைக்கு எதிராகவும் சட்டத்தினை பக்கச்சார்பின்றி முழுமையாக அமுல்படுத்துவதற்கு பாதுகாப்புத் தரப்பினர் செயற்பட்டு வருவதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிலையான சமாதானம் மிக்க முற்போக்குத் தன்மையுடனான ஒரு தேசத்தை கட்டியெழுப்புவதற்காக அனைத்து மக்களினதும் ஒத்துழைப்பையும் அரசாங்கம் கோரியுள்ளதோடு, ஒற்றுமை ஊடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளது. (ம)

## கண்டி பாடசாலைகளுக்கு இன்றும் விடுமுறை

(கண்டி)

கண்டி மாவட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் இன்று புதன்கிழமை விடுமுறை வழங்கப்படுவதாக மத்திய மாகாண முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

கண்டி திகனவில் ஏற்பட்ட அசம்பாவிதங்களால் கண்டி மாவட்டம் முழுவதும் இன்று புதன்கிழமை காலை 6 மணிவரை பொலிஸ் ஊடரங்கு போடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கண்டி மாவட்ட பாடசாலைகள் நேற்றும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## ஆயுதம் தாங்கிய...

தூண்டும் வகையில் செயற்படுபவர்களை கைதுசெய்யும் உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த 7 வருடங்களின் பின்னர் முதற்தடவையாக நேற்று அவசர கால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கண்டி தெல்தெனிய பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் இளைஞன் ஒருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து அரசாங்கம் அவசரகால நிலையை பிரகடனப்டுத்தியுள்ளது.

தெல்தெனிய இளைஞனின் மரணத்தின் பின்னர், அதனை அண்டிய திகன மற்றும் பல்லேகல உள்ளிட்ட பல இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதுவரை வெளியான தகவல்களின் பிரகாரம், 37 வீடுகள், 46 கடைகள் மற்றும் 35 வாகனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், வன்முறைகள் இடம்பெற்ற பகுதிகளில் விசேட அதிரடிப்படையினர், ராணுவத்தினர் மற்றும் பெருமளவான பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கண்டி திகன பகுதிக்கு குற்றப்புலனாய்வு பிரிவின் சிறப்புக் குழு ஒன்றை பொலிஸ் மா அதிபர் அனுப்பி வைத்துள்ளார் என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தக் குழு நேற்று செவ்வாய்க்கிழமை காலை திகன பகுதிக்கு சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, முஸ்லிம் மக்களின் வணிக நிலையங்கள், வீடுகள் மற்றும் பள்ளிவாசல் என்பவை மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சிங்களவர் 24 பேரையும் வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ம)

## இன மோதல்கள்...

டாரீஸ் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையர் அனைவருக்கும் அண்மையில் நடந்த இனவாத வன்முறை கவலைக்குரிய விடயம்.

அனைத்து இலங்கையரும், அவநம்பிக்கையையும், வெறுப்பையும் பரப்புவதை சமய, சமூக மற்றும் அரசியல் தலைவர்கள் எதிர்த்து நிற்கவேண்டும் என எதிர்பார்க்கின்றனர் என்று இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டாரீஸ் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அம்பாறை மற்றும் கண்டியில் ஏற்பட்ட சிங்கள - முஸ்லிம் மக்களுக்கு இடையேயான மோதல்களையடுத்தே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். (ம)

## ஜெய்ப்பூர் நிறுவ...

களை ஜோர்தான் நாட்டு இளவரசரும், கண்ணிவெடிகளை தடைசெய்வதற்கான சாசனத்தின் தூதுவருமான மிரெட் ராட் அல் ஹுசைன் வழங்கி வைத்தார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று செவ்வாய்க்கிழமை விஜயம் செய்த ஜோர்தான் நாட்டு இளவரசரும், கண்ணிவெடிகளை தடைசெய்வதற்கான சாசனத்தின் தூதுவருமான மிரெட் ராட் அல் ஹுசைன் யாழ்ப்பாணத்தில் உள்ள ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்திற்கு நேற்று மதியம் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

அந்த விஜயத்தின் போது, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சினால் கண்ணிவெடிகளில் அகப்பட்டு அவயவங்களை இழந்தவர்களுக்கான செயற்கை அவயவங்கள் செய்வதற்காக 1.3 மில்லியன் ரூபாய் நிதியிலான உபகரணங்களை ஜெய்ப்பூர் நிறுவனத்தின் தலைவி வைத்திய நிபுணர் திருமதி கனேசமூர்த்தியிடம் கையளித்தார்.

இந்த உபகரணங்களை ஜோர்தான் நாட்டு இளவரசர் மிரெட் ராட் அல் ஹுசைன் வழங்கி வைத்ததுடன், செயற்கை அவயவங்கள் செய்யும் தொழிற்சாலையினையும் பார்வையிட்டார்.

அதேவேளை, கண்ணிவெடிகளினால் கால்களை, கைகளை இழந்தவர்களுடன் செயற்கை அவயவங்களை பயன்படுத்துவதனால் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றீர்கள், தற்போதைய நிலைமைகள் குறித்தும் கேட்டறிந்துகொண்டார்.

இந்த நிகழ்வில், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மற்றும் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் செந்தில்நந்தனன் உட்பட ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் பணியாளர்கள், பயனாளிகள் என பலர் கலந்துகொண்டனர். (ம-4)

## 9 மாத குழந்தை...

வவுனியா காமினி மகா வித்தியாலயத்திற்கு அண்மையில் வசிக்கும் இளம் குடும்பத்தினரின் ஒன்பது மாத ஆண் குழந்தை ஒன்று திடீர் சுகவீனம் காரணமாக நேற்று காலை வவுனியாவில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. அங்கு வழங்கப்பட்ட பாணி மருந்தை இரண்டு தடவை குழந்தைக்கு வழங்கியுள்ளனர்.

இதனை தொடர்ந்து குழந்தைக்கு அதிக வயிற்றோட்டம் ஏற்பட்டு மீண்டும் அதே தனியார் மருத்துவமனைக்கு குழந்தையை கொண்டு சென்றதும் அங்கிருக்கும் வைத்தியர் தனது கடிதம் ஒன்றுடன் வவுனியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு கூறியுள்ளார்.

பொதுவைத்தியசாலைக்கு குழந்தையை கொண்டு சென்றதும் வைத்தியர்கள் இரத்தப் பரிசோதனை செய்து சிகிச்சை வழங்கிய போதும் குழந்தை சிகிச்சை பலனின்றி பரிதாபமாக மரணித்துள்ளது. (ம-250-281)

## மீண்டும் பொலி...

சட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிமுதல் இன்று புதன்கிழமை காலை 6 மணிவரை அமுலில் இருக்கும் வகையில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அறிவிக்கப்பட்டது.

கண்டி நிர்வாக மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை அமுல்படுத்தப்பட்டிருந்த பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நேற்று காலை 6 மணிக்கு தளர்த்தப்பட்டது.

அதன் பின்னர் திகன மற்றும் பல்லேகல பொலிஸ் பிரிவுகளுக்கு மாத்திரம் பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

எனினும், பிரதேசத்தில் தொடர்ந்தும் பதற்றமான சூழ்நிலை நிலவி வருவதால் கண்டி நிர்வாக மாவட்டத்திற்கு உட்பட்ட சகல பிரதேசங்களுக்கும் பொலிஸ் ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வெகுவிரைவில்...

ஆகியவை அமைதியான சகவாழ்வுக்கு இன்றியமையாதவை.

குறுங்குழுவாத வன்முறைக்கு எதிராக இலங்கை அரசு விரைந்து செயற்பட்டு, மத சிறுபான்மையினரையும், அவர்களது வழிபாட்டிடங்களையும் பாதுகாத்து, அனைவரினதும் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களைக் காப்பாற்றுவதோடு வெகுவிரைவிலேயே நாட்டின் அவசரகால நிலையை முடிவுக்குக் கொண்டு வருவது அவசியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## முஸ்லிம் இளை...

தாக்கப்பட்ட நேரத்தில் தனது தாய், தந்தை மற்றும் சகோதரன் ஆகியோரைக் காப்பாற்றி விட்டு வீட்டிற்குள் சிக்கிய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தகவல் தெரிவிக்கின்றது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது, குறித்த இளைஞர் காயமடைந்ததனால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கலாம் என்று கருதிய பெற்றோர் வைத்தியசாலைகளில் அவரைத் தேடியுள்ளனர் என்றும், பின்னர் வீட்டினுள் நுழைந்து பார்த்த போது மகன் தீயில் வெந்து படுகாயமடைந்த நிலையில் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இளைஞன் கடத்...

பட்டுக் காணாமல் போயுள்ளதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவரது பெற்றோரால் கூறப்படுகின்றது.

தமது மகன் அண்மையில்தான் திருமணம் செய்ததாகவும் கடந்த மாதம் 22-ம் திகதி தமது வீட்டுக்கு வந்துவிட்டு வேலைக்குச் செல்வதாகக் கூறிச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை.

எனினும் அன்றைய தினம் மாலை இறுதியாக அவரது நண்பர் ஒருவரது தொலைபேசியினூடாக தம்முடன் கதைத்ததாகவும் பின்னர் அத்தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பெடுத்தபோது அவ்விலக்கத்திலிருந்து தாம் அழைப்பெடுக்கவில்லை எனக் கூறித் துண்டிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக தாயார் சகாயநாதன் மனோ ரஞ்சிதமலர் என்பவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-281)

## போரா...

கப்படுகின்றது.

தாக்குதல்களுக்குள்ளான பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)


# பதவி வெற்றிடம்

- வெப் மெசின் இயக்குநர் (ஆண்கள்)
- வெப் மெசின் பயிலுநர் (ஆண்கள்)

கல்வித் தகைமை

க.பொ.த சாதாரண தரம் வரை படித்திருத்தல்.

குறிப்பு

தொலைவிடங்களில் இருப்பவர்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு வசதி செய்து கொடுக்கப்படும்.

பொருத்தமானவர்கள் நேரில் வரவும்

பொதுமுகாமையாளர், வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

சைவம், அசைவம்
ஒடியல் கூழ்
பைறட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்
Fried Chickan - Rice & Bites
யாழ் பாடியில்
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK-550/=Kg
கனடா-1050/=Kg
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு: 0768226240
யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

அறிமுகம் - Rs. 250/=
சிக்கன் பிரியாணி
பைறட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்
Fried Chicken - Rice & Bites
யாழ் பாடியில்
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401, மனிக்கூட்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us: cnrworldwideexpress

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
EXPRESS Courier Services
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | வேலணை | சாவகச்சேரி | மீசாலை | முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை

CCTV Technician Course
100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி

Approved Certificate
வேலைவாய்ப்பு உத்தரவாதம்
20th Batch : 17-MAR-2018
Mobile Phone Repairing Course
07.04.2018 முதல் ஆரம்பம்
ICS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள்கோவில் அருகாமையில்)
021-7306000, 076-7013060

பதவிக்கான தேடல்
நீங்கள் O/L தகைமை உடையவரா? எமது Dynamic Holding நிறுவனமானது,தனது புதிய கிளைகளை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இவ்வாண்டு ஆரம்பிக்கவுள்ளது.
- வயதெல்லை 18 - 30
- அனுபவம் அவசியமற்றது.
- தங்குமிடம், உணவு வசதிகள் உண்டு.
தொடர்புகளுக்கு:
0774395501, 0215679001

FLC FRENCH LANGUAGE CENTRE
FRENCH வகுப்புக்கள்
V. ஜெகன் (Trained in France- 2007)
Diploma Classes : DELF A1, A2, B1, B2.
40, பலாலி வீதி, அரியாலை. 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 10.03.18 சனி காலை 10மணி
181, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973 ஆரம்பம் :12.03.18 மாலை 3.30மணி
திருமணம் முடித்து U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம் www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

Techno World
சுன்னாகம் சிவன் கோவில் முன்பாக - DCM
சுன்னாகத்தில் ஆரம்பம்....
A/L தொழில்நுட்ப பிரிவு
பகல் வகுப்புகள் ஆரம்பம்: 08.00am- 12.00pm
2018, 2019, 2020
Day Class
ஆரம்பம் : 08.03.2018
தொடர்புக்கு : 077 017 5346
- பொறியியல் தொழில்நுட்பம்
- உயிர் முறைமைகள் தொழில் நுட்பம்
- தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம்
- மூன்றாவது தெரிவுப் பாடங்கள் அனைத்தும்

பொது உளச்சார்பு பரீட்சைக்கான (Aptitude Test) தயார்படுத்தல் வகுப்பு
08.03.2018 (வியாழன் - 10.30 am)
மொரட்டுவ, ரஜரட்ட, ஊவாவெல்ஸ மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்கானது.
கோலாசிற்றி
234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
0778435224


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.